பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 27 திங்கட்கிழமை (11.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 046

# தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு; மாகாண சபை உறுப்பினர் அங்கம் வகிக்கும் மேல்சபை

## யாழ்.பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

தமிழ் மக்களுக்கு கௌரவமான - நியாயமான அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்படும். மேல்சபை ஒன்று உருவாக்கப் படும். அதில் மாகாணசபை உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமிழில் பேசுகையில் மேலும் கூறியதாவது:

வன்னியில் இருந்து மூன்று லட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டார்கள். தற்போது அவர்களை நாம் மீளக்குடியமர்த்த ஆரம்பித்து அந்தப்பணிகள் சுமுகமாக நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் அகதிகள் யுகம் இனிமேல் இல்லை. தமிழ் மக்கள் எந்த நேரத்திலும் எங்கும் போய் வரலாம். எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இனி அவர்களுக்கு இருக்காது.

விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்யக்கூடிய சூழ்நிலை இப்போது யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. பிள்ளைகளின் எதிர்காலம்தான் இங்குள்ள பெற்றோருக்கு முக்கியம். அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பது எங்கள் பொறுப்பு. அதற்காக வடபகுதி மாணவர்களின் கல்வித்துறையில் நாம் அதிக கவனம் செலுத்துகின்றோம். விவசாயிகளுக்குத் தேவையான நீர்ப்பாசன வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளது. அதற்காக ஆறு ஒன்றை இங்கே



யாழ்.மக்கள் மத்தியில் ஜனாதிபதி......

(24ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் யாழ். விஜயத்தின் போது எதிர்பார்க்கப்பட்ட அறிவிப்பு எதுவும் இல்லை!

## உயர் பாதுகாப்பு வலயம் குறித்தும் குறிப்பிடவில்லை

யாழ்ப்பாணம், ஜனவரி 11

யாழ். குடாநாட்டுக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இங்குள்ள உயர் பாதுகாப்பு வலயத்தைச் சுருக்குதல், இனப்பிரச்சினைக்கான தீர்வு எத்தனங்கள், சிறையிலும் தடுப்புக் காவலிலும் உள்ள கைதிகள் விடுவிப்பு ஆகியவை குறித்தெல்லாம் கோடிகாட்டுவார் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவர் அந்த விடயங்கள் குறித்து வாயே திறக்கவில்லை.

இவ்விடயங்களில் ஜனாதிபதியின் சாதகமான அறிவிப்பை எதிர்பார்த்துக் காத்திருந்த யாழ்ப்பாண மக்கள் இதனால் ஏமாற்றத்தில் மூழ்கினர். (19 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடன் மேடையில் புளொட் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று நண்பகல் நடைபெற்ற ஜனாதிபதியின் கூட்டத்தில் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் கலந்துகொண்டார்.

விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் ஜனாதிபதிக்கு அருகில் அமர்ந்திருந்த (24ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைகள் தீவிரமாகும் ஆபத்து

கொழும்பு, ஜன.11

தேர்தல் வன்முறைகள் அடுத்து வரும் நாள்களில் தீவிரமடையலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதான வேட்பாளர்கள் இருவருக்கும் இடையில் நெருக்கமான போட்டி நிலவுவதால் பதற்றம் அடுத்துவரும் நாள்களில் அதிகரிக்கும் என 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இரு பிரதான வேட்பாளர்களின் ஆதரவாளர்களும் (24ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழருக்கு நல்லதொரு தீர்வைத்தாருங்கள்; இந்தியாவிடம் சம்பந்தன் பகிரங்கக் கோரிக்கை

## யாழ்.நகரில் நடத்தப்பட்ட தமிழரசுக் கட்சி மாநாட்டில் விடுத்தார்

யாழ்ப்பாணம், ஜன 11

இந்தியாவின் நிலைப்பாட்டில் தற்போது மாற்றத்தைக் காண்கிறோம். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற கருத்து இந்தியாவில் வளர்ந்து வருவதை அவதானிக்கிறோம்.

எமது மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு, அவர்களுக்கு நல்லதொரு அரசியல்தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க உதவவேண்டும் என்று எமது மக்கள் சார்பாக இந்தியாவிடம் பகிரங்கமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஓரிரு தினங்களில் புதுடில்லிக்கு எனது நண்பர்கள் சிலருடன் சென்று தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வு தொடர்பாகப் பேச்சு நடத்தவுள்ளேன்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் தமிழரசுக்கட்சியின் தலைவருமான இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் தேசிய மாநாட்டில் சிறப்புரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

(24ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் திரு ஆ. நடராசா அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி ஆறுமுகம் செல்லம்மா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி. (சி/564035) நலன்புரிக் கழக உறுப்பினர்கள்.

மீனாட்சி அம்மன் துணை

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### செல்லையா வீரசிங்கம்

(முன்னாள் முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம், திருநெல்வேலி.)

தோற்றம்
21.10.1926

மறைவு
17.12.2006

திதி-துவாதசி

ஆண்டுகள் மூன்றானதுவே ஆறவில்லை எம் கனத்த உள்ளத்தின்
நினைவுகள் ஆற்றாமையால் வருந்துகிறோம் ஐயா!
பெற்ற எம்மைச் சீர்காண வைத்துலகில் சிறப்பித்த செல்வம் நீர்
எளிமையின் தோற்றம் உன் பண்பு ஏழ்மைக்கு உதவுவது உன் அன்பு
பார் துறந்து எங்குற்றீர் பதறுகிறோம் உமை எண்ணி
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல மீனாட்சி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

198/5 நாவலர்வீதி,
யாழ்ப்பாணம். (சி/564051)
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தாயின் மடியில் — இறைவன் அடியில்

27 ★ 07 ★ 1925 — 12 ★ 12 ★ 2009



### அமரர் சின்னத்துரை அருளம்மா

கடந்த 12.12.2009 ஞாயிற்றுக்கிழமை சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவி அமரர் சின்னத்துரை அருளம்மா அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று 11.01.2010 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போனசத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
460, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயநந்தினி கேதீஸ்வரன் (விஜி)



அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடாகவும், 118, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. விஜயநந்தினி (விஜி) கேதீஸ்வரன் நேற்று (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கேதீஸ்வரனின் அன்பு மனைவியும், குணரட்ணம் (உரிமையாளர் சரஸ்வதி விலாஸ்), காலஞ்சென்ற பூங்காவனம் தம்பதிகளின் அன்பு மகளும், சுபஸ்திகா, சுஜீவன், கஜானி, சஜிசுயன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2010) திங்கட்கிழமை பி.ப 4மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

118, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (93729)
தகவல்:
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

ஆஸ்பத்தரி வீதி,மானிப்பாயைச் சேர்ந்த கணேசரத்தினம் உமாசுதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (822801137V),தொழில் அடையாள அட்டை,சாரதி அனுமதிப்பத்திரம், பணப்பரிமாற்ற அட்டை என்பன07.01.2010 அன்றுமானிப்பாய்க்கும் நவக்கிரி,புத்தூருக்கும் இடையில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கண்ட முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.T.P 0779906456

## தவறிவிட்டது

கடந்த 08.01.2010 அன்று நயினாதீவில் இருந்து பருத்தித்துறை வரும் போது எனது பேஸ் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

சபேசசர்மா பிரசாந்தன்
பன்னைமாப்தி, பருத்தித்துறை.
தொ.பே: 0212264767, 0776679368

## இணைந்த கணிதம் A/L 2012

தனியாகவோ அல்லது குழுக்களாகவோ (Persional OR GroupClasses) தொழில்நுட்பக்கல்லூரியில் பொறிமுறை இயந்திரவியல் பட்டம் பெற்ற ஆசிரியரினால் கற்பிக்கப்படுகின்றது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
ப.சிவபாலன், 160(184), நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு, காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதியில் இருந்து நூறு யார் தூரத்தில், நாச்சிமார் கோயிலடிக்கு அருகாமையில் இரண்டரைப்பரப்புக் காணியுடன் வீடொன்று (சிறிய திருத்தங்கள் செய்ய வேண்டிய நிலையில்) உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
தொ.பே: 0770704293

## தவறிவிட்டது

HERO HONDA 500 - 5863 என்ற இலக்கத்தை உடைய வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், மோட்டார் புத்தகம், வங்கி அடையாள அட்டை கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஆ.யோகராஜா,
இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (93726)

## மலிவு விற்பனை

மின்சார உபகரணங்கள், வீடியோக் கமரா, தளபாடங்கள் முதலியன மிகவும் குறைந்த விலைக்கு விற்பனைக்குண்டு. கிழமைநாள்களில் காலை 10 தொடக்கம் 04 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:
ஜி.ராஜரட்ணம்,
418,நாவலர் வீதி, அரியாலை,
யாழ்ப்பரணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன் சிவபாலன்
அவர்களின் அன்புத் தந்தை

### ஆறுமுகம் பொன்னம்பலம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

2007 உயர்தர நண்பர்கள்,
யாழ். இந்துக்கல்லூரி.
(93718)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர் திரு. பெனடிக்ற் றேமன் கபிரியேல் அவர்களின் தாயார்

### திருமதி பெனடிற் செபஸ்ரியாள் பாக்கியம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளரும்,
சக ஊழியர்களும்,
பிராந்திய காரியாலயம் (வட க்கு)
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

## கண்ணீர் அஞ்சலி

AOMA கராத்தே கழகத்தின் பிரதம ஆசிரியர், பரீட்சகர், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் பெனடிற்றேமன் கபிரியேல் அவர்களின் பாசமிகு தயார்

### திருமதி பெனடிற் செபஸ்ரியாள் பாக்கியம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (93724)
AOMA கராத்தே கழகத்தினர்,
ஆசிரியர்களும், மாணவர்களும்.

## வேலைக்கு ஆள்கள் தேவை

01. சப்ளையர்,
02. பில் கிளார்க்,
03. சமையலாளர்,
04. சமையல் உதவியாளர்,
05. பார்சல் கட்டத் தெரிந்தவர்கள்

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கு ஆள்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
HOTEL ROLEX
(ஹொட்டல் றொலக்ஸ்)
இல: 340, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம். TEL:0779079888
(93717)

## விற்பனைக்கு



டீமா (TEEMA)
பாதணிகளை வாங்கும்
மொத்த வியாபாரிகளுக்கு 25தொடக்கம் 30வீதம் வரை விலைக்கழிவு வழங்கப்படும்.









தரமான உயர்ரக,
கலப்படமில்லாத
மலையகத் தேயிலையும்,
தக்காளி மார்க் (இந்தியா) அப்பளமும்
விற்பனைக்குண்டு
தேயிலை 1கிலோ 450.00ரூபா

### சேவை





யாழ் - கதிர்காமம்,
சிவனொளிபாதம்
யாத்திரை செய்வோருக்கு வாகன, உணவு, தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

**குமரன் மார்க்கட்டிங்,**
தொ.பேசி:- 0773453611

## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம்
### கிராமத் தெரிவு - 2009 கட்டம் - V,II
### மன்னார் மாவட்டம்

உலக வங்கியின் நிதியுதவியுடன் தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது. யுத்தம் காரணமாக வீடுகள் அழிவுற்றதும் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதுமான மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அழிவுற்ற வீடு மீள்நிர்மாண நடவடிக்கைகளுக்காக பின்வரும் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

| இல | கிராம சேவையாளர் பிரிவு | கிராமங்கள் |
|---|---|---|
| 1 | பாலைக்குழி | பாலைக்குழி |
| 2 | | இத்திக்கண்டல் |
| 3 | | சகாய வீதி |
| 4 | | மூங்கில்முறிச்சான் |
| 5 | | இலந்தைவான் |
| 6 | | கப்பித்தான் மோட்டை |
| 7 | | கரம்பைக்குளம் |
| 8 | காத்தான்குளம் | காத்தான்குளம் |
| 9 | | கள்ளியடைஞ்சான் |
| 10 | | சாளம்பைக்குளம் |
| 11 | | கோட்டைக்குளம் |
| 12 | | அச்சடிப்பிட்டி |
| 13 | கன்னாட்டி | கன்னாட்டி |
| 14 | | சாளம்பன் |
| 15 | | நெடுவரம்பு |
| 16 | | வேளாகுளம் |
| 17 | பாலைபெருமாள் கட்டு | குருவில் |
| 18 | | மணல்மோட்டை |
| 19 | | பாலைபெருமாள்கட்டு மேற்கு |
| 20 | | மணிப்புல்குளம் |
| 21 | | பாலைபெருமாள்கட்டு கிராமம் |


இக்கிராமத் தெரிவு தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்கவிரும்புவோர் இன்றிலிருந்து 14 நாள்களுக்குள் தங்களது ஆட்சேபனைகளை எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அ.நிக்களஸ்பிள்ளை
அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம் (சி/564039)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் யாழ்.விஜயத்தின் பதிவுகள்







யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ். நாகவிகாரை, நல்லூர் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றில் வழிபாட்டில் ஈடுபட்டிருப்பதை முதல் வரிசைப் படங்களில் காணலாம்.

நல்லூர் ஆலய முன்றிலில் கூடியிருந்த மக்களைச் சந்திப்பதையும் யாழ்.ஆயர் இல்லத்தில் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையைச் சந்திப்பதையும் புதிய உயர் கல்லூரியில் கூடியிருந்த இளைஞர்களைச் சந்திப்பதையும் இரண்டாம் வரிசைப் படங்களில் காணலாம்.

துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதியுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் ஆலோசகர் எம்.எச்.எம். அஸ்வர், ஐ.தே.கவின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் ஆளுங்கட்சி உறுப்பினருமான எஸ்.பி.திஸநாயக்க, மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் மைதானத்தில் திரண்டிருந்த மக்களையும் மூன்றாம் வரிசையில் உள்ள படங்களில் காணலாம்.

மைதானத்தில் அமைக்கப்பட்ட பந்தலில் மக்கள் கூடியிருப்பதையும், ஜனாதிபதி மஹிந்த, அமைச்சர் டக்ளஸ், எஸ்.பி.திஸநாயக்கா, ஆளுநர் சந்திரசிறி, மாநகர சபை உறுப்பினர் மௌலவி சுபியான் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். *(படங்கள்: அதிரன்)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சரவணை செல்வக்குணச்சந்திரன்



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை செல்வக்குணச்சந்திரன் 07.01.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - சுந்தரி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பன்-தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், ஜேர்மனியில் வசிக்கும் மோகன், செல்வரூபன், முகிந்தன், சகனா, சதீஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாலினி (ஜேர்மனி), தர்சா (ஜேர்மனி), நிறஞ்சனா (அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தருண், அருண், சாதுகா, தாருகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், இராசம்மா மற்றும் தெய்வேந்திரம் (சிறி- ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10 மணியளவில் தீத்தங் குளப்பிள்ளையார் கோயிலடி அச்சுவேலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி வீதி, பத்தமேனி,
அச்சுவேலி. (93708)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி திருநாவுக்கரசு இராசபூபதி



காரைநகர், பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தைச் சந்தியை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு(வேலுடையார் கோபால்) இராசபூபதி நேற்று(10.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்- பூரணம் தம்பதிகளின்மூத்த புதல்வியும் வேலுடையார் -மீனாட்சி தம்பதிகளின் மருமகளும் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், ஆனந்தராசா ( Theeban Travels),ஜெகஜோதி, மகேந்திரன் (லண்டன்), சரோஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சசிகலா, மகேஸ்வரன் (மகேஸ்வரன் களஞ்சியம்,சங்கரத்தைச்சந்தி), மஞ்சுளா (லண்டன்),சிவதாஸ் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் சிவலிங்கராசா (சிவலிங்கம் கடை,துறைமுகம்.) இராசேந்திரம் (நேரக்கணிப்பாளர் மினிபஸ்), தியாகராசா(மினிபஸ் உரிமையாளர்), வையந்திமாலா(வவுனியா),லலிதாதேவி (மாப்பாண ஊரி) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2010)திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அன்னாரின் தற்போதைய வசிப்பிடமான சங்கரத்தைச் சந்தியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரத்தை ,
வட்டுக்கோட்டை. (93720)

தகவல்:
தி.ஆனந்தராசா (மகன்).

## ஏகாம்பரம் சண்முகரத்தினம் (ரத்தினம்)



கல்வியங்காடு, செங்குந்தா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் சண்முகரத்தினம் 07.01.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் ஏகாம்பரம் மற்றும் காலஞ்சென்ற தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், சுந்தரம்மாவின் கணவரும், லதா, பிரதீப், பிரசாத் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பகுமாரின் மாமனாரும், மனீஷின் பேரனும், சண்முகசுந்தரம் (சவூதி), சண்முகராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற புனிதசீலி மற்றும் சண்முகலிங்கம் (சண் வீடியோ) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரன் (முன்னாள் அதிபர், செங்குந்தா, இந்துக் கல்லூரி), மதிவதனா (ரதி), மாலினி, சுகுமாரி (ஆசிரியை, மங்கையற்கரசி ம.வி.) ஆகியோரின் மைத்துனரும், சுஜா, லாவண்யா, சரவணப்பிரியன் ஆகியோரின் சிறிய தந்தையும், லவனின் மாமனாரும், குயிலினா, ரமணா, டிலன், தட்சாயினி, தீபனா, யதார்த்தனி, பதுமிளா, லக்ஸன் ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2010) திங்கட்கிழமை ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். 021 222 9309 (93711)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பஸ்ரியாம்பிள்ளை ஞானம்மா (அல்வின்)



ஊர்காவற்றுறை கிழக்கு வீதியைப் பிறப்பிடமாகவும், வேலணை, சாட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்ரியாம் பிள்ளை ஞானம்மா (அல்வின்) நேற்று (10.01.2010) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் பஸ்ரியாம்பிள்ளை அல்வினின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை, சூசைப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றோஸ்மேரியின் பாசமிகு மைத்துனியும், பசில் அன்ரன் (கொழும்பு), அந்தோனியாப்பிள்ளை தவமணி (கொழும்பு), காலஞ்சென்ற நவரட்ணம் (முன்னாள் நீதி மன்ற ஊழியர்), மற்றும் கத்தரினம்மா சறோ (ஹொலன்ட்), காலஞ்சென்ற மரியதாஸ் மகேந்திரன் மற்றும் ஜோசப் ராஜகாரியர் பவா (ஜேர்மனி), மரியலூசியா மனோன், விஜேந்திரன் (கொழும்பு), காலஞ்சென்ற தேவன் மற்றும் சகாயநாதன் லோகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தயாரும், யூக்கலிஸ்ரா (கொழும்பு), றொபின்சன் (கொழும்பு), ஜேசுமலர் (கொழும்பு), றிச்வே, வசந்தா (கொழும்பு), நஞ்சி (ஜேர்மனி), இரட்ணம், ராணி (கொழும்பு), ஜசிந்தா (ஜேர்மனி), ராதா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.01.2010) செவ்வாய்க்கிழமை பி.ப 3மணிக்கு சாட்டி சிந்தாத்திரைமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டு சாட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலணை. (93715)

தகவல்:
குடும்பத்தினர்.

### தேர்தல் பணியாளருக்கு பயிற்சி வகுப்பு

ஜனாதிபதித் தேர்தலில் வாக்கெடுப்பு நிலையங்களில் கடமையாற்றத் தகுதிபெற்ற கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், வாக்கெடுப்பு எழுதுநர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளத் தவறியவர்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் விசேட பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இதுவரை பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளாதவர்கள் நாளைய பயிற்சி வகுப்பில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் கேட்டுள்ளார். (ஒ-10)

### பருத்தித்துறையில் வீதி புனரமைப்பு

பருத்தித்துறை, கல்லூரி வீதி புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

போக்குவரத்துக்கு சீரற்ற நிலையில் குண்டும்குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்குசுமார் ஐந்து மாதங்களுக்கு முன்னர் கற்கள் பறிக்கப்பட்டிருந்தன. தற்போது இவ்வீதி செப்பனிடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-78)

### வர்த்தக டிப்ளோமா மாணவர்களுக்கு

யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா (HNDC) கற்கை நெறியை 1993ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கற்று இதுவரை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றாத மற்றும் சித்தியடையத் தவறிய மாணவர்களும் நிறுவனத்தில் கற்கை நெறியைத் தொடர்ந்து பரீட்சைக்குத் தோற்ற முடியாதிருந்து தற்போது புதிதாக விடுவிக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் இருந்து வருகை தந்து பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர்கள் அனைவரும் இன்று நிறுவனத்திற்கு சமுகமளித்து தமது விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்ப்பாண உயர்தொழில் நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்கச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர்
## ஆசை குணசிங்கம்

அன்பு காட்டிய அப்பாவே! குடும்பத்தை வழி நடத்திய தலைவனே எம்மை வாழ வைத்த தெய்வமே.
எம்மை விட்டுப்பிரிந்து இன்றுடன் 31நாள்கள் நிறைவு பெறுகின்ற இவ்வேளையில் இன்னும் நம்பமுடியா உம் இழப்பை எண்ணி உம் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தியேட்டரடி,
சங்கானை. (93719)

என்றும் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுத்துரை சின்னத்தங்கச்சி



பலாலி வீதி,உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சின்னத்தங்கச்சி நேற்று (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் மகாலிங்கம், வசந்தாதேவி,அற்புதலிங்கம்,சந்திரலிங்கம், செல்வலிங்கம், வதனா,ஜெயலலிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தங்கப்பிரகாசம்,வசந்தநிதி,புஸ்பமலர்,சந்திரராணி, கேமவதி, மனோகரன்,ரவீந்திரநாதன் ஆகியோரின் அன்பு மாமியாருமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு (மடத்தடி).

தகவல்:
குடும்பத்தினர்.

## பொன்னுத்துரை கந்தசாமி



ஆவரங்காலைப் பிறப்படமாகவும் திருநெல்வேலி, தலங்காவற் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் றஞ்சனாஸ் ரெக்ஸ்ரைலில் பணிபுரிந்து ஜேர்மனி - எசன் நகரில் வாழ்ந்து வந்தவருமான பொன்னுத்துரை கந்தசாமி 06-01-2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை- செல்லாச்சி தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்ற இரத்தினம்- மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கருணாதேவி (ராசா)வின் அன்புக் கணவரும், சுகந்தியின் அன்புத்தந்தையும், கணேசலிங்கத்தின் (குஞ்சன் வசாவிளான் ) அன்புமாமனாரும், நாகம்மா, சுப்பரமணியம் (சிவனடி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அபூர்வசிங்கம், அன்னபூரணம், அருந்தவநாயகி, ஆனந்தவடிவேல், இராஜேஸ்வரி, நவரட்ணம்,சுகிர்தரத்தினம்,சரஸ்வதி பத்மநாதன், சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருஷாந், சுஜீந், விதுசன் ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.01.2010) செவ்வாய்க்கிழமை மதியம் 12.30 மணியிலிருந்து 3 மணி வரை: (FRIEDHOF und KREMATORIUM AM HELLWEG, Am Hellweg. 95, 45279 ESSEN-STEELE எனும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மனைவி: கருணாதேவி(ராசா) 0049201 5097814 (ஜேர்மனி)
மகள்: சுகந்தி 0049201 94660319 (ஜேர்மனி)
சகோதரன்: பொ. சுப்பிரமணியம் (சிவனடி) 0094774389925-(இலங்கை).
பெறாமகள்: ந.நந்லேஸ்வரி 0094774016718 (இலங்கை)
ஈமைக்கிரியைகளுக்கான தொடர்புகளுக்கு:
ந. இராஜேந்திரன்: 00491628788394 (பெறாமகன்)
க.கிருஷாந்: 00491726605318 (பேரன்)

தகவல்:
மனைவி, மகள்,
மருமகன்,
சகோதரர்கள்,
பெறாமக்கள்.

## செல்லையா நாகரத்தினம் (மணி)



117/1, சிவன் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கொட்டடி, 67/7, சீனி வாசகம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நாகரத்தினம் (மணி) நேற்று (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமசாமி- மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், கமலத்தின் அன்புச் சகோதரியும், நீலாவதி, மனோகரன், இராஜேஸ்வரன் (சின்னவன் தேநீர்க்கடை), மகேஸ்வரன், இராஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2010) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 2 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

67/7, சீனி வாசகம் வீதி,
கொட்டடி. (93728)

தகவல்:
மகன் இராஜேஸ்வரன்
(சின்னவன் தேநீர்க் கடை ).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழரசுக் கட்சி தேசிய மாநாட்டில் சம்பந்தன்

# எமது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை எடுத்தோம்

## எந்தத் தீர்வை முன் வைப்பார் என்று மஹிந்த உறுதிமொழி எதுவும் தரவில்லை



யாழ்ப்பாணம், ஜன.11

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பின் நோக்கிச் சென்றுள்ளார். எத்தகைய தீர்வை முன்வைப்பார் என்று அவர் எந்த உறுதி மொழியையும் வழங்கவில்லை.

எமது மக்களை விற்கமாட்டோம் என்று அவருடன் நடந்த பேச்சுக்களில் நாம் உறுதியாகக் கூறி வந்தோம்.

பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவு எமது மக்கள் சார்பாக மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே எடுக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவரின் உரையின் முழுவிவரம் வருமாறு:-

தமிழ்பேசும் மக்கள், அதாவது தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் சரித்திரரீதியாக வடக்கு -கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அது மறுக்கமுடியாத உண்மை.

அந்த அடிப்படையில் அந்த இருமாகாணங்களும் ஒன்றிணைக்கப்பட்டு அதிகாரப் பகிர்வாக நிர்வாக அலகு உருவாக்கப்பட வேண்டும் என்று கருத்து இருந்தது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தமிழர் ஐக்கிய முன்னணி 13 ஆவது அரசியல் சாசனத்தை- திருத்தத்தை- முழுமையாக நிராகரித்தது.

அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், நான் மூவரும் இந்தியாவுடன் இடம்பெற்ற பேச்சுக்களின் தமிழர் ஐக்கிய முன்னணி சார்பில் பங்கு பற்றியவன், என்ற வகையில் ஒரு கடிதத்தை தயாரித்து மூவரும் கையொப்பம் இட்டு திரு.ராஜீவ்காந்திக்கு அனுப்பிவைத்தோம். இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் விவாதங்கள் நடைபெற்றபோது நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்டப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதன்பிறகு அடுத்து அடுத்து வந்த அரசுகள் நடைமுறைப்படுத்தக் கூடிய- நிறைவேற்றக்கூடிய-அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்கு தொடர்ந்து முயற்சிகளில் ஈடுபட்டுவந்தன.

ஜனாதிபதி பிரேமதாஸ அவரது காலத்தில், 1993 ஆம் ஆண்டு மங்கள முனசிங்க தெரிவுக்குழுவினால், ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அந்த ஆவணத்தின்படி, இலங்கையில் மாகாணங்களுக்கு திருத்திய அரசியல் சாசனத்தில் மாநிலங்களுக்கு குறித்த அதிகாரங்களின் அடிப்படையில் அதிகாரங்கள் வகுக்கப்பட வேண்டும் என்ற சிபார்சு பெரும்பான்மை உறுப்பினர்களால் செய்யப்பட்டது.

இந்திய மாநிலங்களில் உள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அதேவிதமான அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. காணி, பொலிஸ் ஆகிய அதிகாரங்கள் வரும் என்று தெரிவிக்கப் பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காலத்தில் 1995 ஆம் ஆண்டு ஆவணி மாதத்திலும் 2000 ஆம் ஆண்டு ஆவணி மாதத்திலும் முன்வைக்கப்பட்ட அரசமைப்பு பிரேரணைகள், பிரேமதாஸ அரசு கொண்டு வந்த யோசனைகளுக்குப் பதிலாக வந்தன.

### சிறந்த பிரேரணை

1998 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட பிரேரணை, இந்திய அரசமைப்புக்கு அப்பால் பல தூரம் சென்றது. அது ஒரு சிறந்த பிரேரணையாக அமைந்தது. அதற்கு நாங்கள் கடுமையாக உழைத்தோம். அந்த விடயத்தில் நீலன் திருச்செல்வம் கடுமையாக உழைத்தார். அதன் பின் ரணில் விக்கிரமசிங்க காலத்தில் 2002 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வெளியிடப்பட்டது ஒஸ்லோ பிரகடனம். ஒஸ்லோப்பிரகடனம், என்னவென்றால், உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் ஒருமித்த நாட்டுக்குள் ஒரு சமஷ்டி அடிப்படையிலான தீர்வுதான் ஆராயப்படும் என்பதாகும்.

அதன் பிறகு தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பெரும்பான்மையான நிபுணர்கள் குழுவினால் 2006 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், இந்தியா ஆகியன அந்தக்காலத்தில் அக்கறை எடுத்தன. அதன் காரணமாக ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அழைக்கப்படவில்லை. 18பேர் கையொப்பம் இட்ட ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதில் 16 பேர் பெரும்பான்மை இனத்தைச் சோர்ந்தவர்கள்.

ஒரு நியாயமான, நடைமுறைப்படுத்தக் கூடிய- நிறைவேற்றக்கூடிய ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்தக் கூடிய வகையில் அந்தச் சிபார்சுகள் அமையவில்லை. அந்தச் சிபார்சை ஜனாதிபதி மஹிந்த ஒரு பக்கத்தில் வைத்து விட்டார். அதை நடைமுறைப்படுத்த அவர் விரும்பவில்லை.

முன்னெடுக்கப்பட்ட சகல விடயங்களும் பயனற்றுப் போய் விட்டன.

### தமிழ் மக்களால் நிராகரிப்பு

பிரேமதாஸ காலத்தில், சந்திரிகா காலத்தில், ரணில் காலத்தில், ஜனாதிபதி மஹிந்த காலத்தில் எடுக்கப்பட்ட சகல முயற்சிக ளையும் தமிழ் மக்கள் நிராகரித்து விட்டார்கள்.

அதற்குப்பதிலாக நடைமுறைப்படுத்தக் கூடிய, நிலை நிறுத்தக்கூடிய ஓர் அரசியல் தீர்வுகாணவேண்டும் என்பதை இந்த முயற்சிகள் தெளிவாக எடுத்துக்காட்டி வந்தன.

துரதிஷ்டவசமாக பெரும்பான்மைக் கட்சிகளிடையே தேசியப்பிரச்சினை சம்பந்தமாக ஒற்றுமைப்பாடு, ஒருமித்த கருத்தை ஏற்படுத்தக் கூடிய கருத்தொற்றுமை இல்லாத

**தமிழரசுக் கட்சி தேசிய மாநாட்டில் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆற்றிய உரையின் முழுவிவரம்**

காரணத்தின் நிமித்தம், தமிழரின் தேசிய பிரச்சினை இழுத்தடிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக தமிழர்கள் மாத்திரம் அல்ல, நாடும் பெரும் அழிவுகளைச் சந்தித்து வருகின்றது. 1994ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்ற தேர்தலில் வடக்கு - கிழக்கில் உள்ள 23 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 22பேர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேரில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என அழைக்கப்படும் பல அரசியல்குழுக்களை சார்ந்ததாக, அதாவது அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ், இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆகியவற்றைச் சேர்ந்தோரே வெற்றிபெற்றனர்.

### வடக்குக் கிழக்கு இணைப்பு துண்டிப்பு

துரதிர்ஷ்டவசமாக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் தமிழ்த் தேசியப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் செயற்பாடு பின்னோக்கிச் சென்றது. சர்வகட்சி மாநாடு அமைப்பது என்று அறிவித்து தான் விரும்பிய பிரகாரம் விரும்பிய கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தினார். ஒருவிதமான இணக்கத் தையும் காணவில்லை. ஏதாவது நடைபெறும் சாத்தியமும் இல்லை. வடக்கு - கிழக்கு இணைப்பும் துண்டிக்கப்பட்டது. துண்டிக்கப்பட்டதற்கான காரணம் உங்களுக்குத் தெரியும். ஜனாதிபதியின் தூண்டுதலின் காரணமாக ஒரு வழக்கு 15வருடங்களுக்குப்பின் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

சாதாரண உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யு கால அவகாசம் உண்டு. ஆனால் இணைப்பு ஏற்பட்டு 18 வருடங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நாடாளுமன்ற சாதாரண சட்டம் மூலம் மாகாண சபை களை இணைக்கலாம் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் மஹிந்த அந்தச் சட் டத்தைக் கொண்டுவர முயற்சி எடுக்காம லேயே இணைப்பை ரத்துச் செய்தார்.

### மன்மோகன் சிங்கை சந்தித்த போது...

அதன் பின்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்த போது, வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றிப் பேசினோம். இணைப்பை ரத்துச்செய்ய அனுமதிக்க மாட்டோம் என்று உறுதிமொழி கூறினார். ஆனால் மஹிந்த தான் நினைத்ததைச் செய்து முடித்துவிட்டார்.

எம்மைப் பொறுத்தவரையில் நியாயமான அரசியல் தீர்வு, வடக்கு - கிழக்கு இணைப்பு ஆகியன அடிப்படையாக அமைய வேண்டும். தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் கருத்தைக் கேட்க வேண்டும். வேறு எவருக்கும் நாங்கள் பாதகம் செய்யவேண்டியதில்லை. ஆனால் தமிழ் பேசும் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் ஏற்புடைய மாதிரி வடக்கு - கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடு.

தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கு நிலைத்து நிற்கக் கூடியதாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் அமையும் எந்த அரசியல் தீர்வும் பிற்குறிப்பிட்ட அடிப்படையில் அமைய வேண்டும்.

01. தமிழ் மக்கள் தேசிய இனம்.

02. தமிழ் பேசும், தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சரித்திர ரீதியாக இந் நாட் டின் வடக்கு - கிழக்குப் பகுதியில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இந்த மக்களுக்கு சுய நிர் ணய உரிமை உண்டு.

இது கற்பனையில் எழுந்த விடயம் அல்ல. ஐ.நாவின் சாசனங்களில் சமூக, பொருளாதார, கலாசார விழுமியங்கள் சம்பந்தமாக உருவாக்கப்பட்டுள்ள அரசியல் சாசனத்தில் இவை அடங்கியிருக்கின்றன. மக்களுக்கு இந்த உரிமைகள் உண்டு. சொந்த மண் உண்டு, சொந்த கலாசாரம் உண்டு, சொந்தப் பாரம்பரியம் உண்டு. சகலதையும் அடைவதற்கு உரித்து உண்டு. இதை எவரும் மறுக்க முடியாது.

இந்த அடிப்படையில் மக்களுக்கு தமது அரசியல், சமூக, கலாசார, பொருளாதார, அபிலாஷைகளை அடைவ தற்கு சர்வதேச சட்டங்களின் முழு உரிமை யும், சுதந்திரமும் உரித்தாகும்.

இதை நாம் இரந்து கேட்கவில்லை. இந்த நாட் டுக்குள் சட்டத்தின்படி சர்வதேச சட்டத் தின்படி எமக்குள்ள உரிமைகளைத் தாருங் கள் என்றுதான் கேட்கிறோம்.

தமிழ் பேசும் மக்களின், தமிழ் மக்களின், முஸ்லிம் மக்களின் அரசியல் தீர்வு இதுவாகவே இருக்கும். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இந்த இலக்கை அடைவதற்கு வேறு எந்த இனத்துக்கும் பாதகத்தை ஏற்படுத்தாமல் ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும்.

### இனி வழிபிறக்கலாம்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் ஊடாகவும் நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் ஊடாகவும் ஒரு வழி பிறக்கலாம்.

ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முடிவை தமிழ் பேசும் மக்களுக்கும், தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் அறிவித்திருக்கின்றோம். அதை பத்திரிகைகளில் பார்த்து அறிந்திருப்பீர்கள். அதைப்பற்றி முழுமையாக இங்கு கூற வேண்டிய அவசியமில்லை எனக்கருகின்றேன்.

இது தொடர்பாக கவனமாக ஆராய்ந்தே முடிவு எடுத்திருக்கிறோம். எமது நாடாளுமன்றக்குழு பல தடவைகள் கூடி ஆராய்ந் தது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பாக புத்திஜீவிகள், மூத்த பிரஜைகள், மாணவர்கள், சமயத் தலைவர்கள், பொது மக்கள் எனப் பல தரப்பினரின் கருத்தை அறிந்த பின்னர்-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் எதிர்க்கட்சி வேட்பாளர் சரத் பொன்சேகா மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடனும் மூன்று தடவைகள் பேச்சுக்கள் நடத்திய பின்னர் -

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 4 வருட காலமாக நாட்டை ஆட்சி செய்துவந்த போது தமிழ் மக்கள் வாழ்வு சீராக அமையவில்லை என்பதை ஆராய்ந்த பின்னர்-

எதிர்க்கட்சி வேட்பாளர் சரத் பொன்சேகாவை தமிழ் மக்கள் ஆதரிப்பது என முடிவு செய்தோம்.

எமது முடிவு தொடர்பான அறிக்கை வெளிவந்த பின்னர் தமிழ் மக்களுக்கு சில சலுகைகளைக் கொடுப்பதாக அறிவிப்புக்களை ஜனாதிபதி அறிவிக்கிறார். அதிஉயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக அறிவிப்பு ஒன்றை விடுக்க இருக்கிறார் எனக் கூறப்படுகிறது. ஆனால் இவையெல்லாம் எமது முடிவு அறிவிக்கப்பட்ட பின்பே நடக்கின்றன.

### மஹிந்தவுடன் 3 மணி நேரம்...

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை முதல் தடவையாகச் சந்தித்தபோது நானும் அவரும் மட்டும் பங்கு பற்றும் பேச்சாக அமைந்தது. மூன்று மணி நேரம் பேசினேன். ஒவ்வொரு விடயமாக எடுத்துக் கூறினேன்.

வன்னியில் வாழ்ந்த எமது தமிழ் மக்கள் கௌரவமாக வாழவில்லை. அன்பாக, மரியாதையாக தமது சொந்த நிலங்களில்- சொந்த வீடுகளில்- சொந்த தொழிலைச் செய்து சம்பாதித்து வாழ்ந்தவர்கள். அவர்களை முகாம்களில் அடைத்து வைத்துள்ளீர்கள். அவர்கள் அங்கு மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் என்று அவரிடம் கேட்டேன்.

அந்த மக்கள் அனுபவிக்கும் அவலங்கள் குறித்து சர்வதேச நிறுவனங்களுக்கு எடுத்துக் கூறி அவர்களுக்கு விடிவு ஏற்பட உதவ வேண்டும் என்று கோரினோம். நாடாளுமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தோம்.

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாது கடந்த 20வருடங்களாக அவலப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கூட தனது வீட்டுக்குச்செல்ல முடியாதநிலையில் உள்ளார்.

புலிகளின் ஏவுகணைகள் பலாலி விமானத் தளத்தைத் தாக்கும் என்று முன்னர் கூறி மீளக்குடியமர்வை ஆரம்பிக்க மறுத்தார்கள். இப்போது ஏவுகணை அச்சமுமில்லை. துப்பாக்கிச்சத்தமும் இல்லை. போர் முடிந்து விட்டதாக கூறிக்கொண்டு இன்னமும் ஏன் அதி உயர்பாதுகாப்பு வலயங்களை வைத்திருக்கிறீர்கள் என ஜனாதிபதியிடம் கேட்டேன்.

### காணிகள் அபகரிப்பு

இங்கு மீள்குடியமர்வை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஆரம்பித்து நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் முடிக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கேட் டேன். ஜனாதிபதித் தேர்தலும், நாடாளு மன்றத் தேர்தலும் முடிந்த பின்னர் படிப்படியாக அவற்றைச் செய்வதாக ஜனாதிபதி என்னிடம் கூறினார்.

இராணுவக்குடியேற்றம் பற்றிப்பேசினேன், இராணுவ மயமாக்கல் பற்றிப்பேசினேன். வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கும் செயல்கள் அதிகரித்துள்ளமை குறித்தும் ஜனாதிபதியுடன் பேசினோம்.

ஏ-9 பாதையில் இரு மருங்கிலும் கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் காணி அபகரிப்பு இன்றைக்கு நடக்கிறது. பொலிஸ் நிலையத்துக்கு 50ஏக்கர் காணி, இராணுவ முகாமுக்கு 500ஏக்கர் காணி என அபகரிக்கப்படுகின்றது. பொலிஸ் நிலையம் அமைக்க இரண்டு ஏக்கர் போதாதா?.

அரசியல்தீர்வு விடயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பின்னோக்கிச் சென்றுள்ளார். அரசியல் தீர்வு தொடர்பான விவகாரத்தை இப்போதும் செய்வோம். பின்பும் செய்வோம் என்று அவர் கூறினார். எத்தகைய தீர்வு என்பது குறித்து பதில் ஏதும் தரவில்லை.

அதைப்பற்றி நீங்களும் நானும் பேசுவோம். பரிசீலித்து முடிவுசெய்வோம் என்றார். ஆனால் எந்த உறுதியான பதிலும் இல்லை.

இந்த விடயங்கள் தொடர்பாக நாங்கள் விரிவாக ஆராய்ந்து முடிவுசெய்தோம். எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை இயன்றளவு பாதுகாக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம்.

### எங்கள் முடிவுக்கு வரவேற்பு

இந்த முடிவை எடுத்த பின்னர் யாழ்ப்பாணத்துக்குத்தான் முதல் வந்தேன். இங்கு சந்தித்த பலரும் ஐயா திடமான முடிவை எடுத்திருக்கிறீர்கள் என்று மகிழ்ச்சி தெரிவித்து அந்த முடிவை முழுமையாக ஏற்றுக் கொள்கின்றோம் என்றனர்.

இளைஞர்கள், யுவதிகள் கூட இந்த முடிவை வரவேற்று எம் பின்னால் அணிதிரள முன் வந்துள்ளனர்.

சரத்பொன்சேகாவை இரண்டாவது தடவை சந்தித்த போது அடுத்த பேச்சில் ரணிலும் இருக்க வேண்டும். நானும் மூத்த தலைவர்களைக் கூட்டிவருவேன் என்று தெரிவித்தேன்.

மாவை. சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் என்னுடன் வந்தனர். பல மணி நேரம் பேசினோம். இதுவரை அவர்களுக்கு கூறி வந்தது என்னவென்றால், எமது மக்களை நாங்கள் விற்கமாட்டோம் என்று. அதில் நாங்கள் மிக உறுதியாக இருக்கிறோம். நாங்கள் தனித்துவம் வாய்ந்த மக்கள்- தனி அந்தஸ்து உள்ள மக்கள்- இந்த நாட்டில் உரிமைகளை உடையவர்கள். ஓர் அரசியல் அந்தஸ்தை அடைவதற்கு உரித்து உடையவர்கள். இன்று அவர்கள் எல்லாவற்றையும் இழந்து எங்கள் மீது சிறு நம்பிக்கையை வைத்துள்ளார்கள். எங்கள் மீது பெரும் நம்பிக்கை என்று கூறவில்லை. சிறிதளவு நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்களின் நம்பிக்கையை நாங்கள் இழக்க மாட்டோம் என்று பேச்சில் கூறினோம்.

மூன்றாம் முறை ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திய போது, உங்களுடன் மட்டும் தான் பேச்சு நடத்துவேன். அதன் மூலம் தீர்வு காணலாம் என்று கூறினார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தந்தை அமரர் திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் இறுதி நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள்.
விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தந்தை அமரர் திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திய தொல்.திருமாவளவன், அமரரின் துணைவியாருக்கு ஆறுதல் கூறுவதையும், இறுதிக்கிரியைகளின் பின்னர் பேழையை ஊறணி மயானத்துக்கு எடுத்துச்செல்வதையும், மயானத்தில் வைத்திய கலாநிதி எஸ்.மயிலேறும்பெருமாள் இறுதி விடையளிப்பதையும் முதல் வரிசைப் படங்களில் காணலாம்.
இரண்டாம் வரிசைப் படங்களில் அமரரின் பூதவுடலுக்கு அவரது பெறாமகன் சபாரத்தினம் ராமசாமி கொள்ளிக் குடத்துடன் வலம் வருவதையும், இறுதி நிகழ்வில் பெரும் திரளான மக்கள் கூடியிருப்பதையும், தொல் திருமாவளவன் இரங்கல்உரை நிகழ்த்துவதையும் காணலாம்.
மூன்றாம் வரிசைப் படங்களில் சிவாஜிலிங்கம் எம்.பி., தொல்.திருமாவளவன், கனடா வானொலி ஒலிபரப்பாளர் ரமேஸ் அமர்ந்திருப்பதையும், சிதைக்குத் தீமூட்டப்படுவதையும், ஜனாதிபதி வேட்பாளரான விக்கிரமபாகு கருணாரத்னவின் சார்பாகச் ஜனாப் பரீத் அஞ்சலி உரை நிகழ்த்துதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

# பிரபாவின் தந்தையின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் பங்குபற்றினர்

கரவெட்டி, ஜன 11

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக் கணக்கான பொதுமக்களும் அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இவரது மறைவையடுத்து வல்வெட்டித்துறை முழுவதுமே சோகத்தில் மூழ்கியது. நேற்று முன்தினம் சனிக்கிழமை கொண்டு வரப்பட்ட அவரது பூதவுடலுக்கு அரசியல் பிரமுகர்கள், தமிழ்த் தேசியக்கூட்டமைப் பினர், புளொட் அமைப்பினர், கொழும்பி லிருந்து வந்த இடதுசாரி ஐக்கிய முன்னணி மற்றும் சோசலிசக்கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவள வனும் நேற்று நடைபெற்ற இறுதிக்கிரியை களில் கலந்து கொண்டனர்.

வல்வைப்பிரதேசத்தின் வர்த்தக நிலை யங்கள், விளையாட்டுக்கழகங்கள், சனசமூக நிலையங்கள், பொது நிறுவனங்கள் என்பன வற்றில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட் டிருந்ததுடன் பொது நிறுவனங்களின் கொடிகளும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட் டிருந்தன.

பன்னிருவர் நினைவரங்கில் இருந்து வல்வை ஆலடி, வல்வை உதயசூரியன் கடற்கரை வீதி, வல்வைச் சந்தி, வேம்படி, நெடியகாடு ஊடாக ஊறணி மயானம் வரை பயணித்த அவரின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சோகம் ததும்ப கலந்து கொண்டனர்.

திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டன.

வைத்திய அதிகாரி எஸ். மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெற்ற இறுதி நிகழ்வுகளில் கஜேந்திரன் (நா.உ), தொல் திருமாவளவன், ஜனாதிபதி வேட்பாளர் விக்ரமபாகு கருணாரட்ணவின் பிரதிநிதி பரீத், வல்வை ஒன்றியத் தலைவர் எஸ்.தங்க வேல், எம்.கே.சிவாஜிலிங்கம் (நா.உ) உட் பட [illegible] கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இது தவிர பழ.நெடுமாறன், வை.கோ, சீமான் ஆகியோர் நேரடியாக இணைய அலை வரிசை மூலம் அஞ்சலி உரை நிகழ்த்தினர். அமரரின் சிதைக்கு அவரது பெறாமகனான சபாரத்தினம் ராமசலி (அப்பர்) தீ மூட்டினார்.

நேற்றைய நிகழ்வுகள் லண்டன், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு நேரடி ஒலிபரப்புச் செய்யப்பட்டது. (அ-78)

## மரண அறிவித்தல்

### பொன்னர் சுப்பிரமணியம்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், குமாரபுரம், பரந்தனை வதிவிடமாகவும், தற்சமயம் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட பொன்னர் சுப்பிரமணியம் நேற்று (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர்- நாகமுத்து தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பராசக்தியின் பாசமிகு கணவரும், வீரவாகு, இராசரத்தினம், காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, சின்னம்மா, மார்க்கண்டு, சோமசுந்தரம், சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தங்கம்மா, கிருஷ்ணசாமி, சங்கரலிங்கம், தருமலிங்கம், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், கணபதிப்பிள்ளை, மனோன்மணி, செல்லம்மா, கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், நித்தியலெட்சுமி (லண்டன்), தியாகேசன் (இத்தாலி), பாக்கியலட்சுமி (இத்தாலி), வாகீசன் (டென்மார்க்), விஜயலட்சுமி (பிரான்ஸ்), ரமேசன் (கனடா), காலஞ்சென்றவர்களான தவயோக லெட்சுமி, சகுந்தலாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கராசா, ஜெயகாந்தன், கேசவராணி, வசந்தகுமார், நிரஞ்சினி, இராசேந்திரன், கிரிசாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பிரகாஷ் மற்றும் பிரகாமி, பிரதீப், பிரியங்கன், சங்கீதா, சிந்துஷன், விதுஷன், அபிராமி, பூரணி, வேணுஷன், வியந்தன், வலோந்தன், சத்திய பாமா, அபிராம், அபிந்தனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, நல்லூர்.
தொ.பே:021 3008421

தகவல்:
தங்கராசா (மருமகன்)

## மரண அறிவித்தல்

### சந்தியாப்பிள்ளை இராசையா



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப் பிள்ளை இராசையா நேற்று (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை தனது 101 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வஸ்தியாம் பிள்ளை- மரியமுத்து ஆகியோரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற மரியமுத்துவின் அன்புக் கணவரும், அக்கினேஸ் மங்களம், அன்ரன் செல்வராசா (மொடேன் புத்தக சாலை), மேரிபிலோமினா (ஜேர்மனி), அருட்சகோதரி யோசப்பின் (தி.கு, அதிபர்-இரம்பைக்குளம் மகளிர் ம.வி, வவுனியா), மேரிஎம்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், பற்றிக்துரை ராசா, மாகிறட் மெலனி, பற்றிக் யோகராஜன் (ஜேர்மனி), மனோகரன் ஆகியோரின் மாமனாரும், ஜோய் (அமெரிக்கா), பேட்டி (பிரான்ஸ்), டிலானி (UK), யோயல், டனி, பவன்ராஜ், பால்ராஜ் (ஜேர்மனி), டானியல் (ஜேர்மனி), சோபினி, ஜேம்ஸ்கரன், எசாந்தியா, றூலின், அருட்சகோதரி திரேஸ் (அன்புப்பணியாளர்) ஆகியோரின் பாசமிகு பேரனும், அருட் தந்தை மங்களராஜா, அருட்சகோதரிகள் யோலண்ட் (தி.கு, மாகாணத் தலைவி), மாறியூடித் (அ.கா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை செவ்வாயக்கிழமை (12.01.2010) காலை 10 மணிக்கு தூய பரலோக அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்ரன் செல்வராசா (மகன்)
(மொடேன் ஸ்டோஸ்-நெல்லியடி)


கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழரசுக் கட்சியின் 60 ஆவது தேசிய மாநாட்டின் [illegible]திகளின்போது













இலங்கை தமிழரசுக்கட்சியின் 60 ஆவது தேசிய மாநாட்டில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

தமிழரசுக் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கட்சிக் கொடியேற்றுவதையும் சம்பந்தனுக்கு மாலை அணிவித்து வரவேற்பதையும் முதலிரு படங்களிலும் காணலாம்.

விழாவில் மங்கல விளக்கினை சம்பந்தன், கட்சியின் பொதுச்செயலாளர் மாவை. சேனாதிராஜா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சூ.சிறில், சுரேஷ்பிரேமச்சந்திரன், துரைரட்ணசிங்கம் ஆகியோர் ஏற்றிவைப்பதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

விருந்தினர்கள் தமிழ்த் தாய் வாழ்த்து ஒலிக்கும் போது எழுந்து நிற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள மூன்று படங்களிலும்காணலாம்.

தமிழரசுக்கட்சியின் இரா.சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம், தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா ஆகியோர் உரையாற்றுவதை இறுதி ஐந்து படங்களிலும் காணலாம்.

*(படங்கள்: பிரபா, உமா, தமிழினியன்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Vacancy
## Post of Receptionist cum Administrative Assistant

We are looking for a young lady with pleasing manners to join us as a Receptionist cum Administrative Assistant.

**Essential qualifications:**
* Pass in the G.C.E. (A/L) examination with English as a subject.
* Fluecy in English and Tamil and a knowledge of Sinhala is preferred.
* Good computer skills.

**Please Note:**
* Closing date of applications will be 21st January 2010
* The above position would be initially for a period of 1 year with 6 months probation.
* Candidates who do not possess the required qualifications are advised to refrain from making applications.
* Only shortlisted candidates will be called for the interview.
* Canvessing will be treated as a disqualification.
* Please submit your CV along withan essay of not less than 300 words as to how you will fit in the above post.

District Director
Sewa Lanka Foundation,
# 250, Temple Road, Nallur, Jaffna.
Fax: 021 2229850 email: Jaffna @ sewalanka. org



## கண்ணீர்க் காணிக்கை

**அமரர் வேலாயுதர் பாராளன்**

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் - சாவகச்சேரி கல்வி வலயம், முன்னாள் தலைவர் - கைதடி வடக்கு செவின் ஸ்ரார் விளையாட்டு கழகம்)



அவர்கள் (05.01.2010) செவ்வாய்க்கிழமை திடீரென மறைந்த செய்தி கேட்டு மிகவும் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடி வடக்கு,
கைதடி. (93629)

செவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக நிர்வாகத்தினரும், கைதடி வடக்கு மக்களும்.



## கண்ணீர் காணிக்கை



எமது நிலையத்தின் ஆயுட்கால உறுப்பினரும் யாழ்.பெரிய புலம் மகாவித்தியாலய அதிபருமான **சி.இராமலிங்கம்** அவர்களின் அன்புத் தந்தையும் எமது நல்லூர் தெற்கு கிராம உத்தியோகத்தரரான

**திருமதி இராகினி இராமலிங்கம்**

அவர்களின் அன்பு மாமனாருமான

**அமரர் நாகரிவாயம் சின்னத்துரை**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவர்தம் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!ஓம் சாந்தி!!ஓம் சாந்தி!!!

75/02, செட்டித் தெரு,
நல்லூர். (93638)

நல்லூர் வாழ் மக்கள் சார்பில்,
நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினரும்,
கிராம அபிவிருத்தி சங்கத்தினரும்.



## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க அங்கத்தவரும் சுன்னாகம் மின்சார நிலைய மின் அத்தியட்சகருமாகிய

**இராசேந்திரம் விஜயகுமார்**
(கண்ணன்)

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த துயர் அடைகின்றோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்க ளைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம்.

(சி/564016)



## மரண அறிவித்தல்

**கிறிஸ்ரிமேரி சரோஜா ஜெயராணி**



களபாவோடை, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்ரி மேரி சரோஜா ஜெயராணி கடந்த (09.01.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் - தங்கரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற அருளானந்தம் கிறிஸ்ரி (காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர்) யின் அன்பு மனைவியும் தனஞ்ஜெயன் (லண்டன்), தயாபரன் (ஆசிரியர், யா/புனித பத்திரிசியார் கல்லூரி), வாசுகி (கொழும்பு), தயாளஜெயன் (ஆசிரியர், யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), யசோதரா (வலி.வடக்கு பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தாயும் இன்பமலர், ஞானசவுந்தரி, கிறேசியன் (கட் டார்), நர்மதா, றோய் ஆகியோரின் அன்பு மாமியும் பிரவீன், அடோனியா, அமிர்தா, ஆரணி, நிரூபன், றோயல், தாரணி, அரவிந்தன், சௌமியா, ஓவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அந்திரேசா, ஜெயச்சந்திரன் (கனடா) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் நாளை (12.01.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் ஏழாலை புனித இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

களபாவோடை,
ஏழாலை. (93701)

தகவல்:
குடும்பத்தினர்.


## 'ஷெல் காஸ்' அதிகரித்த விலையில் விற்பனை

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்.குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் எரிவாயு 'ஷெல் காஸ்' மிகவும் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பாவனையாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

'ஷெல்' எரிவாயுவின் கொழும்பு விலை 1,600 ரூபா என்ற போதிலும் இங்கு 2 ஆயிரம் ரூபாவில் இருந்து 2ஆயிரத்து 250 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

முன்னர் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட போது விற்பனை செய்யப்பட்ட அதே விலைகளிலேயே தற்போதும் 'ஷெல் காஸ்' விற்பனையாவது குறித்து பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

ஏ-9 வீதி திறக்கப்பட்டு தாராளமாக வந்து கொண்டிருக்கும் பொருள்கள் இந்தக் கால கட்டத்திலும் இந்த விலை அதிகரிப்பு நியாயமா என்று அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர். (ஒ-6-86)

## மந்துவில் வாசிகள் இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஜன.11

அனுமதிப் பத்திரமின்றி (லைசென்ஸ்) அரச சாராயம் வைத்திருந்த மந்துவில் மேற்கைச் சேர்ந்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் மந்துவில் மேற்கைச் சேர்ந்த இருவருக்கு எதிராக அனு மதிப் பத்திரமின்றி அரச சாராயம் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டி சாவகச்சேரி நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்குகள் செவ்வாயன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழங்குகளை விசாரித்த நீதிவான் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா ஒரு வருடம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

இவர்களில் ஒருவர் ஏற்கனவே நீதிமன்றில் இவ்வாறான வழக்கொன்றில் அபராதம் செலுத்தியவர் என நீதிவானின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து அந் நபருக்கு பத்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஒ-207)

## சுதேச வைத்தியசாலையில் சுறு சுறுப்பான சேவை

வண்ணை,ஜன.11

கைதடி, சுதேச வைத்தியசாலை வட்டாரங்கள் இப்பொழுது சுறு சுறுப்படைந்து காணப்படுகிறது.

தினமும் நூற்றுக் கணக்கான நோயாளர்கள் வருகை தருவதும், நோயாளர் விடுதிகளில் 50துக்கும் அதிகமான ஆண், பெண் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருவதால் அவர்களைப் பார்வையிடச் செல்பவர்களுமாக மக்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

மேலும் பிரசவ விடுதி ஒன்றும் இயங்கி வருவதால் நாவற்குழிக்கு அப்பால் சாவகச்சேரி வரையான பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் மகப்பேற்று காரியங்களைச் சிரமமின்றி நிறைவேற்றவும் கைதடி சுதேச வைத்தியசாலையை நாடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் வயோதிபர், சிறுவர், கர்ப்பிணிப் பெண்களுக்கான விசேட வைத்திய சிகிச்சைகள் அதற்கு தகுதி வாய்ந்த மருத்துவர்களைக் கொண்டு நடத்தி வருவதாலும் அந்தந்த நாள்களில் மக்கள் கூட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் கைதடி, சித்தி ஆயுள்வேத போதனாவைத்தியசாலை புதுக்களை பெற்றுக் காணப்படுகிறது. (160)

## வடிகால் மூடிகள் பழுதடைந்துள்ளதால் விபத்து ஏற்படும் அபாயம்

வண்ணை,ஜன.11

யாழ். நகரின் மையப்பகுதி வீதிகள் பலவற்றில் அமைந்துள்ள வடிகால் மூடிகள் சேதமடைந்து காணப்படுவதால் விபத்துகள் ஏற்படும் ஆபத்து தோன்றியுள்ளது.

தற்பொழுது ஏற்பட்டிருக்கும் நெரிசல் காரணமாக போக்குவரவில் ஈடுபட்டிருக்கும் வாகனங்கள் [illegible]த்துக்குள் சிக்கும் அபாயம் இருந்து வரு[illegible]து.

யாழ்.ஆஸ்பத்[illegible]ரி வீதியில் இரண்டு இடங்களிலும் ஸ்ரான்லி வீதியில் இலங்கை வங்கி முன்பாகவும் இத்தகைய அபாய அறி குறிகள் காணப்படுகின்றன.

அநேகமாக இடது பக்கமாக வீதிகளின் [illegible] மேற்குறிப்பிட்ட வடிகால் மூடி சேதங்கள் ஏற்பட்டிருப்பது சுட்டிக் காட்டப்படுகிறது. (160)

## கூட்டுறவுச் சங்கத்தில் எரிபொருள் விற்பனை

புங்குடுதீவு- நயினாதீவு ப.நோ.கூ.சங்கத்தின் நயினாதீவுக் கிளையில் பெற்றோல், டீசல், மண்எண்ணெய்,ஓயில் வகைகள் என்பன விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நயினாதீவின் மத்தியில் அமைந்துள்ள இந்தச் சங்கக்கிளையில் இவை யாவும் விற்பனையாகி வருகின்றன. அத்துடன் புங்குடுதீவில் உள்ள எரிபொருள் நிலையத்திலும் பெற்றோல் விற்பனை கடந்த 4 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஒ-10)


## Oriendal aqurium multy Farm

வளர்ப்பு கலர்மீன்கள், மீன்தொட்டி உபகரணங்கள், மீன்தொட்டிகள், பூக்கன்றுகள், பூச்சாடிகள், வளர்ப்புப் பறவைகள், செல்லப்பிராணிகள் என்பவற்றை மிகக் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு**



## கண்ணீர்த் துளிகள்



கடந்த 08.01.2010 அன்று காலமான சுன்னாகம் மத்திய மின்நிலைய மின் அத்தியட்சகர்

**அமரர் ராஜேந்திரம் விஜயகுமார்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களின் திடீர் மறைவால் துயரடைந்திருக்கும் அவர்தம் குடும்பத்தினர் அனைவரது துயரிலும் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டு.மின் பாவனையாளர் சேவைநிலைய மின் அத்தியட்சகரும் ஊழியர்களும்.

(95625)



## ஏழாம் வருட நினைவலைகள்



**அமரர் சபாபதி நாராயணன்**

[ஓய்வுபெற்ற கிராமசேவையாளரும், சமாதானநீதிவானும்]

அன்னை மடியில்
16*07*1943

ஆண்டவன் பாதத்தில்
11*01*2003

கண்ணீருக்குத் தடை போட்டதுபோல
உம் நினைவகளுக்குத் தடை போட
முடியவில்லை, நினைவுகளை மட்டும்
நிறையவே தந்து நிதர்சனமாய்
சென்றுவிட்டீர்கள் தந்தையே!

பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு. (93702)

மனைவி,
பிள்ளைகள்.



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை செல்வி விஜயகுமாரி வீரசிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் வீரசிங்கம் சிவமணி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆசிரியர் கழகம்
ஊரெழு கணேச வித்தியாசாலை

ஊரெழு. (சி/564032)



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 04*09*1991
மறைவு: 28*11*2009

**பிறேமரூபன் விஜிதன்** (கொலண்ட்)

எம் உறவின் மூத்த செல்வமே - உனை
மனமுவந்து காலனவன்
இழுத்ததேனோ?...
தாங்காது எம் மனது என்றென்றும்
ஆறாது உன் மறைவு எப்போதும்...

எம் செல்வனின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறியும் பல வழிகளில் உதவி செய்த அனைத்து நெஞ்சங்களுக்கும் நன்றியைக் கூறுகின்றோம்.

நன்றியுடையோர்:
திருமதி நல்லம்மா விஸ்ணு
காந்தி குடும்பம்,
வண்ணார்பண்ணை.

89/2, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (93643)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

**மேடம்**



பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயற்படுவார்கள். உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். புதியபொருள் சேரும். வியாபாரத்தில் பங்குதாரர்களின்பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள் வீர்கள். நன்மை கிட்டும் நாள்.



**இடபம்**

உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பள்ளைகளின் பெருமைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாள்வீர்கள். உத்தியோகத்தில் கௌரவப் பொறுப்புகள் தேடி வரும். அமோகமான நாள்.

**மிதுனம்**



வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதைக் கண்டறிவீர்கள். அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். புதுமை படைக்கும் நாள்





**கடகம்**

உடன்பறந்தவர்களால் ஆதாயமடைவீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.



பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வாகன வசதி பெருகும். உடன்பறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். முயற்சிகள் பலிக்கும் நாள்.



**கன்னி**

கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பறக்கும். அழகு, இளமை கூடும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**துலாம்**



சந்திரன் ராசிக்குள் நீடிப்பதால் அயலில் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள். சுவாதி நட்சத்திரக்காரர்கள் யோசித்து முடிவெடுங்கள். சின்னச்சின்ன அவமானங்கள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். நாவடக்கம் தேவைப்படும் நாள்.



**விருச்சிகம்**

எளிதில் முடித்துவிட நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் முடியும். தந்தைக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். நண்பர்களுடன் விவாதம் வந்துபோகும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும். கடினமாக உழைத்து முன்னேறும் நாள்.

**தனுசு**



குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள். பிரபலங்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.



**மகரம்**

எதிர்பார்த்த காரியங்களில் வெற்றி கிட்டும். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். மனதிற்குப் படித்தவர்களை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்யோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். இனிமையான நாள்.

**கும்பம்**



குடும்பத்தாரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்களின் ஆதரவு கிட்டும். கைமாற்றாகக் கொடுத்த கடனை வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.



**மீனம்**

சந்திராஷ்டமம் தொடர்வதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். வியாபாரத்தில் வேலையாள்களால் டென்ஷன் அதிகரிக்கும். அலுவலகத்தில் அதிகாரிகளிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. சிக்கனம் தேவைப்படும் நாள்.

## ஆத்மீக இசை வழங்கும் பிரசாத் கருணாமுனி



பிரசாத் கருணாமுனி என்பவர் ஒரு பிரசித்தமான சிங்களப் பாடகர். இசை அமைப்பாளரும் கூட. அத்துடன் இல்லாமல் ''எனது இசையைக் கேட்பவர்களை உணர்ச்சி வசப்படுத்துவதோடு திருப்தியடையச் செய்வதும் எனது நோக்கமாகும்'' என்கிறார் அவர்.

சர்வதேச மற்றும் தேசிய இசை மரபுகளைக் கற்பதிலும் ஆராய்வதிலும் அக்கறை கொண்டவரான பிரசாத், ஹொரணையிலுள்ள சிறிபாலி கல்லூரியில் முதன்முதலில் இசையைப் பயில ஆரம்பித்தார். சிங்கள இசை விற்பன்னர்களான ஆரியதாச ரணவக்க, விஜயசேன கொடிபில்லை, மற்றும் அமிதா அத்துக்கோரளை போன்றவர்களிடம் இசை பயின்றமையைப் பெருமையாகக் கருதுகின்றார் அவர்.

1991 ஆம் ஆண்டு அகில இலங்கை மட்டத்தில் நடைபெற்ற கிராமிய இசைப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டதையடுத்து இவரது இசைப்பயணம் ஆரம்பித்தது. இசைத்துறை அறிவை விரிவுபடுத்திக் கொள்வதற்காக மேலும் கற்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இசைக்கலைஞர் நந்தமாலினியிடம் சென்று அவரது மேற்பார்வையில் இந்துஸ்தானி இசையைக் கற்றார். தென்னிந்திய இசையை புகழ் பெற்ற அருந்ததி ஸ்ரீரங்கநாதனிடம் பயின்றார். அதோடு நிற்கவில்லை. மேற்கத்திய இசை வடிவங்களையும் கற்றுக் கொண்டார்.

2001 ஆம் ஆண்டு தமது 'சொந்துறு கவாக் என்ற இசைப்பாடலை வடிவமைத்துப் பதிவு செய்தார். எட்டு ஆண்டுகளின் பின்னர் வீடியோ இசை நிகழ்ச்சியொன்றை உருவாக்கினார்.

''மக்கள் தம் மனங்களை அமைதிப்படுத்தவும் ஆன்மீக விடிவு பெறவும் இசையை விரும்புகிறார்கள். அம்மாதிரியான இசையை வழங்குவதையே நான் விரும்புகின்றேன்'' என்கிறார் பிரசாத் கருணாமுனி.

-நந்தன்-

## சம்பத்தரிசியார் கல்லூரி ஆரம்பம்

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!**

1850 ஆம் ஆண்டு கத்தோலிக்க ஆங்கிலப்பாடசாலை என்ற பெயரில் யாழ்ப் பாணத்தில் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. மொரோயிட் அடிகளார் (Father mauroit) இப்பாடசாலையின் முகாமையாளராக நியமிக்கப்பட்டார். அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த போய் (Foy) முதலாவது அதிபராக நியமிக்கப்பட்டார்.


வில்லியம் மார்ஷ் (William Marsh) டபிள்யூ சந்தியாகுப்பிள்ளை ஆகியோர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர்.

10.01.1881 அன்று இந்தப் பாடசாலை புனித சம்பத்தரிசியார் கல்லூரி (St patricks College) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. வணக்கத்துக்குரிய ஜே.ஆர்.ஸ்மித் முதலாவது அதிபராக நியமிக்கப்பட்டார். சாலைகளுள் ஒன்றாக விளங்கும் சம்பத்தரிசியார் கல்லூரியிலேயே சுருக்கெழுத்தும் கணக்குப்பதிவும் (Shorthand and book keeping) என்ற பாடம் முதல் தடவையாக அறிமுகம் செய்யப்பட்டது.

தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MAHARAJ
PUMPS




இதோ ஓர் அரிய செய்தி

உற்பத்தி மற்றும் விநியோகித்தலில் 50 ஆண்டுகளுக்கு மேலான தேசத்தின் நம்பிக்கையை வென்ற வரையறுக்கப்பட்ட த. டிரேட்ஸ்மன் இலங்கை (தனியார்) நிறுவனம் யாழ் மக்களின் நீண்டகால கமத்தொழில் நீர்த் தேவையினையும் மற்றும் அன்றாட வீட்டு நீர்த் தேவையினையும் பூர்த்தி செய்யும் நோக்குடன்

மகராஜ் நீர் பம்பிகளை

இன்று முதல் யாழ் மண்ணின் அனைத்து இரும்பகங்களிலும் விற்பனைக்கு அறிமுகம் செய்துள்ளது.

மகராஜ் நீர் பம்பியைப் பாவிப்பதினால் நீங்கள் பெறும் பயன்களில் சில

- வார்க்கப்பட்ட இரும்பினால் உருவாக்கப்பட்ட நீர் பம்பிகள்
- பித்தளையினால் செய்யப்பட்ட இம்பிலேயர்
- செரமிக் மற்றும் காபன் தயாரிப்பிலான நீர்த் தடுப்பாக்கி தன்னியக்க ஓவர்லோட் கட்டவுட் சுவிற்ச், உங்களின் அதிகப்படியான மின்சார பாவனையை குறைக்கும்
- குறைந்த சப்தத்துடன் சிங்கிள் பேஸ் மின்சாரத்தில் இயங்கும் நீர் பம்ப்
- வரையறையற்ற உத்தரவாதம்
- 24 மணிநேர பராமரிப்புச் சேவை மற்றும் இலகுவாக உதிரிப்பாகங்கள் பெற்று கொள்ளும் வசதி
- உயர்தரத்திலான நீர் பம்பிகள் நீண்ட கால பாவனையைக் கொண்டது

TRADESMANN
1956
www.tradesmann.com

வரையறுக்கப்பட்ட த. டிரேட்ஸ்மன் இலங்கை (தனியார்) நிறுவனம்.
இல 40, பொருப்பன பெரி வீதி, இரத்மலானை, இலங்கை.
வாடிக்கையாளர் சேவை: +94 11 5565657 8 பக்ஸ்: +94 11 5565605
தொலைநகல்: telemarketing@tradesmann.com
வெப்தளம்: www.tradesmann.com

# உலகத்தின் அதிவேக ரயில் சீனாவில் இயக்கம்




சீனாவில் 350 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடிய அதிநவீன ரயில்கள் கடந்த வாரம் இயக்கி வைக்கப்பட்டது. ஜப்பான் மற்றும் பிரான்ஸ் நாடுகளில் அதிவேக ரயில்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

ஜப்பான் ரயில் 243 கிலோ மீற்றர் வேகத்திலும், பிரான்ஸ் ரயில் 277 கிலோ மீற்றர் வேகத்திலும் இயக்கப்படுகின்றன. ஒலிம்பிக் போட்டியையொட்டி சீனாவில் அதிவேக ரயில்கள் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டன. தற்போது, இந்த ரயில்கள் 350 கிலோ மீற்றர் வேகத்தில் இயக்கப்படுகின்றன.

சீனாவில் மத்திய பகுதியில் உள்ள உஹான் நகரிலிருந்து தெற்கு பகுதியில் உள்ள குவாங்சு நகர் வரை இந்த அதிவேக ரயில் சென்று வருகிறது. ஆயிரத்து 68 கிலோ மீற்றர் தொலைவுள்ள இந்தப் பகுதியை அதிநவீன ரயில் நான்கு மணி நேரத்தில் கடக்கின்து.

வர்த்தகம் அதிக அளவில் நடக்கும் தெற்கு பகுதியில் இந்த ரயில் அறிமுகப்படுத்தப்பட்டதால்,பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இன்னும் இரண்டு ஆண்டுகளில் 42 தடங்களில் இந்த அதிநவீன ரயில் இயக்கப்பட உள்ளது. சோதனை ஓட்டத்தின் போது, இந்த அதிவேக ரயில், 400 கிலோ மீற்றர் வேகத்தில் இயக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கை அசைவில் இயங்கும் ரி:வி



மனிதனுக்கு அறிவு அதிகம் அதேபோல சோம்பலும். எல்லா வேலையும் இருந்த இடத்திலேயே நடக்க வேண்டும் என்று பலர் விரும்புவார்கள். இன்னும் சிலர் கை அசைத்தாலே காரியம் நடக்க வேண்டும் என்றும் ஆசைப்படுவார்கள்.

அதுபோல எண்ணம் உடையவர்களின் ஆசையை நிறைவேற்ற புதிய ரி.வி. வருகிறது. ஆமாம், இனிமேல் ரி.வி.யை இயக்க ரிமோட்டை தேடவேண்டாம். இருந்த இடத்தில் இருந்து கையை அசைத்தால் போதும் ரி.வி இயங்க ஆரம்பித்து விடும்.

அமெரிக்காவின் டெக்சாஸ் இன்ஸ்ட்ருமென்ட் நிறுவனம் மற்றும் பிரான்ஸ் நாட்டின் வேல்லி நிறுவனம் ஆகியவை இணைந்து இதற்கான ரி.வி வடிவமைப்பில் ஈடுபட்டுள்ளன. இந்த ரி.வியில் ஒரு 3டி கமராவும், சென்சாரும் இணைக்கப்பட்டு இருக்கும். ரி.விக்கான சுவிச்சை இயக்கினால் போதும். மற்றபடி எல்லா வேலைகளையும் ரிமோட் இல்லாமல் கை அசைவிலேயே செய்யலாம். கமராவும், சென்சாரும் உங்கள் அசைவுகளுக்கு ஏற்ப ரி.வியை இயக்கும். விரல்களை அசைப்பதற்கு ஏற்ப சனல் மாற்றவோ, சப்தத்தை கூட்டவோ குறைக்கவோ முடியும்.

அதேபோல வீடியோ கேம்ஸ் விளையாட நினைத்தாலும் உடல் அசைவு மூலமே விளையாடலாம். '3டி சமிக்ஞை' முறையில் இயங்கும் இந்த ரி.வி தயாரிப்புப் பணிகள் தொடங்கிவிட்டன. அடுத்த கிறிஸ்மஸ் இந்த ரி.வியுடன் பொண்டாடலாம் என்று இதைத் தயாரிக்கும் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

# டுபாயில் புகைப்பிடித்தால் ஒரு கோடிரூபா அபராதம்



புகை பிடிப்பது மற்றும் புகையிலைப் பொருள்களை விற்பதற்குப் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ள ஐக்கிய அரசு எமிரேட் அரசு, இந்தக் கட்டுப்பாடுகளை மீறுவோருக்கு ஒரு கோடி ரூபா வரை அபாராதம் விதிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளின் அதிபர் ஷேக் கலிபா பின் சயீது,புகை பிடிப்பது மற்றும் புகையிலைப் பொருள்களை விற்பதற்குப் பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கும், புதிய சட்ட விதிமுறைகளில் கையெழுத்திட்டுள்ளார். இதன்படி, பொது இடங்களில் புகை பிடிப்போர் மற்றும் 18 வயதிற்கு உட்பட்டோருக்கு புகையிலைப் பொருள்களை விற்போருக்கு 1.2 கோடி ரூபா வரை அபராதமும், இரண்டு ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.

மேலும், புகையிலைப் பொருள்களை விற்பதற்கு வழங்கப்பட்ட உரிமமும் ரத்துச் செய்யப்படும். கபே போன்ற இடங்களில் புகையிலைப் பொருள்களை விற்பதற்கு உரிமம் அளிக்கப்படாது. 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இருக்கும் காருக்குள், [illegible] குற்றமாகக் கருதப்படும். அதேபோல், புகையிலைப் பொருள்கள் தொடர்பான விளம்பரங்களுக்கும் தடை விதிக்கப்படும்.இவ்வாறு அரசு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் வயல்களில் கபிலநிறத் தண்டு தத்தி! நெற்செய்கையாளர்களே கவனம்!!

நெல்வயல்களைத் தாக்கிப் பாரிய சேதத்தை ஏற்படுத்தும் கபிலநிறத் தண்டு தத்தியானது கைதடி- நுணாவில் பகுதியில் A-9வீதிக்கு அருகில் சின்னத் தம்பி கடைக்கு முன்னால் உள்ள ஐயந்துரை என்பவருடைய வயலில் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே வேறு இடங்களிலும் இப் பீடையானது தாக்கலாம்.


(படம்-1) கபிலநிற தண்டுதத்தி

தற்போது நிலவும் கால நிலையும் நெற்பயிரின் பருவமும் கபில நிறத் தண்டு தத்தியின் தாக்கத்திற்கு மிகவும் சாதகமாக காணப்படுவதால் இவற்றின் பெருக்கம் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. எனவே நெற்செய்கையாளர்கள் தங்கள் வயல் களைக் கபிலநிறத் தண்டு தத்தியின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க கீழ்க்காணும் விடயங்களில் கவனம் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர்.

**கபிலநிறத் தண்டு தத்தியின் உருவவியலும் வாழ்வியும்**

கபிலநிறமானதும் ஆப்பு வடிவமுடையதுமான இப்பீடையானது 2-3 மி.மீ நீளமானது. ஆண் பூச்சி ஒடுங்கி நீண்டதும் இறக்கை கொண்டதுமாகும் (படம் -1) பெண்பூச்சிகளின் இறக்கைகள் மிகச் சிறியதாகவும் வயிற் றுப் பகுதி மிகப் பெரியதாகவும் இருக்கும்.




பயிர்களின் மட்டங்களில் நீர்மட்டத்திற்குமேல் தனித் தனியாகவோ கூட்டமாகவோ காணப்படும். பயிர்களைக் கவனமாக விலக்கிப் பார்த்தால் இவற்றைக் காணலாம். இப்பீடைகளுக்கு அருகே கைகளைக் கொண்டு சென்றால் பக்க வாட்டில் அசைந்து மறையும். குழப்பப்படுமாயின் தத்திப் பறப்பதையும் காணமுடியும்.


(படம்-2) பயிர்களின் மட்டங்களில் தத்திகள் காணப்படுகின்றன

**அடையாளம் காணல்**

கபில நிறத்தண்டுத் தத்திகள் வயலில் காணப்படின் பின்வரும் புற அறிகுறிகளை அவதானிக்கமுடியும்.

01.பிற்பகலில் அல்லது காலை வேளையில் வயலில் பயிர்களுக்கு மேலாக தும்பிகள் பறந்து திரியும்

02. வயலுக்கு மேலாக வெடிவால் குருவிகள் வட்டமிட்டு பறந்து திரியும்

இந்த அறிகுறிகள் காணப்படின் உங்கள் வயல்களில் கபில நிற தண்டுத்தத்தி உள்ளது என்பதை நீங்கள் ஊகிக்க முடியும்.

வயல்களில் கபில நிறத் தண்டு தத்தியானது பயிர்கள் அடர்த்தியாக உள்ள இடங்களிலேயே காணப்படும். எனவே வயல்களில் இறங்கி ஆங்காங்கே பயிர்களை விலக்கிப் பார்க்கும்போது இவற்றை அவதானிக்க முடியும்.

(படம்-2) வயல்களில் இப்பீடைகளை அவதா னித் தால் உடனடியாக கீழ்க்காணும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**தாக்கத்தின் அறிகுறிகள்**

இவை பயிரின் தண்டுப்பகுதியில் இருந்து கொண்ட சாற்றை குத்தி உறுஞ்சுகின்றன. மேலும் இவை கூட்டம் கூட்டமாகவே இருந்துகொண்டு பயிரைக் குத்தி உறுஞ்சுகின்றன. இதனால் வயலில் ஆங்காங்கு மஞ்சள் நிறத்தில் தொட்டந் தொட்டங்களாக இருக்கும். மேலும் தாக்கம் அதிகரிக்குமானால் இத்தொட்டங்கள் எரிந்தது போன்ற தோற்றமளிக்கும். இத் தேறறப்பாடு தத்தி எரிவு (Hopper burn) எனப்படும்.

மேலும் நெல் மணிகளின் முதிர்ச்சிப் பருவத்தில் கபில நிறத்தண்டு தத்தி தாக்குமாயின் நெல்மணிகள் நிறம்மாறுவதுடன் தரமும் குறைவடைவதனால் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்படலாம்.

**கபிலநிறத் தண்டு தத்தியின் தாக்கம் அதிகரிக்கக்கூடிய இடங்கள்**

* அதிகளவு யூரியா பாவித்ததன் காரணமாக கடும் பச்சை நிறமாக வும் மாறி பதிய வளர்ச்சி அதிகமாகஉள்ளவயல்கள்
* வயல்களில் பயிர்கள் அடர்த்தியாக உள்ள இடங்கள்
* களைகள் அதி கமாக உள்ள இடங்கள்

**கட்டுப்பாட்டு முறைகள்**

1. வயலைத் தினமும் பிற்பகலில் கவனமாக அவதானியுங்கள்
2. வரம்புகளில் உள்ள களைகளை அகற்றி சுத்தமாகப் பேணுங்கள்
3. மேற்கட்டுப்பசளை இடவேண்டியிருப்பின் ஒரு பரப்பிற்கு 1.4 கிலோ (1400கிறாம்) யூரியாவுடன் 650 கிராம் மியூரியேற் ஒவ் பொட்டாஸ் கலந்து இடவேண்டும் பயிர்கள் வீரியமானவளர்ச்சியுடனும் போதிய பச்சை நிறத்துடனும்காணப்படின் பரப்பிற்கு ஒரு கிலோ யூரியாவுடன் 650 மியூரியேற் ஒவ் பொட்டாஸ் கலந்து பாவிக்கவும்.

(எக்காரணம் கொண்டும் இவ் உரப் பசளைகளுடன் பியூறடான் குறுணல் கலத்தல் கூடாது)


(படம்-3) தாக்கப்பட்ட பயிரின் தோற்றம்

கபிலநிறத் தண்டுத் தத்தியின் தாக்கத்தை சரியாக அடையாளம் காண முடியாதவர்கள் உடனடியாக விவசாயப் போதனாசிரியருக்கு அறிவித்து அவரின் உதவியுடன் தத்தியின் தாக்கத்தை உறுதிப் படுத்த வேண்டும்.

பீடைநாசினி பாவிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் கீழ்க் காணும் நாசினி களில் ஒன்றை உரிய முறையில் பயன்படுத் தவும்.

**கபிலநிற தண்டுத்தத்தியைக் கட்டுப்படுத்த சிபாரிசு செய்த பூச்சிநாசினிகள்**


| இரசாயனப் பெயர் | வர்த்தகப் பெயர் | பாவனை முறை ஒரு லீற்றர் நீரில் கலக்கவேண்டிய மருந்து |
|---|---|---|
| பெனோபியூகாப் (FENOBUCARB500g/EC) | பிபிஎம்சி (BPMC) டோசர் (DOZERR50EC) பாசா 50 (BASSA 50) | 3.5 மி.லீ மருந்தை 1 லீற்றர் நீரில் கலந்து அதாவது 16 லீற்றர் தெளிகருவிக்கு 16X3.5 = 56 மி.லீ பூச்சிநாசினியைக் கலக்கவும். |
| பியூபுறோபெஷி (BUPROFEZI 10%WP) | அப்லோட (APPLAUD) | 0.6 கிராம் மருந்து ஒரு லீற்றர் நீரில் 0.6X16 = 9.6 கிராம்/16 லீற்றருக்கு |
| பிப்ரோனில் (FIPRONIL 50g JSC) | றீஜென்ற் REGENT 50 SC (50S.C) | 24 மில்லி லீற்றர் மருந்து 16 லீற்றர் நீரில் கலந்து |
| தயாமெதொசாம் (THIAMETHOXAM 25% Wg) | அக்ரறா 25WG ACTARA 2.5 WG | 5 கிராம் மருந்து 16 லீற்றர் நீரில் |
| இமிடாகுளோபிறிட் (IMIDACLOPRID 70% Wg) | பிரிவாடோ (PROVADO) | 0.15 கிராம் ஒரு லீற்றர் நீரில் 2.4 கிராம்/16 லீற்றர் நீரில் |

குறிப்பு: பெரும்பாலான விவசாயிகள் 16 லீற்றர் நீரை கொள்ளக்கூடிய (துலா தெளி கருவி) தெளிகருவி பாவிப்பதால் அதற்குரிய அளவு முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. வேறு அளவுகொண்ட தெளிகருவி பாவிப்பின் ஒரு லீற்றர் நீரில் கலக்க வேண்டிய அளவைக் கவனித்து தேவையாயன அளவை கணித்துக் கொள்ளவும்.

**முக்கிய குறிப்பு:**

கபில நிறதண்டுத்தத்தியைக் கட்டுப்படுத்த பூச்சிநாசினி விசிறும்போது பயிரைப்பிரித்து நீர் மட்டத்தோடு இருக்கும் பயிரின் தண்டில் உள்ள பூச்சிகள் வாழும் பிரதேசத்திற்கு படக்கூடியவாறு தெளிக்கவேண்டும்.

பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து வெளி நோக்கி செல்லாமல் பாதிக்கப்படாத வயற் பகுதியிலிருந்து பூச்சிநாசினி விசிறு வதை ஆரம்பித்து பாதிக்கப்பட்ட வயற் பகுதியை நோக்கி முற்றுகையிட்டு விசிறுவதால் பூரணமான பலன் பெற முடியும்.




**கபில நிற தண்டுத்தத்தியைக் கட்டுப்படுத்த முற்றுகை முறையில் பூச்சி நாசினி விசிறும் முறை**

குறிப்பிட்ட பகுதியில் மட்டும் தத்தித் தாக்கம் காணப்பட்டால் மேலும் பரவலடையாமல் மேற் குறிப் பிட்ட முறையில் பாதிப்படைந்துள்ள பகுதிக்கு மட்டும் பூச்சிநாசினி விசிறினால் போதுமானது (SPOT APPLI CATION)

பரவலாக எல்லர இடத்திலும் தொற்று இருந்தால் மட்டும் முழு வயலுக்கும் பூச்சி நாசினி விசிற வேண்டும்.

வருமுன் காத்தலே சாலச் சிறந்தது.

ம. யோகநாதன்
(கைதடி விவசாயப் போதனாசிரியர்)
கி.சிறிபாலசுந்தரம்
உதவி விவசாயப்பணிப்பாளர் (விரி) அலுவலகம்
யாழ்ப்பாணம்.



யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடல் அண்மையில் யாழ்.செயலக கேட்போர்கூடத்தில் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் டெங்குநோய் குறித்து விளக்கமளிப்பதனை முதல் படத்திலும்,

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், உலக உணவுத் திட்ட நிறுவன ஆலோசகர் பேராசிரியர் ந.சிவராசா உள்ளிட்டோர் மேடையில் அமர்ந்திருப்பதனை இரண்டாம் படத்திலும், நிகழ்வில் பங்குபற்றிய யாழ்.மாவட்ட [illegible] செயலாளர்கள், இராணுவ அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: உமா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. [illegible] திகதி 02-01-2010

ஆங்கில எழுத்திரும் F

வெற்றி எண்கள் 16 17 24 64

போனஸ் இல: 14

ஜக்பொட் பரிசு ரூ. 12,101,975/- வெல்லப்படவில்லை

| பொருந்தும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 201943 | 20/- | 4,038,860/- |
| 2 இல | 14432 | 100/- | 1,443,200/- |
| 3 இல | 299 | 1,000/- | 299,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திரும் | 8165 | 40/- | 326,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திரும் | 802 | 1,000/- | 802,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திரும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திரும் | - | 12,101,975/- | - |
| 1 இல + போனஸ் இல | 9008 | 100/- | 900,800/- |
| 2 இல + போனஸ் இல | 451 | 500/- | 225,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திரும் + போனஸ் இல | 397 | 200/- | 79,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திரும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திரும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 10,538,360/- |
| [illegible] | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 235948 | | 11,138,360/- |

[illegible]

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற [illegible]

| | |
|---|---|
| குருணாகல் | 301507135-7-11 |
| கேகாலை | 301516422-3-18 |
| கம்பஹா | 301516775-3-35 |
| கொழும்பு | 301509465-4-47 |
| அநுராதபுரம் | 301522928-3-10 |
| பொலன்னறுவை | 301511818-3-32 |
| குருணாகல் | 301507390-2-31 |
| மொனராகலை | 301511349-0-49 |
| கண்டி | 301517063-7-10 |
| மட்டக்களப்பு | 301509550-3-41 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 12,653,425/-

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை



## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ், முட்டை என்பன மலிவான விலையில் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: மல்ரிபாம் சென்ரர், 61, இராமநாதன் வீதி. தொ.பே.: 021 7912783 (சி/584021)

## வேலையாள் தேவை

A/L, O/L படித்த வேலையாள் (ஆண்) தேவை. சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

ஆர்க் என்ரரிறைசஸ், 150, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 2052 (93627)

## வேலையாள் தேவை

பேக்கரி வேலையில் முன் அனுபவமுள்ள பாஸ் தேவை.

தொடர்பு: புதிய துர்க்கா வெதுப்பகம், கலைவாணி வீதி, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (93607)

## புறொயிலர் தேவை

புறொயிலர்க் கோழி உடன் தேவை. உரிய விலையில் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: மல்ரிபாம் சென்ரர், 61, இராமநாதன் வீதி. தொ.பே.: 021 7912783 (சி/584020)

## தேவை

வேலையாள்கள் தேவை. நேரில் வரவும்.

ஒபெக்ஸ் ஹொட்டல், 372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (93634)


## சுவர் வீழ்ந்து இளைஞன் மரணம்

சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் வீட்டின் சுவர் இடிந்த வேளை அதற்குள் அகப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்றுக்காலை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சுப்பையா செல்வகுமார் (வயது 28) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இவரது சடலம் சாவகச்சேரிப் பொலிசாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(1-78-207)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் பொன்னம்பலம்

(உரிமையாளர்- ஆறுமுகம் அன் சன்ஸ்)



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் இல.6, கடைச்சாமி ஒழுங்கை, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பொன்னம்பலம் (முன்னாள்- பிரபல வர்த்தகர்- ஊர்காவற்றுறை) 08.01.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நவசிவாயம்- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், தேவகுமாரியின் அன்புக் கணவரும், சண்முகராஜா (சண்முகன் களஞ்சியம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), சிவராணி (விவசாயபீட மாணவி- அவுஸ்திரேலியா), சிவலோகநாதன் (HNB- திருகோணமலை), சிவபாலன்(லண்டன்), தயாநிதி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வதனா, பிரதீபன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருஜனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சறோஜினிதேவி, தனலக்ஷ்மி, நாகேஸ்வரி, கமலவேணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2010) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சண்முகராஜா (மகன்), (சண்முகன் களஞ்சியம்).
இல.6, கடைச்சாமி ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (93643)

## என்றும் நீங்காத நினைவுகளுடன்

3ஆம் ஆண்டு

மண்ணில் 17.01.1923



விண்ணில் 29.12.2006

அமரர் சின்னத்துரை நவரத்தினம்
(பிரபல வைத்தியர், கோப்பாய் மத்தி)
திதி: தசமி (26.12.2009)

7ஆம் ஆண்டு

மண்ணில் 19.08.1925



விண்ணில் 30.12.2002

திருமதி மங்கையர்க்கரசி நவரத்தினம்
திதி: துவாதசி
(11.01.2010)

பாசத்துடனே எமை வளர்த்து
பண்புடனே எங்களை வழி நடத்தி
தெய்வத்துள் உறைந்த உத்தமர்களே!
பேரோடும் புகழோடும் பெருமையாய் வாழ்ந்த
உங்கள் நினைவுகள் என்றும் எமை விட்டு அகலாது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

V.T.S.லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (93537)

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.


## மஹஜன ஸம்பத / மஹாஜன சம்பத / Mahajana Sampatha

08.01.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2196

வெற்றி எழுத்து W — வெற்றி எண்கள் 6 1 2 7 6 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | W | 6 | 1 | 2 | 7 | 6 | 2 | ரூபா 12,304,581/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 6 | 1 | 2 | 7 | 6 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 1 | 2 | 7 | 6 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | | | | 2 | 7 | 6 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 140 |
| 4 பரிசுகள் | | | | | 7 | 6 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1468 |
| 5 பரிசுகள் | | | | | | 6 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 14634 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 145705 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 6 | 1 | 2 | 7 | 6 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 16 |
| 8 பரிசுகள் | | 6 | 1 | 2 | 7 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 157 |
| 9 பரிசுகள் | | 6 | 1 | 2 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1466 |
| 10 பரிசுகள் | | 6 | 1 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 14497 |
| 11 பரிசுகள் | W | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 58248 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 15,098,910.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு Rs. 12,764,470.00

தேசிய லொத்தர் சபை



# STUDY IN UK

Colombo, நகரில் UK VISA க்களைப் பெற்றுக்கொடுத்துச் சாதனை படைத்துக்கொண்டிருக்கும் எமது நிறுவனம் யாழ்.மாணவர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.நகரில் கிளைக் காரியாலயம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

- UK பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கு உடனடியாக அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்
- UK VISA சம்பந்தமான இலவச ஆலோசனைகள்
- நான்கு வாரத்தில் London பயணமாக அரிய வாய்ப்பு.

### நீங்கள் ஏன் எமது நிறுவனத்தை தெரிவுசெய்யவேண்டும்

- ஆகக் கூடுதலான விசாக்களைப்பெற்றுக்கொடுத்து சாதனை படைத்துக் கொண்டிருப்பதால்
- UK யில் உள்ள பிரபல சட்டத்தரணிகளால் உங்கள் Visa Document தயாரிக்கப்படுகின்றன.
- Free IELTS Classes
- UK இல் பகுதிநேர வேலைவாய்ப்பு
- Admission within 12 hours
- Degree முடிவில் 2 வருட Work permit பெற்றுத்தரப் படும்.
- யாழ்.மாணவர்களுக்கு விசேட விசா ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படுகின்றன.

University of Portsmouth | University of Hertfordshire | University of Plymouth | The City College | College of Technology London

Jaffna Office: No.102 2/2, Navalar Road, Jaffna.
Web : www.expogroup.lk
T.P : 0117555511, 0714150995

EXPONET Overseas Consultants

Colombo Office : No.379,1/1, Galle Road, Colombo - 06
T.P : 0117555511,12,13,14
London Office : No.56, The Gardens, Harrow Middlesex Ha 1 4EY UK.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல முடிவு



ரஜினியின் மகளான சௌந்தர்யாவின் தயாரிப்பில் வெங்கட் பிரபு இயக்கியுள்ள படம் 'கோவா'. பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இத் திரைப்படம் விரைவில் வெளிவரவும் இருக்கின்றது. இந்நிலையில் சௌந்தர்யா தன்னிடம் பெற்ற ஒரு கோடி ரூபாவை திருப்பித் தராவிட்டால் கோவா படத்தை திரையிட அனுமதிக்க மாட்டேன் என்று வருண்மணியன் என்பவர் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். இதனால் கோவா படத்தை வெளியிடுவதில் சிக்கல் தோன்றியது. ஆயினும் இப்போது நீதிமன்றத்தின் புத்திசாலித்தனமான முடிவொன்றால் அச்சிக்கல் நீங்கியுள்ளது. அதாவது சௌந்தர்யா நீதிமன்றத்தில் ஒரு கோடியே 60 லட்சம் ரூபாவை முற் பணமாகக் கட்ட வேண்டும். வழக்கு முடிவில் வருண்மணியன் தெரிவித்தது உண்மையென்றால் அவருடைய கடன் தொகை குறித்த முற்பணத்தில் இருந்து கொடுக்கப்படும். இல்லாவிட்டால் மீளவும் இந்தத் தொகை சௌந்தர்யாவுக்கே திரும்ப வந்துவிடும். எப்படியோ 'கோவா' வந்தால் சரி.★★★

# மாறியது பெயர்



அர்ஜுன், மம்முட்டி இணைந்து நடித்துவரும் 'அறுவடை' படத்தின் பெயர் 'வந்தேமாதரம்' என்று மாற்றப்பட்டிருக்கின்றது. இரண்டு பொலிஸ் அதிகாரிகள் நாட்டுக்கெதிராக மேற்கொள்ளப்படும் ஒரு சதித்திட்டத்தை எவ்வாறு வெற்றிகரமாக முறியடிக்கிறார்கள் என்பதே இப்படத்தின் கதை. வெகு வேகமாக வளர்ந்துவரும் இத்திரைப்படத்திற்கு அறுவடை என்பதை விடவும் வந்தேமாதரம் என்பதே மிகப் பொருத்தமான பெயராக இருக்கின்றது என்கிறார் படத்தின் தயாரிப்பாளரான ஹென்றி. நீண்ட காலத்தின் பின்னர் நேரடித் தமிழ்ப்படம் ஒன்றில் நடிப்பதால் மிகுந்த ஈடுபாட்டோடு படப்பிடிப்பில் மம்முட்டி கலந்து கொள்வதாகவும் கூறப்படுகின்றது.

★★★★★★★★★★★

# எதற்கும் எல்லை உண்டு



எல்லாவற்றுக்குமே ஒரு அளவுண்டு. எல்லைமீறினால் அதுவே பெரும் பிரச்சினையாகி விடுகின்றது. இது தான் நடிகை சொர்ணமால்யாவின் ரசிகர் ஒருவருக்கு நேர்ந்துள்ளது. அண்மையில் நடிகர் சொர்ணமால்யா ரயிலில் பயணமாகிய போது அவரது ரசிகர் ஒருவரும் அதே பெட்டியில் வந்துள்ளார். அவர் நடிகை சொர்ணமால்யா மீது தொட்டுக்கதைக்க முயன்றுள்ளார். இதனால் வெகுண்டெழுந்த சொர்ணமால்யா குறித்த ரசிகர் மீது பொலிஸில் புகார் செய்துள்ளார். நீண்டகாலமாகப் படவாய்ப்புகள் ஏதுமின்றித் தவித்து வந்த சொர்ணமால்யா இப்போது தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் நடித்துவருகின்றார். எனவே தன்னைப் பிரபல்யப்படுத்திக் கொள்ளவே இவ்வாறு ரசிகர் ஒருவரின் எல்லை மீறலை பொலிஸ் நிலையம் வரை சென்று பெரிதாக்கியிருக்கின்றார் என்றும் ஒரு சாரார் கருதுகின்றனர்.

★★★★★






# பழைய பல்லவி

தேவயானியின் தம்பியான நகுல் நடித்து, திரைக்கு வெகு விரைவில் வரவுள்ள படம் 'கந்தக்கோட்டை'. காதலில் விழுந்தேன், மாசிலாமணி படங்கள் முதலுக்கு மோசமில்லாமல் ஓடியதால் கந்தக்கோட்டை படம் பற்றி ரசிகர்களிடம் எதிர்பார்ப்பு இருக்கவே செய்கின்றது. ஆயினும் அண்மையில் வெளியிடப்பட்ட இப்படத்தின் சில காட்சிகள் நகுலின் முன்னைய படங்களை நினைவூட்டுவதாகவே அமைந்துள்ளது. ஆயினும் "இதுவரைக்கும் வந்த என்னுடைய படங்களையும் விடவும் இந்தப்படம் வித்தியாசமானதென்பதை படம் வந்த பின்னர் அனைவரும் சொல்வார்கள்" என்று வழமையாக நடிகர்கள் சொல்கின்ற பழைய பல்லவியை நம்பிக்கையோடு எல்லோரிடமும் பாடி வருகின்றார் நகுல்.

# திரைவிமர்சனம்



# ருத்ரம்

'இன்டிப்பெண்டன்ஸ் டே', 'தி டே ஆப்டர் டுமாறோ' போன்ற வியப்பூட்டும் தொழில்நுட்பக் காட்சிகள் நிறைந்த ஆங்கில வெற்றிப் படங்களைத் தந்த 'ரோலண்ட் எமெரிக்' என்பவரின் இயக்கத்தில் வெளிவந்துள்ள மற்றுமொரு வெற்றிப் படைப்பே தமிழில் 'ருத்ரம்' என்ற பெயரோடு வெளிவந்துள்ளது.

2012 ஆம் ஆண்டு உலகம் சுனாமி, பூகம்பம் என்பவற்றின் தாக்கத்தால் அழியவிருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்து அதை அமெரிக்க அரசிடம் அறிக்கையாகக் கொடுக்கின்றார்கள். ஆனால் அதற்கிடையில் காலம் கடந்து விடுகின்றது. 2012 இல் பூமி எல்லோரையும் விழுங்குவது போன்ற வெறியுடன் பிளந்து கொள்கின்றது. எங்கும் இராட்சத அலைகள். ஒட்டுமொத்த உலகமே அழியும் நிலையில் ஜான் குசேக் என்பவர் தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றப் போராடுகின்றார். அவருடைய போராட்டத்தின் முடிவு என்ன? அவரின் குடும்பம் காப்பாற்றப்பட்டதா? உலகின் அழிவு தடுத்து நிறுத்தப்பட்டதா? போன்ற கேள்விகளுக்கான பதில்களை ருத்ரம் படத்தில் இறுதிக் காட்சிகள் சொல்லி நிற்கின்றன. இதை மிஞ்சி பிரமாண்டமாக எதுவும் செய்துவிட முடியாது என்று சொல்லும் அளவுக்கு படத்தின் 'கிறாபிக்ஸ்' காட்சிகள் தத்ரூபமாக அமைந்திருக்கின்றன. அதிலும் முழு உலகும் அழிவின் விளிம்பில் இருப்பதை காட்டும் காட்சிகள் ஒவ்வொருவரையும் தாம் பார்ப்பது உண்மைதானோ என்று எண்ணும் அளவுக்குப் படமாக்கப்பட்டுள்ளன. படத்தின் ஒட்டுமொத்த செலவும் ஆயிரத்து நானூறு கோடி ரூபா என்று சொல்லப்படுகின்றது. படத்தின் நாயகனாக வருபவர் தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றப் போராடும் ஒவ்வொரு காட்சியிலும் பாத்திரமாகவே மாறி நிற்கின்றார். அதிலும் உலகம் அழிந்து கொண்டிருக்கும் வேளையில் காரில் விரைந்து, விமானத்தில் தாவி தன்னுடைய குடும்பத்தை அழிவில் இருந்து மீட்டெடுக்கும் காட்சிகளில் அவர் மிகச் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கின்றார். 'ருத்ரம்' திரைப்படம் பார்ப்போரை ஆச்சரியத்துக்குள்ளும், பயத்துக்குள்ளும் ஆழ்த்திநிற்கின்ற ஒரு படைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STEEL FURNIMART

தரமும் உறுதியுமிக்க
STEEL CUPBOARD
முதலானவற்றை கொழும்பிலுள்ள
"STEEL FURNIMART"
யாழிலும் அறிமுகப்படுத்தவுள்ளது



தரம் நாடுவோர் 077 5817518ஐ தொடர்பு கொள்ளவும்.

STEEL FURNIMART
பம்பலப்பிட்டி

325, காலி வீதி,
புதிய கதிரேசன் மண்டபமருகே,
கொழும்பு 04

257, காலி வீதி,
HFC முன்பாக கொழும்பு 04
Tel/Fax: 011-2555469, 0777673570

## 33ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
21
★
03
★
1927



மறைவு
10
★
12
★
2009

### திருமதி சண்முகவடிவேல் இரத்தினம்

திதி: அபரபக்க தசமி

அன்புடன் நம் எல்லோரையும் ஆதரித்து
அரவணைத்தீர்கள் அம்மா! பேசும் தெய்வமாக
எம்முடன் இருந்த நீங்கள், எம்மை விட்டுப்
பிரிந்து சென்று முப்பத்துமூன்று நாள்கள்
சென்று விட்டன. உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டு நீங்காது அம்மா!
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
(93617) குடும்பத்தினர்.

(இ/563877)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
17
★
03
★
1921



மறைவு
15
★
12
★
2009

### திருமதி மனோன்மணிஅம்மா நாகநாதன்

கடந்த 15.12.2009 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (11.01.2010) திங்கட் கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் மரணச் செய்தி அறிந்து எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மில் லேன்,
பிரம்படி, கொக்குவில்,
021 222 5024
(93705) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா இரவிக்குமார்

யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி, பியுனிக் நகரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரவிக்குமார் 07.01.2010 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் திரு.திருமதி கந்தையா இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், வசந்தகுமாரி, காலஞ்சென்ற இரவீந்திரன் மற்றும் ஜெயந்தினி, சாந்தினி, ஸ்ரீதரன், நயந்தினி, உமா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27, முதலியார் ஒழுங்கை,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தகவல்:
குடும்பத்தினர்.

## விவேகானந்தரின் தேசிய இளைஞர்தினம் நாளை

யாழ்ப்பாணம்,ஜன.11

சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர்தினம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.கனரத்தினம் மகா வித்தியாலயத்தில் கல்லூரியின் அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ''சுவாமி விவேகாந்தரின் சிந்தனைகள்'' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (9)

## புதிய பரிவர்த்தனை நிலையங்கள் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.11

ரெலிக்கொம் நிறுவனத்தில் சி.டி.எம்.ஏ தொலைபேசி வலையமைப்பு நெருக்கடியை நீக்கும் முகமாக புதிய பரிவர்த்தனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

சங்கானை, வட்டுக்கோட்டை, கொக்குவில் ஆகிய பகுதிகளில் இவை நிர்மாணிக்கப்பட்டு செயற்பட ஆரம்பித்து விட்டன. இதன் மூலம் அப்பகுதிகளில் நிலவி வந்த வலையமைப்பு நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்றும் ரெலிகொம் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன. (50-ரி)

## மின் இணைப்புப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜன.11

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினரால் மின் இணைப்புப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த 16-35 வயதுக்குமிடைப்பட்டவர் தமது விண்ணப்பங்களை தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (9)

## வேலையாள்கள் தேவை

1.சிற்றுண்டி தயாரிப்பவர்கள்
2.சிற்றுண்டி பரிமாறுபவர்கள் (சப்பிளையர்)
3.கைவேலை செய்வதற்கு (பெண்கள், ஆண்கள்)
4.சமையல் தெரிந்தவர்கள் (அசைவம்)
5.காசாளர் (கணக்கு மெசின் பாவித்து பில், கணக்குகள் செய்யக்கூடியவர்கள்)

* உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

வயது 20 -40 வரை
தொடர்பு: DILAN HOTEL
133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/564009)

## விற்பனைக்கு

அளவெட்டி,கணேஸ்வரம், அணிஞ்சிலடிப்பிள்ளையார் கோயில் அருகில் 4 பரப்புக் கணியில் அமைந்த 3 அறைகளுடன் கூடிய வீடு மற்றும் MINI SONY VIDIO CAMARAவும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
021 4591379,0778696678
(93639)

## தேவை

எமது விற்பனை நிலையத்திற்கு கணக்குப் பதிவாளர் (பெண்) தேவை. முன்னனுபவம் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.


தொடர்பு: ரமணன் கட்டடப்பொருள் விற்பனை நிலையம்,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 9296, 077 0760225
(சி/564081)

## தொடர்பு கொள்ளவும்

நாகேந்திரம் ஐங்கரன் (அறிவியல் நகர்) திருவையாறு ப.வா.தி விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய நா.ஐங்கரன் என்பவர் எங்கிருந்தாலும் மிக அவசரமாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு: T.P: 0779484834
பொ.பத்மசாந்தன்,
245, திருநாவற்குளம், வவுனியா.
(93650)

புவே செற்
வீட்டுக்கு
மற்றும்
ஹோட்டலுக்கு



ரூ.3,950/-இலிருந்து
டீலெக்ஸ் என்டர்பிரைஸ்
2439422

## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 531
திகதி 2010/01/09

சுப்பர் இலக்கம்: 04

வெல்லப்பட்ட இலக்கங்கள்: 32 48 53 63

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 21,137,376.00 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 10 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 244 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 483 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 11,974 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 6,963 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 173,504 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 27,726 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 8,253,080.00
சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டதிட்டங்களுக்கு உட்பட்டது
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை சட்டமாக்கப்பட்டுள்ளது.

அடுத்தவாரம் இரண்டு முதல் பரிசுகள் ரூ. 21,425,844.80

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில்
கிராம அலுவலராகக்
கடமையாற்றும்
சி.பாலசுந்தரம்
அவர்களின் அன்புத் தந்தை

### நமசிவாயம் சின்னத்துரை

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வலி.கிழக்கு, கோப்பாய். (93628)

பிரதேச செயலரும்,
அனைத்து அலுவலர்களும்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு
18
★
04
★
1953



உதிர்வு
12
★
12
★
2009

கடந்த 12.12.2009 அன்று சிவபதமடைந்த

### செல்வி சிவசாமி குமரேஸ்வரி

(ஆசிரியை, யா/ யூனியன் கல்லூரி)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.01.2010) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாச்சிமார் கோயிலடி,
1043, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (93613)

பா.கோமளேஸ்வரி,
சி.நேசலட்சுமி (சகோதரிகள்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20
★
02
★
1917



உதிர்வு
08
★
01
★
2009

### அமரர் வல்லிபுரம் மாணிக்கம்

எம்மிரு விழிகளிலும் கண்ணீர் ஓயவில்லை
பன்னிரு திங்கள் பறந்தனவே நொடிப்பொழுதில்
கண்ணின் மணிபோல எமைக்காத்த அம்மாவே!
என்றென்றும் நின்நினைவு எம்முடனே

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (சி/564000)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ජනරාල් සරත් ෆොන්සේකා
ஜெனரல் சரத்பொன்சேகா
General Sarath Fonseka

# அரச ஊழியர்களுக்கு ஒரு பகிரங்க மடல்

அன்பார்ந்த நண்பர்களே,

சகல ஸ்ரீலங்கா பிரஜைகளினதும் - ஏன் அவர்களின் வருங்கால சந்ததிகளினதும் கூட - எதிர்காலம் சிக்கலுக்கு உள்ளாகியுள்ள இந்த நெருக்கடியான முக்கிய காலகட்டத்தில், அரச சேவையில் உள்ள எனது நண்பர்களாகிய உங்களுடன் இந்த மடல் மூலம் தொடர்புகொள்ள வாய்ப்புக் கிடைத்தமையையிட்டுப் பெருமையும், மகிழ்வும் அடைகிறேன். நானும், கடந்த ஒக்டோபரில் ஓய்வு பெறும் வரை நாற்பது வருடங்களுக்கு மேல் இலங்கை இராணுவத்தில் பணியாற்றி, அரச சேவையில் உங்கள் சகாவாக இருந்து வந்துள்ளேன் என்பது நீங்கள் நன்கு அறிந்ததே. பெருமைக்கும், கௌரவத்துக்கும் உரிய உங்கள் சேவையின்போது நீங்கள் எதிர்கொண்ட சகலவிதமான சிரமங்களுக்கும், நெருக்குவாரங்களுக்கும் அரச ஊழியன் என்ற முறையில் நானும் உட்பட்டே வந்துள்ளேன்.

அரச சேவை என்பது அரசின் முகாமைத்துவ கரம் என்று நான் குறிப்பிடுவதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

கொள்கை வகுத்தல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளுதலிலும், பொது மக்களுக்குத் திறமையான, பயன்மிக்க, பொருளாதாரக் கட்டுப்படியான சேவைகளை வழங்கும் விடயத்திலும் அரசு, அரச சேவையினரின் அனுபவத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, அரசின் கொள்கை முடிவுகளை நீதியாகவும், அச்சமோ, பக்கச்சார்போ இன்றியும் நடைமுறைப்படுத்துவதோடு, நல்லாட்சியின் காவலர்களாகப் பங்காற்றவும், தத்தமது பெறுபேறுகள் தொடர்பான பக்கச்சார்பற்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் வெகுமதியளிக்கவும் தகுதியுடையவர்கள் அரச ஊழியர்கள் என்பதே எதிர்பார்ப்பாகும்.

ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் கீழ் கவலைக்கிடமாக மட்டுமன்றி, அபாயகரமான போக்கிலும் இவை சென்றுகொண்டிருப்பதே எமது பட்டறிவாகவும் நாங்கள் முழுமையாக அறிந்துகொண்ட விடயமாகவும் உள்ளது. அரச சேவையின் மிக முக்கிய பங்குபணியும், செயற்பாடும் முழுமையாகப் பாதிக்கப்பட்டு வீழ்ச்சியடைந்துகொண்டிருக்கின்றன.

அரச சேவையின் சுயாதீனத்தையும், அதன் அங்கத்தவர்கள் நியாயமற்ற பழிவாங்கல்களுக்கு உள்ளாகாமல் இருப்பதையும் உறுதிப்படுத்துவதற்கான எதிர்பார்ப்போடு அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனினும், தற்போதைய ஜனாதிபதியின் பிடிவாதப் போக்கால் அது வேண்டுமென்றே நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது.

தனது கையாட்கள், ஏவலாட்கள் தொகுதியின் பங்கு அணியினரே அரச ஊழியர்கள் என்ற தமது திமிர்த்தனமான அகம்பாவப் போக்கையே தற்போதைய அரசு வெளிப்படுத்தி வருகின்றது என்பதை இங்கு வலியுறுத்திக் காட்டத் தேவையில்லை. ஒருகாலத்தில் கௌரவம் மிக்க, மதிப்பார்ந்த துறையான அரச ஊழியர் சேவை இப்போது அரச தரப்பு அரசியல்வாதிகளின் ஏவலை சிரம் மேல் ஏற்று முக்கியத்துவமில்லாத - இழிந்த - பணியை முன்னெடுக்கும் சேவையாகவும் அதிகளவில் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒருகாலத்தில் கௌரவிக்கப்பட்ட அரச சேவைத்துறை கவலைக்குரிய விதத்தில் முற்றாகப் பிழைத்துப் போயுள்ளது. அரச ஊழியரின் உரிமைகள் கீழ்மைப்படுத்தப்பட்டுள்ளதோடு, அத்துறையினரின் பக்கச்சார்பற்ற, பெறுமதிமிக்க சேவையின் பயனைப் பெறும் வாய்ப்பும் பொதுமக்களுக்கு மறுக்கப்பட்டும் உள்ளது.

எனவே, எமது அண்மைக்கால சரித்திரத்தில் நெருக்கடி மிகுந்த இந்த முக்கிய காலகட்டத்தில், அரச சேவையின் கௌரவத்தைப் பேணி, மேம்படுத்தி மீளப்பெறச் செய்வதற்கு எங்கள் தேசம் உங்களின் முழு ஈடுபாடான திடசங்கற்பத்தை கௌரவத்துடன் வேண்டி நிற்கின்றது.

உங்களின் அத்தகைய திடசங்கற்பத்துடன் கூடிய சொந்தப் பங்களிப்பு, மக்களுக்குப் பயன்தரத் தக்க வகையில் சட்டரீதியான நிர்வாக ஆட்சி முறைமையை மீள ஏற்படுத்தும் செயற்பாட்டை உறுதிப்படுத்தும்.

எனது குறிக்கோள் இலச்சினை 'எமக்கு முன் நாடு' என்பதே. அதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். நான் ஒழிப்பதற்கு உறுதியளித்துள்ள இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை, உங்களுக்குப் போட்டுள்ள மூக்கணாங்கயிற்றுள் சிக்குண்டு கிடக்காமல், நாட்டை முன்னிறுத்தி எனது அரசில் முன்னணியினராகச் செயற்படவேண்டிய உங்கள் பங்கை நீங்கள் உரிய முறையில் ஆற்றுவீர்களானால் அது மெச்சத்தக்கதாகும்.

நீதி, நியாயமான ஒரு தேர்தலுக்கு உங்களின் பெறுமதிமிக்க சேவையையும், உதவியையும் தற்போது இந்த நாடு எதிர்பார்த்து நிற்கின்றது. நீங்கள் மதிப்பார்ந்த அரச ஊழியன் என்ற முறையில் பக்கச்சார்பின்றி, வெளிப்படையாக, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் செயற்படுவதையே நாடு இன்று உங்களிடம் எதிர்பார்த்து நிற்கின்றது. நீங்கள் எப்போதும் சட்டத்தின் ஆட்யை நிலைநிறுத்துவீர்கள் என்பதில் எனக்கும், பொதுவாக மக்களுக்கும் எந்தச் சந்தேகமும் கிடையாது.

எனது தலைமையில் அமையும் எனது அரசு, இழக்கப்பட்ட உங்களின் சேவைத்துறையின் மகத்துவத்தையும், சுதந்திரத்தையும் எந்தவிதப் பின்னடிப்புமின்றி மீளப்பெற்றுத் தரும் என்பதை அரச சேவையில் உங்களின் முன்னாள் சகா என்ற முறையில் உங்களுக்கு நான் உறுதிப்படுத்த விரும்புகிறேன். அத்தோடு, உங்களுக்கு நஷ்டஈடு தரும் வகையில் போதியளவு ஊதியத்தையும் ஏனைய வசதிகளையும் வழங்குவதுடன், கடந்த காலத்தில் அல்லது தற்போது சட்டவிரோதமான முறையில் நீங்கள் பழிவாங்கப்பட்டிருந்தால் அதற்கும் உரிய நிவாரணம் அளிப்பதன் மூலம் உங்களின் சேவையின் தரம் மேம்படுத்தப்படும் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

எனவே, தற்போதைய குழப்பகரமான, நெருக்கடியான நிலைமையிலிருந்து நாட்டைக் காப்பாற்றி, ஸ்திரமான, நற்பண்புகள் மிக்க, சுபீட்சமான சகாப்தத்துக்குக் கட்டியம் கூறுவதற்கு உண்மைபூர்வமான அரச ஊழியன் என்ற ரீதியில் என்னோடு கைகோக்குமாறு உங்களை அழைக்கிறேன்.

நன்றி


உங்கள் அன்பன்,

ஜெனரல் சரத் பொன்சேகா
பொதுவேட்பாளர்

# தரமும் தனித்துவமும் கொண்ட லீலா கலண்டர்கள், டயறிகள்

இலங்கையின் பதிப்பகத்துறையில் தன்னிகரற்று விளங்கும் லீலா பிரஸ் பிரைவேட் லிமிட்டெட்டினர் வ்ழமை போன்றே இம்முறையும் மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்ற லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்களையும் கண்கவர் வகையிலான பெரிய, சிறிய அளவுகளைக் கொண்ட டயறிகளையும் வெளியிட்டுள்ளது.

தமிழுலகின் முதன்முதல் ஒரே ஒரு சித்திரக் கலண்டராக வெளிவந்து சாதனை படைத்த லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்கள் இம்முறையும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத் திருநாள்கள், மாணவ சமூகத்திற்கேற்ற விஞ்ஞானத் தகவல்கள், வெளிநாட்டு, உள்நாட்டு அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், உலக அதிசயங்கள் தொடர்பான விபரங்களை




உள்ளடக்கியுள்ளமை விற்பனைச் சந்தையில் லீலா பதிப்பகத்துக்கென தனியிடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

லீலா சித்திரக் கலண்டர்கள் கடவுளர்கள் மற்றும் பல்வேறுவிதமான அழகிய தரமான படங்களுடன் வெளிவந்துள்ளமை பலரையும் கவர்ந்துள்ளது. தாம் விரும்பியவற்றைத் தெரிவு செய்யுமளவுக்கு ஏராளமான வடிவங்களில், வர்ணங்களில் இக்கலண்டர்கள் காணப்படுகின்றமை சிறியோர் வரை அனைவரையும் தன் பக்கம் ஈர்த்துள்ளது.


கலண்டர்களைப் போன்றே லீலா டயரிகளுக்கும் தனி மதிப்புண்டு. பொக்கட் டயரி முதல் மனேஜ்மண்ட் டயரிவரை பலவர்ணங்களைக் கொண்ட வடிவங்களில் இந்த டயறிகள் காணப்படுகின்றன.

டயறிகளிலும் பல தகவல்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், வரைபடங்கள் போன்றவை இருப்பது பாவனையாளர்களை பெருமளவில் கவர்ந்துள்ளது.

லீலா பஞ்சாங்க, சித்திரக் கலண்டர்கள், டயரிகள் தரத்தில் தனித்துவமாக விளங்குவது போன்றே சகல மக்களும் வாங்கக் கூடிய வகையிலான விலைகளிலும் கிடைக்கின்றது.

தரத்தில் சிறந்ததாகவும் விலையில் குறைந்ததாகவும் லீலா தயாரிப்புகள் காணப்படுகின்றமையே மக்கள் மத்தியில் இத்தயாரிப்புகளுக்கெனத் தனியிடத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளது.

# அதிகம் கோபப்படுவது யார்?



சமீபத்தில் கனடாவின் டொரான்டோ பல்கலைக்கழக சமூகத்துறை குழுவினர் ஒரு ஆய்வு செய்தனர். 'சமூக அமைப்பில் கோபத்தின் பங்கு' என்ற தலைப்பில் நடத்தப்பட்ட ஆய்வில் கிடைத்த முடிவுகள் சற்று வித்தியாசமானவை.

18 வயதுக்கு மேற்பட்ட ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் ஆய்வு செய்யப்பட்டனர். இதில் இளம் பருவத்தின் மூப்பில் அதாவது சுமார் 30 வயதில் இருந்து 40 வயது உடையவர்களே அடிக்கடி உணர்ச்சி வசப்படுகிறார்கள் என்று தெரியவந்தது. அவர்களின் வாழ்க்கைச் சூழல் பணநெருக்கடி பல்வேறு சூழல்களால் ஏற்படும் மன அழுத்தம் போன்றவற்றால் அடிக்கடி கோபம் அடைகிறார்கள்.


அதேபோல் அதிகம் படித்தவர்களைவிட, அரை குறையில் படிப்பை கைவிட்டவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுகிறார்கள். குழந்தைகளும் குடும்பச்சூழலைப் பொறுத்து கோபம் கொண்டதாகவும், அதற்கேற்ற பழக்கவழக்கம் உடையதாகவும் வளருகிறது. ஆண்களைவிட பெண்களே அதிகம் கோபப்படுகிறார்கள்.

தனிப்பட்ட முறையில் பெரும்பாலானவர்கள் பண நெருக்கடியால் அதிகளவு கோப உணர்ச்சிக்குத் தள்ளப்படுகிறார்கள். இன்னும் சிலர் தனிப்பட்ட முறையில் பெரும் கோபக்காரராகவும் சமூக அமைப்பில் அதற்கு நேர்மாறாகவும் இருக்கிறார்கள்.

இந்த வினோதமான ஆய்வு முடிவுகள், கோபத்தைப் பற்றிய பிரபல புத்தகமான 'இன்ரநேஷனல் ஹண்ட்புக் ஆப் ஆங்கர்' என்ற நூலின் 4 ஆவது பாகத்தில் வெளிவர இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேஸ்வரன் ஞாபகார்த்த மணி மண்டபத் திறப்பு விழாவின் போது...



மணி மண்டபத்தின் நினைவுப்பெயர்க் கல்லை ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியா திரைநீக்கம் செய்து வைப்பதையும் இந்துக் குருமார்கள் வேதபாராயணம் செய்வதையும் முதலிரு படங்களில் காணலாம்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ சம்பு மகேஸ்வரக்குருக்கள் மணிமண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், மகேஸ்வரனின் புதல்வன் மங்கலச் சுடர் ஏற்றுவதையும், மகேஸ்வரனின் துணைவியார் விருந்தினர்களுடன் நிற்பதையும் அடுத்துள்ள மூன்று படங்களிலும் காணலாம்.

விழா மேடையில் சக்தித் தொலைக்காட்சிப் பணிப்பாளர் ஸ்ரீ ரங்கா, தமிழர் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஐ.தே.காவின் தவிசாளர் சுவாமி நாதன், ஐ.தே.க.பிரதித் தலைவர் கருஜயசூரிய, யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ஞானக்குமரன், இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி வேதநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரையும், மணிமண்டபத்தின் முகப்புத் தோற்றத்தையும் அடுத்துள்ள படங் களில் காணலாம்..

விழாவில் ஐ.தே.க.பிரதித் தலைவர் கருஜயசூரிய, ஐ.தே.க.தவிசாளர் சுவாமிநாதன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி மற்றும் மகேஸ்வரக் குருக்கள் ஆகியோர் உரைநிகழ்த்துவதை இறுதி நான்கு படங்களிலும் காணலாம். (படங்கள்: குகா, பிரபா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஸி.கல்வி நிதியத்தின் உதவிபெறும் மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.11

இலங்கை மாணவர் கல்வி நிதியம் அவுஸ்திரேலியா என்ற அமைப்பின் உதவி பெறும் மாணவர்களின் ஒன்று கூடலும் உதவி வழங்கலும் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையச் செயலாளர் த.தயானந்தன் அறிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் ஸ்தாபகரும் பொருளாளருமான லெ.முருகபூபதியும் மற்றும் குழுவினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள நல்லூர், தென்மராட்சி, நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், வலி.மேற்கு, வலி.தென்மேற்கு, வலி.தெற்கு, வடமராட்சி வடக்கு, வடமராட்சி தென்மேற்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரதேசத்தில் வதியும் போர்க்கால சூழலில் உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த 105 கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு உதவி வழங்கப்படவுள்ளது. (1-16)

# மரண விசாரணை அதிகாரி பதவிக்கு தகைமையுடையோர் தொடர்புகொள்ளக் கோரிக்கை

நல்லூர்,ஜன.11

நீதி அமைச்சு கோரிய தகைமைகள் உடையவர்கள் தன்னுடன் தொடர்பு கொண்டால் மரண விசாரணை அதிகாரி நியமனம் கிடைக்கக் கூடியதாக நடவடிக்கை எடுக்கப்படும் என நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் தெரிவித்தார்.

நெடுந்தீவுப் பகுதிக்கான மரணவிசாரணை அதிகாரி ஒருவர் இல்லாத நிலையில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நெடுந்தீவில் ஏற்படக்கூடிய மரணங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக இறந்தவர்களின் சடலங்களை ஊர்காவற்றுறை மற்றும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நெடுந்தீவுக்கான மரணவிசாரணை அதிகாரியை நியமிக்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டதை அடுத்து சுமார் 4 வருடங்களுக்கு முன்னர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டதாகவும், எனினும் அவருக்கும் அதற்கான நியமனம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் கடற்படை அதிகாரிகள், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பொது மக்களுக்கிடையிலான சந்திப்பு ஒன்று நடைபெற்றபோது மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (50-111)

## ஓய்வூதியக் கொடுப்பனவு திகதிகள் அறிவிப்பு

அச்சுவேலி,ஜன.11

2010 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான திகதிகள் ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஓய்வூதியத் திணைக்களத்தின் 06.12.2009 ஆம் திகதிய 19/2009 இலக்க சுற்றறிக்கையின் மூலம் 2010 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு தினங்கள் தொடர்பான விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஜனவரி-07 ஆம் திகதி- வியாழக்கிழமை, பெப்ரவரி-10 ஆம் திகதி- புதன்கிழமை, மார்ச்-11 ஆம் திகதி- வியாழக்கிழமை, ஏப்ரல்-08 ஆம் திகதி- வியாழக்கிழமை, மே-06 ஆம் திகதி- வியாழக்கிழமை, யூன்-10 ஆம் திகதி- வியாழக்கிழமை, யூலை-09 ஆம் திகதி- வெள்ளிக்கிழமை, ஒகஸ்ட்-12 ஆம் திகதி- வியாழக்கிழமை, செப்ரெம்பர்-09 ஆம் திகதி- வியாழக்கிழமை, ஒக்டோபர்-07 ஆம் திகதி- வியாழக்கிழமை, நவம்பர்-11 ஆம் திகதி- வியாழக்கிழமை, டிசெம்பர்-09 ஆம் திகதி- வியாழக்கிழமை. (9-11)

# வன்னிப் பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர், ஆசிரியர்களுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்

## இலங்கை ஆசிரிய சங்கத் தலைவர் கல்வியமைச்சிடம் கோரிக்கை

அச்சுவேலி, ஜன.11

''வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள பாடசாலைகளில் மீளச்செயற்படும் பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர், அதிபர்களுக்கு விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு மாதாந்தம் வழங்கவேண்டும். இதற்கான ஏற்பாட்டைக் கல்வி அமைச்சு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்''.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசேப் ஸ்ரான்லின் கல்வி அமைச்சர் சுசில்பிரேம்ஜெயந்தவிடம் இந்தக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இடம்பெயர்தலுக்குப் பின்னர் மீளக் குடியேறிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கடமைபுரியும் அதிபர், ஆசிரியர்களுக்கு சமகாலத்தில் அவர்கள் எதிர்நோக்கும் வசதிக்குறைவுகள் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு கடமை ஊக்குவிப்புக்கான விசேட ஊழியர் கொடுப்பனவு வழங்கவேண்டும்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையங்களில் கடமை புரிந்த வைத்தியர்கள் மற்றும் அதிகாரிகளுக்குக் கடமை ஊக்குவிப்புக்கான விசேட கொடுப்பனவுகள் மாதாந்தம் வழங்கப்பட்டு வந்தன. ஆனால் ஆசிரியர்களுக்கு எந்தவிதமான ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

தற்பொழுது வன்னியில் மீள செயற்படும் பாடசாலைகளுக்கு கடமைக்குத் திரும்பும் ஆசிரியர்கள் தங்குமிட வசதி, உள்ளூர் போக்குவரத்துவசதி, உணவு வசதி, தொற்றுநோய் உட்படப் பல்வேறு சிரமங்களுக்கும் பாதிப்புக்களுக்கு உள்ளாக வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளனர்.

இதனைக் கருத்தில்கொண்டே தற்காலிக இணைப்புக்களை முடிவுறுத்தி மீளக் கடமைக்குத் திரும்புவதற்குத் தயங்குகின்றனர். இந்த நிலைப்பாட்டில் நியாயம் இல்லாமல் இல்லை. இவர்களின் இந்த நிலைமையைக் கருத்தில்கொண்டு மீளக் கடமைக்குத் திரும்பிய ஆசிரியர், அதிபர்களுக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு மாதாந்தம் வழங்கப்படவேண்டும்.

இத்தகைய கொடுப்பனவு கடமையின் நிமித்தம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை ஓரளவு சீர் செய்வதற்கும் ஆர்வத்தோடு தமது கடமைகளின் பொறுப்புக்களில் ஈடுபடுவதற்கும் உறுதுணையாக அமையும்.

இத்தகைய விசேட கொடுப்பனவு யுத்த நடவடிக்கைகளில் ஆரம்ப காலகட்டத்தில் வடக்கு, கிழக்கில் கடமை புரிந்த ஆசிரியர் அதிபர்கள் உட்பட சகல ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டதோடு அண்மைக்காலத்தில் நலன்புரிநிலையங்களில் கடமையாற்றிய வைத்தியர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது எனத் தெரிவித்தார். (9-11)

# செஞ்சிலுவைத் தொண்டர்கள்; டெங்கு ஒழிப்பில் தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜன.11

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினர் சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர், உடுவில், நெடுந்தீவு, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரிவுகளில் டெங்கு நோய் எதிர்ப்பு நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காக ஒவ்வொரு பிரிவுக்கும் ஒலி பெருக்கியுடன் கூடிய முச்சக்கரவண்டியும் தலா 30 இற்கு மேற்பட்ட தொண்டர்களும் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்கின்றனர். அத்துடன் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் முதற்கட்டமாக 50 நுளம்பு வலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க 10 ஆயிரம் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் மேலதிகமாக 10 ஆயிரம் துண்டுப் பிரசுரங்கள் செஞ்சிலுவை சங்கத் தொண்டர்கள் ஊடாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் பேராசிரியர் வி.ஜே.கணேசலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் டெங்கு நோய் ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். சங்க உறுப்பினர்களால் வீதி நாடகம் பல இடங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது.

நேற்று மருதனார்மடம் சந்தி, சுன்னாகம் சந்தி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட வீதி நாடகத்தைப் பெருமளவு மக்கள் பார்வையிட்டனர். (ஓ-38)

# ஐந்துகண் மதகு துரித புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

சண்டிலிப்பாய் சீரணிச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள ஐந்து கண் மதகுப் பாலத்தில் சேதமடைந்த ஒரு பகுதியினை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் துரிதமாகப் புனரமைத்துள்ளனர்.

இப்பாலம் சேதமடைந்து காணப்பட்டதால் மூன்று நாள்கள் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இளவாலை, காரைநகர் உட்படப் பல இடங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் போக்குவரத்துச் செய்யும் பிரதான வீதியாகச் சண்டிலிப்பாய் சீரணிப் பாதை அமைந்துள்ளது. இப்பாதையில் காணப்படும்ஐந்து கண் மதகுப் பாலம் கடந்த மூன்று நாள்களாக உடைந்து காணப்பட்டது.

இதனால் மினிபஸ், கனரக வாகனங்கள், மற்றும் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் என்பன மானிப்பாய்ச் சந்தியிலிருந்து உடுவிலைச் சென்றடைந்து டச்சு வீதியூடாகச் சண்டிலிப்பாயைச் சென்றடைந்து அங்கிருந்து இளவாலை, காரைநகர் உள்ளிட்ட பகுதிகளுக்குச் செல்லவேண்டியேற்பட்டது.

இதனைக் கருத்திற்கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் விரைந்து சென்று துரிதகதியில் சேதமடைந்த பாலத்தினை மக்கள் போக்குவரத்துக்கேற்ற வகையில் தற்காலிகமாகப் புனரமைத்துள்ளனர்.

தற்போது இவ்வீதியால் பொதுமக்கள் சிரமமின்றி போக்குவரத்துச் செய்வதைக் காணமுடிகிறது. (9)

# சங்கானை, அராலி பகுதிகளின் குடியிருப்பாளர்களுக்கு காணி உறுதிகள் வழங்க விரைவில் நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.11

அராலி மத்தி ஊரத்தி மற்றும் சங்கானை தெற்கு பகுதிகளில் உள்ள மக்களுக்கு விரைவில் காணி பகிர்ந்தளிக்கப்படும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக இத்திட்டம் பூரணப்படுத்தப்படும் என்று சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அராலி மத்தி ஊரத்தி காணியில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக 30 குடும்பங்களும் சங்கானை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 28 குடும்பங்களுமாக மொத்தம் 58 குடும்பங்கள் காணியுறுதி அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

மேற்படி காணிகள் யாவும் வலி.மேற்குப் பிரதேச சபை செயலாளரின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

இக்காணியை விரைந்து பகிர்ந்து வழங்குவதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளேன்.

மேற்படி விடயம் தொடர்பாக பிரதேச சபை செயலாளருடன் தொடர்புகொண்டு உரிய காணி உரிமையை விரைந்து வழங்குவதுடன்-

வீடுகள் மற்றும் பொதுநோக்கு மண்டபம் என்பன அமைத்துத் தருவதற்கும் நடவடிக்கை எடுப்பேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

இதேவேளை-

வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் அ.புத்திசிகாமணி காணி வழங்குவது தொடர்பாக துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (9-302)

# வடமராட்சி மாணவர்களுக்கான உதயனின் புதிர் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

வடமராட்சி மாணவர்களுக்கென பிரத்தியேகமாக உதயன் நிறுவனம் பரிசுப்போட்டி ஒன்றினை அண்மையில் நடத்தியிருந்தது இப்போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களின் விவரம் வருமாறு:-

குலுக்கல் போட்டியில்பரிசு பெற்றோர்

அதி கூடிய மாணவர்கள் பங்கு பற்றிய பாடசாலைகள்

1.வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
2. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
3. கரணவாய் மகா வித்தியாலயம்

உதயன் இலச்சினைகள் ஒட்டிய மாணவர்கள்

1ம் பரிசு ஜெ.யதுர்ஜா யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரபாடசாலை பருத்தித் துறை ரூபா 10.000/=

*(உதயன் இலட்சினை சரியாக ஒட்டி அனுப்பப்படவில்லை)*

2ம் பரிசு கி.யதுர்ஜா அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் ரூபா (20,000/=)

3ம் பரிசு செ.தனுசன் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் ரூபா 2500= *(உதயன் இலட்சினைசரியாக ஒட்டி அனுப்பப்படவில்லை)*

1 மாதத்துக்கான நாளிதழ் பரிசாகப் பெறுபவர்கள்- ஆறுதல் பரிசு

பி.தீபிகா -வடமராட்சி இந்து மகளிர், ஜெ.ரஜீந்தினி-வடமராட்சி இந்து மகளிர், வா.தக்ஷாயினி-வடமராட்சி இந்து மகளிர், இ.மிதிறா-வடமராட்சி இந்து மகளிர், கு.பிரதீபன்-நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், ஜோ.சிந்துஜன்- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், ஜெ.அனுசியா- அம்பன் அ.மி.த.பாடசாலை, ம.அன்ரன் தோம்சன்-வதிரி திரு இருதயக்கல்லூரி, பா.ராஜ்குமார்-கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, பி.மதுஷா- மெதடிஸ்த பெண்கள் உயர். பாடசாலை, கு.பிரதீப்-நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை, ரா.கோகிகன்- கரணவாய் மணியகாரன் தோட்டம்,ச.கிருந்திகா-வட.மத்திய மகளிர் கல்லூரி,சி.சர்மிலா-வட.மத்திய மகளிர் கல்லூரி,சி.லக்ஷனா- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை,ம.ஆதித்தியா- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்,

வி.அம்பிகா- கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி,ச.கபில்-கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி,பா. ஆர்த்திகன்-நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை, கி.மேகநாதன்- கரவெட்டி விநாயகர் வித்தியாலயம், ரா.துஷ்யந்தினி- தம்:சிட்டி மெ.மி.க.த.பாடசாலை,ச.அபிலஷா- வட மத்திய மகளிர் வித்தியாலயம், ம.வெசிங்கன் அன்ரனி- பொலிகண்டி இ.த.க.பாடசாலை, ம.குணாளன்- கரவெட்டி ஞானசாரியார் வித்தியாலயம், யோ.அமிர்தவர்ஷினி-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கு.சாளினி- கெருடாவில் தெற்கு த.க.பாடசாலை, ஈ.இராஜேஸ்வரன்-கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, தா.அபிராமிதன்- தேவரையாளி இந்துக் கல்லூரி, உ.பிரியங்கினி- வல்வை மகளிர் வித்தியாலயம், சி.கபேசன்- நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், தெ.அகிலா-மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, சி.ராகுலன்- புட்டளை மகாவித்தியாலயம், சி.தமயந்தன்-வல்வெட்டி இ.த.க.பாடசாலை, தி.நிதர்சன்-கரணவாய் மகாவித்தியாலயம், ம.அமிர்தினி- தும்பளை சிவப்பிரகச மகா வித்தியாலயம்,க.கேதவன்- உடு.அமெரிக்கன் மிஷன் கல்லூரி, சி.சுகன்யா- வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம், க.ஹரிகரசர்மா- ஹாட்லிக் கல்லூரி, ச.எழிலினி- மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, செ.விஷ்ணுமீரா- வட இந்து மகளிர் கல்லூரி, ம.கவியரசன்-கரவெட்டி விக்னேஸ் வராக் கல்லூரி,கி.கேயன்- உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன், பு.பிரிந்தாமினி- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, கே.அஸ்வினி- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, அ.விதுஷா- குடத்தனை கரையூர் அ.மி.த.க, ப.மதுஜன்- உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன், ஜெ.தபிஷா- தட்டாதெரு மெ.மி.த.க பாடசாலை, து.அனுஷா- கரவெட்டி விநாயகர் வித்தியாலயம், ஆ.அருண்- உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன், ந.அபிநயன்- இமையாணன் அரசினர் த.க. பாடசாலை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தம்முடைய அரசியல் நெறியால் தமிழர்கள் மற்றும் சிங்களவர்களிடையே வரவேற்புப் பெற்றவர்

## அமரர் மகேஸ்வரன் குறித்து கரு ஜெயசூரிய



தமிழ் மக்களும், சிங்கள மக்களும் ஒரே தன்மை கொண்டவர்களே என்பதைப் புரிந்துகொண்டு இவ்விரு இனத்தவர்களோடும் இணைந்து சீரிய அரசியல் செய்தவர் மகேஸ்வரன். இவ்வாறு மகேஸ்வரன் மணிமண்டபத் திறப்புவிழாவின்போது ஐக்கியதேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த நிகழ்விலே கலந்துகொண்டிருக்கும்போது சந்தோஷமும், கவலையும் மாறிமாறி வருகின்றன. கடைசியாக நான் யாழ்ப்பாணம் வந்தபோது மகேஸ்வரனே என்னை இங்கு அழைத்து வந்திருந்தார். ஆனால் இன்று அவர் நம்மோடு இல்லை. இதை நினைக்கையில் துக்கம் மேலிடுகிறது. உண்மையில் தன்னுடைய அரசியல் நெறியால் மக்களிடையே மகோன்னதமான வரவேற்பைப் பெற்றவராக அவர் இருந்தார். சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே அவர் வேற்றுமை எதையும் காணவில்லை. உண்மையும் அதுதான். எல்லோருடைய இரத்தமும் எல்லோருடைய கண்ணீரும் ஒரேமாதிரித்தான் இருக்கின்றன. இவற்றில் எவ்வித வேறுபாட்டையும் கண்டறிய முடியாது. தன்னுடைய கணவரின் கனவினை நிறைவேற்ற மகேஸ்வரனின் துணைவியார் இந்த மணிமண்டபத்தை மிகுந்த சவால்களின் மத்தியில் உருவாக்கியுள்ளார். அவருடைய பணியினைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. மகேஸ்வரனின் சேவைகள் மக்கள் மனதிலிருந்து என்றைக்குமே மறையமுடியாதபடி இந்த மண்டபம் அமைந்திருக்கிறது-என்றார். (01-04)

# அபிவிருத்தியை மனதில்கொண்டு இப்பகுதி மக்கள் சுயமாகச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்

## ஐ.தே.க.பொருளாளர் சுவாமிநாதன்



ஐம்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் இருந்ததை விடவும் இப்போது அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இந்தநிலை மாறவேண்டுமானால் எதிர்வரும் தேர்தலில் நாட்டின் அபிவிருத்தியை மனதில்கொண்டு மக்கள் சுயமாக வாக்களிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இவ்வாறு மகேஸ்வரனின் ஞாபகார்த்த மணிமண்டபத் திறப்புவிழாவின்போது ஐக்கியதேசியக் கட்சியின் பொருளாளர் சுவாமிநாதன் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்:

ஒருமுறை நான் பணிபுரிகின்ற பொன்னம்பலவாணேஸ்வரத்தின் எதிர்காலம் பற்றி சோதிடர் ஒருவர் கணித்திருந்தார். அதன்படி எமது ஆலயத்தில் மிக விரைவில் ஒரு சூட்டுச் சம்பவம் நடைபெறும் என்று அவர் கூறியிருந்தார். அவர் கூறியபடியே சில நாள்களில் மகேஸ்வரன் எம்முடைய ஆலயத்தில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். மறுமுறை அந்த சோதிடர் வந்தபோது மகேஸ்வரனுக்கு ஏன் இவ்விதம் நேர்ந்தது என்று அவரிடம் வினவினேன். அதற்கு மகேஸ்வரன் ஒரு சிவபக்தன் என்பதால் அவருக்கு எவருக்குமே கிட்டாத சிவமோட்சம் பொன்னம்பலவாணேஸ்வரத்தில் கிட்டியிருக்கிறது என்று கூறினார். ஆகவே அதன்பின்னர் மகேஸ்வரனின் மறைவு தொடர்பாக நான் கவலைப்படும்போது அவருக்கு சிவமோட்சம் கிடைத்ததையிட்டே ஆறுதல் கொள்கிறேன்.

நான் ஐம்பது வருடங்களாக யாழ்ப்பாணத்துக்கு வந்துபோய்க்கொண்டிருக்கிறேன். இந்த ஐம்பது வருடங்களில் அபிவிருத்தியில் யாழ்ப்பாணம் எந்தவகையிலும் முன்னேறியதாகத் தெரியவில்லை. ஒருவகையில் சொல்லப்போனால் ஏனைய பிரதேசங்களைவிடவும் யாழ்ப்பாணம் மட்டுமல்லாது வடபகுதி முழுவதுமே அபிவிருத்தியில் பின்தங்கி நிற்கின்றது என்றே சொல்லவேண்டும். இந்தநிலை மாறவேண்டும். அதற்காக ஒவ்வொருவரும் தம்முடைய வாக்குகளைச் சரிவரச் சிந்தித்து அபிவிருத்தியை முன்நிறுத்தி அளிப்பதற்கு முனையவேண்டும்-என்றார். (01-04)

# தமிழ் அரசியல்வாதிகளிடையே துணிச்சல் மிக்கவராக திகழ்ந்து வித்தியாசமானவராக மிளிர்ந்தவர் மகேஸ்வரன்

## கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி



இன்றுள்ள தமிழ் அரசியல்வாதிகளிடையே வித்தியாசமானவராகவும் துணிச்சல்மிக்கவராகவும் விளங்கியவர் மகேஸ்வரன். எதற்குமே தயங்காத அவருடைய இயல்பும் சேவைநோக்கும்தான் இன்றளவும் அவருடைய புகழ் நிலைத்திருப்பதற்குக் காரணம்- எனத் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, மகேஸ்வரன் ஞாபகார்த்த மணிமண்டபத்திறப்பு விழாவின்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

மகேஸ்வரனைப் பற்றி - அவருக்கும் எனக்கும் இடையேயான அரசியல் பிணைப்புப்பற்றி - பேசுவதற்கு எனக்கு நீண்டநாள்களாகவே ஓர் ஆசையிருந்தது. இன்றுதான் அது நிறைவேறியிருக்கிறது. மகேஸ்வரன் முதலில் அரசியலில் குதித்தபோது அவரைப் பார்க்க நான் முயன்றேன். எனினும் பின்னர் நாடாளுமன்றத்தில்தான் சந்தித்தேன். அங்கே அவர் யாருக்கும் அஞ்சாமல் தன்னுடைய கருத்துக்களை எடுத்துரைக்கும் அரசியல்வாதியாக விளங்கினார். அவருடைய அதீத துணிச்சலை சிலவேளைகளில் நான் மகேஸ்வரனிடமே நேரடியாகக் கண்டித்ததும் உண்டு. அது அவருடைய நன்மைக்குத்தான். அரசின் நிதியிலிருந்து ஒரு கட்டடத்தைக் கட்டி அந்தக் கட்டடத்தை அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இப்போதைய ஜனாதிபதியை அழைத்துவந்து திறந்துவைத்தார். இத்தகைய அரசியல் துணிச்சல் யாருக்குமே வராது. அது மகேஸ்வரனால் மட்டுமே முடியும்.

ஒருமுறை நாடாளுமன்றத்தில் ஓர் உறுப்பினர் - அதுவும் அடிதடிகளில் பெயர்போனவர் - எதிர்க்கட்சியினரை நோக்கி செருப்பைக் காட்டினார். பதிலுக்கு மகேஸ்வரனும் துணிந்து நின்று தன்னுடைய செருப்பைக் காட்டினார். அப்போது நான் அவரிடம் 'அவர்களைப்போல நாமும் தரம் தாழ்ந்துபோய்விடக்கூடாது' என்று கண்டிப்புடன் புத்திமதி சொன்னேன். நானாக இருந்தால் செருப்பைக் காட்டிய அந்த நாடாளுமன்ற உறுப்பினரோடு கடைசிவரை முகங்கொடுத்துப் பேசியிருக்கமாட்டேன். அது என்னுடைய சுபாவம். ஆனால் அன்றைக்கே எந்த நாடாளுமன்ற உறுப்பினரோடு சண்டையிட்டாரோ அவரின் தோளில் கைவைத்து நட்புப் பாராட்டியபடி சென்றார் மகேஸ்வரன். இத்தகைய உயரிய பண்புகள் அவரிடமிருந்தன- என்று கூறினார். (01-04)

# 'சனல் 4' ஒளிநாடா விடயத்தில் ஐ.நா. அதிகாரி அல்ஸ்டொன் பக்கச் சார்பாகச் செயற்படுகிறார்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க விசனம்



கொழும்பு,ஜன.11

இலங்கைக்கு எதிராக யுத்தக்குற்ற விசாரணையொன்றைக் கொண்டு வருவதற்கான தீவிர போரில் சட்ட விரோதப் படுகொலைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்டொன் ஈடுபட்டுள்ளார் என இலங்கை அரசு குற்றம்சாட்டியுள்ளது.

'சனல் - 4' ஒளிநாடா குறித்து அல்ஸ்டொன் வெளியிட்டுள்ள அறிக்கை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க இப்படி விசனம் தெரிவித்துள்ளார்.

வீடியோ குறித்த அறிக்கையை வெளியிடுவதில் ஐ.நா. உரிய நடைமுறைகளைப் பின்பற்றவில்லை. ஐ.நா.முதலில் அரசிற்கு அதனை தெரிவித்திருக்க வேண்டும். அதுவே நெறிமுறையான நடவடிக்கை என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட வீடியோ போலியானது என்றே இலங்கை தொடர்ந்தும் கருதுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளதுடன் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

'சனல் - 4' ஒளிநாடா குறித்து சட்ட விரோதப் படுகொலைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்டொன் வெளியிட்டுள்ள அறிக்கையை இலங்கை கடுமையாக எதிர்க்கின்றது.

ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடு என்ற அடிப்படையில் விசேட அறிக்கையாளர்கள், தாம் நடுநிலை தவறாதவர்களாகவும், பக்கச்சார்பற்றவர்களாகவும் செயற்பட வேண்டும் என இலங்கை வேண்டுகோள் விடுக்கிறது.

பிலிப் அல்ஸ்டொன் 'சனல் - 4' ஒளிநாடா விடயத்தில் மிகவும் பக்கச்சார்பாக செயற்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட வீடியோவில் சில முரண்பாடுகள் உள்ளன என நிபுணர்கள் தெரிவித்திருந்தனர் என அல்ஸ்டொன் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு முரண்பாடுகள் இருப்பின் அந்த ஒளிநாடா உண்மையானது என அல்ஸ்டொன் எவ்வாறு கூறமுடியும்?

அல்ஸ்டொன் வேறு ஏதோ நிகழ்ச்சித் திட்டத்துடன் செயற்படுகிறார்.

நாங்கள் அந்த அறிக்கையை ஆராய்வோம்.

பின்னர் அரசின் நிலைப்பாட்டை உருவாக்குவதற்கான சட்ட, தொழில்நுட்ப ரீதியான ஆலோசனைகளைப் பெறுவோம்.

எனினும், எமது ஆரம்பக் கட்டப் பதிலாக அல்ஸ்டொன் பிழையான நோக்கத்துடன் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார், உரிய வழிமுறைகளைப் பின் பற்றவில்லை எனத் தெரிவிக்க விரும்புகிறோம் - என்று குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

# எதிர்க்கட்சிகளின் கருத்தை ஆளும் கட்சி அடக்குமுறைக்கு உட்படுத்தக் கூடாது!

## மல்வத்த பீடாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஜன. 11

எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் முயற்சிகளை ஆளும் கட்சி மேற்கொள்ளக் கூடாது - என்று கண்டி மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

வணக்கத்திற்குரிய தம்பர அமில தேரர் கைது செய்யப்பட்ட சம்பவம் அரசு தொடர்பான பிழையான கருதுகோள்களை வெளிப்படுத்தக் கூடுமென, மல்வத்த பீடாதிபதி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்பர அமில தேரர் நாட்டின் முக்கியமான பௌத்த பிக்குகளில் ஒருவர் எனவும், மத அடிப்படையில் பல்வேறு முக்கிய பொறுப்புக்களை வகித்து வருகிறார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பௌத்த பிக்கு கைது செய்யப்பட்ட சம்பவம் மக்கள் மற்றும் பௌத்த பிக்குகளின் இடையில் பெரும் சலசலப்பை ஏற்டுத்தியுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சட்டங்களை மீறுவோருக்கு எதிராக உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதென அவர் தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு கடைபிக்கப் [illegible]ம் போது வெளிப்படைத் தன்மையும் நியாயமும் பின்பற்றப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாற்றுக் கொள்கையுடையவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்துவதன் மூலம், அரசு மீது மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தில் பாதகத் தன்மை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# தேர்தல் வன்முறைகள் உயர்ந்து செல்கின்றன

கொழும்பு, ஜன.11

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்பான வன்முறைகள் வேகமாக அதிகரித்து வருகின்றன எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரலின்' இணைப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இவ்வன்முறைகள் தொடர்வதால் ஆபத்தான நிலைமை உருவாகி வருவதாக அவர் மேலும் கூறினார்.

கடந்தவார இறுதிவரை 200 இற்கும் மேற்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். [illegible]ன் மாகாணத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இந்த வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய வன்முறைகளைப் பொலிஸாரினால் மட்டும் நிறுத்திவிட முடியாது எனவும், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், கட்சி ஆதரவாளர்கள் ஆகியோர் வன்முறைகளைத் தவிர்த்து சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்காகத் தேர்தல் சட்டங்களை மீறாத வகையில் நடந்து ஒத்துழைக்கவேண்டும் எனவும் அவர் மேலும் கருத்து வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல்

## தபால் மூலம் வாக்களிக்கும் தமிழ்ச் சகோதர சகோதரிகளே!

முடிந்துபோன யுத்தத்தில் நிகழ்ந்த
எம் உடன்பிறப்புக்களின் கோர மரணங்களுக்கும்
கொடிய அவலங்களுக்கும் காரணமான 'எவரையும்'
எமது மக்கள் ஆதரிக்கக்கூடாது!

"'ஆட்சி மாற்றம்' என்பது - சிங்கள மாயை"
உண்மையில் அது 'ஆள்' மாற்றமே

நீதியான தீர்வைக் கோரி
நிமிர்ந்து நிற்போம்...
துணிந்து நிற்போம்...

(சி-93709)

ஓரணி திரண்டு நேர்வழி நின்று
சிவாஜிலிங்கம் அவர்களை ஆதரிப்போம்!
கப்பல் சின்னத்திற்கு வாக்களிப்போம்!!





சுதந்திரம் எமது பிறப்புரிமை!
சுயாட்சி எமது கோரிக்கை!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலுப்பிள்ளை அப்பாவின் மரணம் வீரமரணமாகக் கொள்ளப்பட வேண்டியது

## இரங்கல் உரையில் திருமாவளவன்

கரவெட்டி, ஜன 11

திருவேங்கடம் வேலுப்பிள்ளை இராணுவ முகாமில் இறந்துள்ளார். அவர் இயற்கை மரணம் அடைந்துள்ளார் என்று இந்நாட்டு அரசாங்கம் சொல்கிறது. அவ்வாறு அரசு கூறினாலும் அவர் வீரச்சாவு அடைந்துள்ளார் என்றே கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்நாடு சட்டசபை உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல்.திருமாவளவன்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் இறுதி மரியாதை அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வைத்தியகலாநிதி. எஸ்.மயிலேறும் பெருமாளின் தலைமையில் நடைபெற்ற இரங்கலுரை நிகழ்வில் தொல். திருமாவளவன் மேலும் கூறியதாவது:

பிரபாரன் ஒரு மாவீரன். அவ் வீரனைப் பெற்ற அமரர் வேலுப்பிள்ளை அப்பா அவர் களும் அன்னாரது மனைவியார் பார்வ திப்பிள்ளை அவர்களும் தங்களது உயிர்களுக்காகச் சிறையில் மண்டியிடவும் இல்லை, மன்னிப்புக் கேட்கவுமில்லை. அத்தகைய அப்பா வேலுப்பிள்ளை உலகத்தமிழர்கள் அனைவருக்கும் அப்பா போன்றவர். அது போல அவரின் மனைவி பார்வதி அம்மா அவர்களும் எம் அனைவருக்கும் அம்மாதான் என்றார்.

வரலாற்றில் எத்தனையோ மாவீரர்கள் தோன்றியிருக்கலாம். ஆனால் தமிழர் உரிமைக்காகப் போராடிய ஒரே ஒரு உத்தம வீரன் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஒருவராகத்தான் இருக்கமுடியும்- என்றார். (அ-70)

# நல்லூரில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி மாநாடு

யாழ்ப்பாணம், ஜன. 11

இலங்கை தமிழரசுக் கட்சியின் 60 ஆவது தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நேற்றுக் காலை 10.30 மணி முதல் நடைபெற்றது.

இதன்போது தமிழரசுக்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி., பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா எம்.பி., ஜனாப். இமாம் எம்.பி., துரைரட்ணசிங்கம் எம்.பி., கட்சிப் பிரமுகர் குலநாயகம் மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், பத்மினி சிதம்பரநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

விழாவின் ஆரம்பத்தில் கட்சிக் கீதம் இசைக்கப்பட்டு, தமிழரசுக்கட்சியின் கொடியை கட்சித் தலைவர் சம்பந்தன் ஏற்றி வைத்தார். தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்புரை என்பவற்றைத் தொடர்ந்து கட்சித் தலைவர் சம்பந்தனின் உரை இடம் பெற்றது.

''சரத்பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதென்ற எமது முடிவுக்கு பலரும் வரவேற்புத் தெரிவித்துள்ளனர். இது ஒரு கட்சி நலன்சார்ந்த முடிவல்ல. தமிழ் மக்களின் எதிர்கால நலன் சார்ந்த முடிவு'' என்று அங்கு சம்பந்தன் தெரிவித்தார். இதுதவிர கட்சியின் சமகாலக் கொள்கை தொடர்பான தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் அவர் விளக்கமளித்தார்.

ஜனாதிபதியின் வருகை மற்றும் கரு ஜயசூரியாவின் யாழ். வருகை என்பவற்றினால் யாழ். நகரின் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரித்திருந்த போதும் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் தமிழரசுக்கட்சியின் மாநாட்டில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழரசுக் கட்சியின் பொதுத் தீர்மானம் அடங்கிய அறிக்கையைப் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா சமர்ப்பித்தார். தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் 60 ஆம் ஆண்டு மலர் வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது. கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மலரை வெளியிட்டு வைத்தார்.

மாநாட்டில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தியின் வாழ்த்துச் செய்தியும் வாசிக்கப்பட்டது. (ஒ-14-23)

# எமது மக்களின் நலனைத்.......

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மக்கள் நலனுக்காக எடுக்கப்பட்ட முடிவு**

பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவு மக்கள் சார்பாக, மக்கள் நலனுக்காக எடுக்கப்பட்டது. இன்று எம் மக்களுக்கு இந்த முடிவு பற்றிக்கூறுவது என்னவென்றால் இந்த முடிவு உங்கள் சார்பாக, உங்கள் நலனுக்காக எடுக்கப்பட்டது. அதற்குப் பின்னால் சகலரும் நிற்க வேண்டும் என அன்பாக கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் தற்போது பல முயற்சிகளை எடுத்து வருகிறோம். இயன்ற அளவு ஏனைய அமைப்புக்களை சார்ந்தவர்களையும், எமது கொள்கைகளுக்கு மாறாக இல்லாதவர்களையும் நாங்கள் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கடும் முயற்சி எடுத்து வருகிறோம். அதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளோம்.

சமீபத்தில் சூரிச்சில் ஒரு மாநாடு நடைபெற்றது. இதற்கு எமது கட்சியின் தலைவர்களும் சென்றிருந்தனர். அங்கு பல விடயங்களைப் பேசினோம். ஒற்றுமை பற்றிப் பேசினோம். இந்த ஒற்றுமை பேணப்படவேண்டும் என எமது புலம்பெயர்ந்த மக்களின் அமைப்புக்கள் தீவிரமாக நின்றன. நாங்கள் எமது கொள்கையை விட்டுக்கொடுக்காமல் சேர்க்கக்கூடிய அனைவரையும் சேர்த்து நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கும் போது பலமான கட்சியாக நிற்போம் என்று கூறினோம்.

அடுத்த நாடாளுமன்றத்துக்கு பெரும் எண்ணிக்கையானோர் செல்லவேண்டும் என்று கருதுகிறோம். மக்கள் நம்பிக்கையை இழக்கக்கூடாது.

இளைஞர்கள், படித்தவர்கள், நேர்மையானவர்கள் அரசியலில் உள்வாங்கப்பட வேண்டும் என்று கருத்து வந்துள் ளது. அவர்களிடமும் பொறுப்புக் கொடுக்கப்படவேண்டும் என்று பரவலாகக் கருத்து முன்வைக்கப்படுகிறது. அது குறித்து யோசித்துப்பார்க்க வேண் டிய பொறுப்பு உங்களுடையது. அதற்கு சிபார்சு செய்ய வேண்டிய பொறுப்பும் உங்களிடமே உள்ளது. அப்படியான சிபார்சுகள் கிடைத்தால் தான் இளைஞர்கள், படித்தவர்கள், நேர்மையானவர்கள் ஆகியோரை அரசியலுக்குள் உள்வாங்க வழி ஏற்படும்.

**புலம்பெயர்ந்தவர்களின் பங்களிப்பு**

புலம்பெயர்ந்தவர்கள் விடயம் தொடர்பாக கூறுவது பொருத்தமாக இருக்கும் எனக்கருதுகிறேன். புலம்பெயர்ந்தவர்கள் ஐரோப் பாவில் வாழ்ந் தாலும் சரி அமெரிக்காவில் வாழ்ந்தாலும் சரி எமது உரிமைப் போராட்டத்தில் தங்களின் பங்களிப்பை கணிசமாக வழங்கி வருகின்றனர். பலவித போராட்டங்கள், பல விதமான முயற்சிகள், பலவித தொடர்புகளைக் கூட அரசியல் வாதிகளுடன் வைத்துள்ளனர். அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை எமது மக்கள் சார்பில் தெரிவிக்க வேண்டியது எனது கடமை எனக்கருதுகின்றேன்.

சமீபத்தில் வியன்னாவில் ஒரு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் நாமும் பங்குபற்றினோம். வெளிநாட்டு நிபுணத்துவ ஆலோசகர்களும் கலந்துகொண்டனர். வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுக் கட்டமைப்புத் தொடர்பாக ஆராயப்பட்டு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தே மாநாடு நடைபெற்றது. நான்கு நாள் கூடி ஆராய்ந்தோம். பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

யுத்தத்துக்கு ஒரு கட்டத்தில் பெரும் உதவிகளைச் செய்தீர்கள். எங்கள் மக்களின் புனர்வாழ்வு, கட்டமைப்பு சம்பந்தமான உதவிகளும் அந்த அளவுக்கு இருக்க வேண்டும். அது தான் எங்கள் விருப்பம்;எமது மக்களின் விருப்பம். உதவவேண்டும் என உறுதியாக அவர்களிடம் கூறினோம். நிச்சயமாக உதவுவோம் எனக்கூறியுள்ளனர்.

பண உதவி மட்டுமல்ல, நிபுணத்துவ உதவியும், ஆலோசனைகளும் எமக்குத் தேவை என்று தெரிவித்தோம் அதற்கு உதவத்தயாராக இருக்கிறார்கள். அவர்கள் நிதானமாகச் சிந்திக்கிறார்கள்.

அந்தச் செயற் பாடு தொடர்ந்து முன்னெடுக்க முயற்சிகள் எடுக்கப்படவேண் டும். அதைக் கவனத்தில் எடுத்து ஜனாதிபதித் தேர்தல் முடிந்து நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக அது விடயம் சம்பந்தமாக சில ஒழுங்கு களைச் செய்யத் தீர்மானித்துள்ளோம்.

மக்களைத்தூக்கி நிறுத்த வேண்டும். கோஷங்களை எழுப்பாமல் நியாயமான ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை காண வேண்டிய கடமை எமக்கு உண்டு. அந்த வகையில் நாங்கள் செயற்படுவோம். அதற்கு உங்கள் ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்று அவர்களிடம் கேட்டோம். அந்தக் கருத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

நியாயமான தீர்வு கிட்ட வேண்டும் என்பதில் புலம் பெயர்ந்த மக்கள் என்றுமே உறுதியாக இருக்கின்றார்கள். நீண்ட காலமாக பல துயரங்களைச் சுமந்திருக்கிறீர்கள். பல கஷ்டங்களை அனுபவித்திருக்கிறீர்கள். பல இழப்புக்களைச் சந்தித்திருக்கிறீர்கள். பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளீர்கள். இருந்தும் உறுதியாக இருக்கிறீர்கள்.

**கடைசிப்பேச்சில் ஜனாதிபதி**

பொன்சேகாவுக்கா வாக்களிக்கப் போகிறீர்கள் என ஜனாதிபதி கடைசிப் பேச்சில் என்னிடம் கேட்டார். நீங்கள் தான் எங்களுக்கு வழி காட்டியுள்ளீர்கள். கிழக்கு ஆளுநர், கடற்படைத் தளபதி, வடக்கு ஆளுநர், இராணுவத் தளபதி.இவ்வாறு நீங்களே வழி காட்டிவிட்டு என்னிடம் இப்படிக் கேட்கிறீர்களே என்று நான் அவரிடம் திருப் பிக்கேட்டேன்.

மறுபடியும் கூறினோம், நீங்கள் எங்களைத் தப்பாகப் புரியக்கூடாது. எங்களுக்கு எங்கள் மக்களுக்குரிய கடமைதான் உண்டு. வேறு கடமைகள் ஒன்றும் இல்லை என்று ஜனாதிபதியிடம் கூறினோம்.

மக்களின் கருத்தை அறிந்து அவர்களின் கருத்தின் அடிப்படையில் நங்கள் செயற்படுவோம் என்று அவருக்குத் தெரிவித்தேன்.

நீண்டகாலமாகப் பல துயரங்களை சுமந்திருக்கிறீர்கள் -பல கஷ்டங்களை அனுபவித்திருக்கிறீர்கள்- பல இழப்புக்களைச் சந்தித்திருக்கிறீர்கள்- பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளீர்கள். இருந்தும் உறுதியாக இருக்கிறீர்கள்

கொள்கைப்பற்று; கொள்கைப்பாசம் மிகுந்தவர்கள். நாங்கள் தமிழர்கள் என்றதற்காகத்தான் எமக்கு எதிராக இன்னல்கள் வருகின்றன. நாங்கள் நாடோடிகள் அல்ல. நாங்கள் சுயமரியாதையு டனும் கௌரவத்துடனும் வாழ விரும்புகின் றவர்கள். இந்தக் கருத்துடன் எமக்கு பின் னால் நிற்கிறீர்கள். அதை நாங்கள் உணர்ந் துள்ளோம். நீங்கள் பொறுமை காக்கவேண்டும். எங்களால் இயன்ற அத்தனையும் செய்வோம். உங்கள் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்த சகல முயற்சிகளையும் செய்வோம்.

**அனைவரது பங்களிப்பும் அவசியம்**

குடிபெயர்ந்த மக்களும் தேர்தலில் பங்களிப்புச் செய்து எமது மக்களின் வாழ்க்கையை உச்சமாக்குவதற்கு உதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். பல தமிழ்க்கட்சிகள் அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்படுகிறார்கள். தனித்துவமாக, சுதந்திரமாக கருத்துக்களை சொல்ல முடியாத நிலைமை. வன்னி மக்கள் குடியமர்ந்த போது விசேட செயலணி செயற்பட்டது. 18அதிகாரிகளைக் கொண்டது அந்தச் செயலணி சில கட்சிகளின் தலைவர்களும் அதில் அங்கம் வகித்தனர். மக்கள் சார்பாக மக்களின் உண்மையான நிலைமையை எடுத்துக்கூறி மக்களின் தேவைக்கு ஏற்ப செயற்படும் நிலைமை அங்கு இருக்கவில்லை. எங்களை அங்கு செல்ல அனுமதிக்க வில்லை. அப்படியிருக்கும் போது எப்படி ஒற்றுமை பற்றிப் பேசுவது. அந்த அணியில் இருந்தவர் யார்?

அரசாங்கத்துடன் இணைந்து இருக்கும் கட்சிகளின் வீழ்ச்சிக்கு காரணமாக எமது தேர்தல் தொடர்பான முடிவு அமையவில்லை. மக்கள் யாராவது இவர்களிடம் உதவி பெற்றிருந் தால் கடமைப்பட்டவர்கள் என்று கருதத் தேவையில்லை. உங்கள் உரிமை, உரித்து அதைப்பெறுவது. அதற்காக அடிமையில் விழவேண்டியது அவசியம் இல்லை. அதற்காக ஆதரிக்க வேண்டும், என்பதும் அல்ல. கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு, யுவதிகளுக்கு இறுதியாக வேண்டுகோள் ஒன்றை விடுப்பது எனது கடமை எனக் கருதுகிறேன்.

கடந்த 60வருட காலமாக நடந்த போராட்டமும் இன்று நடைபெறும் போராட்டமும் உங்களுக்காக நடைபெறுகின்ற போராட்டமாகும். நாட்டில் சுபீட்சமாக சுமுகத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக நடைபெறும் இந்தப் போராட்டத்தில் பெற்றோர், முதியோர் பெரும் அர்ப்பணிப்பை செய்துள்ள னர். இந்தக் கருமத்தை விரைவாக முடிவுக்குக் கொண்டுவர இயன்ற முயற்சியை எடுப்போம்.

வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ் மக்களை வாக்களிக்க வைப்பதில் உங்களால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும் என்று இளம் சமுதாயத்தைக் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது மக்கள் 100 இற்கு 90வீதம் வாக்களிக்க வேண்டும். வாக்களிக்க பிந்தாமல் காலையிலேயே சென்று வாக்களிக்க வேண்டும். பலவிதமான மோசடிகள் இடம்பெறலாம். அதைத் தவிர்க்க இளைஞர் சமூகம் உதவ வேண்டும் - என்றார். (ஒ-1)

# யாழ்.நாக விகாரையில் மஹிந்த

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ். நாகவிகாரைக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். அங்கு வழிபாடு முடித்தபின்னர் அருகில் உள்ள உயர் கல்லூரி மாணவர்களுடன் யாழ்.நாகவிகாரை வளாகத்துக்குள் நின்றவாறே உரையாடினார். ஜனாதிபதியுடன் அவரின் ஆலோசகர் எம்.எச். எம். அஸ்வர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் உடனிருந்தனர்.

மாணவர்களுக்கு சமீபமாகச் சென்ற ஜனாதிபதியின் ஆலோசகர் அஸ்வர் ஜனாதிபதி உங்களின் ஆதரவை நாடிவந்துள்ளார். ஆதரவளிப்பீர்களா? என்று கேட்டார். அப்போது உயர் கல்லூரி வளாகத்தில் நின்ற மாணவர்களில் பலரும் மௌனமாக நின்றனர். ஒருபகுதியினர் அவருக்கு வாக்களிக்கமாட்டோம் என்று உரத்த குரலில் தெரிவித்தனர். (அ-50)

# ஆனைக்கோட்டை வாசி விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன 11

கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி பின்னர் மின் கம்பத்துடன் மோதி நின்றது. இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் படுகாயமடைந்தார்.

நேற்று காலை 8மணியளவில் கொக்குவில் தாவடிச் சந்தியில் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் ஆனைக்கோட்டை, ஆலடியைச் சேர்ந்த வேதநாயகம் ஞானசீலன் (வயது 40) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-78)

# வானொலியில் ஊரெழு அம்பாளின் திருஊஞ்சல் பாட்டு

யாழ்ப்பாணம், ஜன 11

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் ஊரெழு மீனாட்சி அம்பாள் திருவூஞ்சல் பாடல்கள் ஒலிபரப்பப் படவுள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக் கிழமை இரவு 10மணி முதல் 10.30மணி வரை இந்த ஒலிபரப்பு இடம்பெறும்.

தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நாளை மறுதினம் புதன்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் 15ஆம் திகதி பூங்காவனமும் இடம்பெறும். (ஒ-16)

# இரவு பகலாக ஒளிரும் வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம், ஜன 11

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வீதி விளக்குகளைப் பொருத்தும் பணி துரித கதியில் நடைபெற்று வருகின்றது.

சில இடங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் அணைக்கப்படாமல் இரவு பகலாக ஒளிர விடப்படுகின்றன. இதனால் பெருளவு மின்சாரம் வீணாக்கப்படுகின்றது. வீதி விளக்குகளை ஒளிர விடுவதற்கும் அணைப்பதற்குமான மின் ஆழிகள் அந்தந்த தூண்களிலேயே பொருத்தப் பட்டுள்ளன.

இந்த மின் விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பு பொதுமக்களிடமே வழங்கப் பட்டுள்ளதால் காலையில் வீதி விளக்குகளை அணைத்துவிடுமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

# இனங்காணப்படாத காய்ச்சலால் சரசாலை வாசி மரணம்

சாவகச்சேரி, ஜன.11

சாவகச்சேரியில் இனங்காணப்படாத காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஒருவர் நேற்றுமுன்தினம் மரணம டைந் துள்ளார்.

சரசாலை வடக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் கணேசரத்தினம் (வயது 44) என்பவரே மரணமடைந்தவர் ஆவார்.

இவர் கடந்த சில நாள்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று கூறப் பட்டது.

இவரது சடலத்தை சாவகச்சேரி வைத்திய சாலையில் ஒப்படைத்த சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-16-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழ்க் கைதிகளுக்கு இனியாவது நியாயம் செய்யுமா இந்த அரசு?

தேர்தல் வெற்றியை ஈட்டுவதற்காகக் கண்மண் தெரியாமல் வாக்குறுதிகளையும், நம்பிக்கை அறிவிப்புகளையும் அள்ளிவீசி வரும் அரசியல் தலைமைத்துவங்களுக்கு - ஆட்சி, அதிகாரத் தரப்புகளுக்கு - 'சந்தேகம்' என்ற பெயரில் நீண்டகாலம் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் அவலப்பட்டு, வாழ்வைத் தொலைத்து நிற்கும் சுமார் இரண்டாயிரம் தமிழ்க் கைதிகளின் துயர நிலைமை கண்ணுக்குப்படாமல் இருப்பது பெருவிசனத்துக்குரியது.

வன்னி யுத்தத்தின் இறுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பெயரில் சுமார் பன்னீராயிரம் பேரை வளைத்துப் பிடித்து தனிமுகாம் அடைப்புக்குள் தள்ளியது அரசு. இப்போது அவர்களை விடுவிக்கும் படலத்தை அரசியலாக்கி முன்னெடுக்கின்றது ஆட்சித் தலைமை.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்று தான் நேரடியாக அடையாளம் கண்டவர்களில் பெரியளவில் குற்றமிழைக்காதவர்களை வகைப்படுத்தி, அவர்களைப் புனர்வாழ்வளித்து விடுவிக்கும் செயற்பாட்டை அரசு முன்னெடுப்பதாகப் பிரகடனப்படுத்தப்படுகின்றது. இந்த வரிசையில் நேற்றுமுன்தினம் கூட எழுநூறுக்கும் அதிகமான 'புலி உறுப்பினர்கள்' அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர். இது பற்றிய ஆரவார அறிவித்தல்களும் அரச ஊடகங்களிலும், ஏனைய ஊடகங்களிலும் வெளியிடப்பட்டன.

இப்படி வன்னி யுத்த முடிவில் சிக்குண்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை பெரிய எண்ணிக்கையில் கூட்டம் கூட்டமாக விடுவிக்கும் 'திருவிழா' எதிர்வரும் 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு உற்சவம் நடந்தேறும் வரையில் தொடரும் என எதிர்பார்க்கலாம்.

அப்படித் தொடர்வதும் நல்லதே. அரசுத் தரப்பின் தடுப்பு முகாம் சிறைக்குள் சிக்குண்டு தமது எதிர்கால வாழ்வைத் தொலைத்து நிற்கும் அவர்களுக்கு இத்தகைய மீட்சியை வழங்க அரசுத் தலைமை முன்வந்தமை வரவேற்கவும், பாராட்டவும் தக்கது. அது மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும் என்று கோருவதும் தவறாகாது.

ஆனால், இந்தத் 'தாராளம்' பக்கச்சார்பானதாகவோ அல்லது 'ஒரு கண்ணில் வெண்ணெய்; மறு கண்ணில் சுண்ணாம்பு' - என்ற பாரபட்சப் போக்கிலோ அமையக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்டுவது நமது கடமையாகின்றது.

வன்னி யுத்தத்தின் முடிவில் தான் மடக்கிய புலிகளின் சுமார் பன்னிரண்டாயிரம் உறுப்பினர்களில் ஆயிரத்துக்கும் அதிகமானோரை - அவர்கள் சம்பந்தமான விசாரணைகளை இவ்வளவு விரைவாக முடித்து - எந்த நீதிமன்றங்களிலும் அவர்களை முன்நிறுத்தாமல் தற்றுணிபில் ஆட்சித் தலைமையினால் விடுதலை செய்யமுடியும் என்றால்-

அதுவும் 'புலிகளின் உறுப்பினர்' என்று தான் வகைப்படுத்தியவர்கள் விடயத்திலேயே அரசுத் தலைமையால் இவ்வளவு 'தாராளம்' காட்டமுடியும் என்றால் -

வெறும் 'சந்தேக நபர்கள்' என்ற பெயரிலும் 'புலிகளின் நடவடிக்கைகளுக்கு உதவியவர்கள்' என்ற சந்தேகத்திலும் அவசரகாலச் சட்டவிதிகள் மற்றும் பயங்கரவாதச் சட்டவிதிகள் போன்றவற்றின் கீழும் பல ஆண்டுகளாகப் பல்வேறு சிறைகளிலும் உரிய சட்ட விசாரணைகளின்றித் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் - அரசியல் கைதிகள் - விடயத்தில் ஏன் அந்தத் தாராளத்தைக் காட்டமுடியாதிருக்கின்றது என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

இப்படி நாட்டின் பல்வேறு சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலும் 'சந்தேக நபர்கள்' என்ற வகைப்பாட்டின் கீழ் - பாதுகாப்பு அதிகாரிகளின் தடுப்புக்காவல் உத்தரவுப்படி - உரிய விசாரணைகளின்றி ஆண்டுக்கணக்கில் ஆயிரத்தி ஐந்நூறுக்கும் அதிகமான தமிழ்க் கைதிகள் - அவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் இளைஞர்கள் - தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை தமிழினத்துக்கு இழைக்கப்படும் மற்றொரு கொடுமையாகும்.

ஏற்கனவே தமிழினம் தனது ஒரு சந்ததியை - குறிப்பாக இளம் சமூகத்தை - யுத்தப் பேரழிவுகளில் இழந்து பரிதவித்து நிற்கின்றது. அந்தச் சமூகத்தில் மற்றொரு பிரிவை, அவர்களின் இளம் வயதை சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் தொலைக்கச்செய்யும் வகையில் தனிமைப்படுத்தித் தடுத்து வைத்திருக்கின்றமை கூட ஒருவகையில் இன அடக்குமுறைதான்.

தமக்கு இழைக்கப்படும் இந்த அநீதிக்கு எதிராக நீதி, நியாயம் வேண்டி அந்த அரசியல் கைதிகள், ஒரே சமயத்தில் பல்வேறு சிறைகளிலும் இருந்தபடி சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இவர்களுக்கு எதிரான - அல்லது இவர்களை 'சந்தேக நபர்கள்' ஆகக் குறிப்பிடுகின்ற ஆவணங்களையும், ஏனைய கோவைகளையும் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்க விட்டுவிட்டு - அவர்களுக்கு எதிரான விசாரணைகளைக் கிடப்பில் போட்டுவிட்டு - வெறும் வழக்குத் தவணைகளை எடுத்தபடி தமது காலத்தைக் கழிக்கும் அதிகாரிகளின் மனதையும் -

இந்த அதிகாரிகளை வழிப்படுத்தி, இக்கைதிகள் விடயத்தில் விரைந்து செயற்பட்டு அவர்களுக்கு நியாயம் செய்யுமாறு அதிகாரத் தரப்பைத் தூண்டவேண்டிய கடமையைச் செய்யாமல் இருக்கும் ஆட்சித் தரப்பினரது மனதையும் -

இந்தக் கைதிகள் ஆரம்பித்திருக்கும் இந்த காந்தீய வழிப்போராட்டம் தொடுமா? அந்தக் கைதிகளுக்கு நியாயம் - இனியாவது - காலம் பிந்தியாவது - கிட்டுமா?

# அரசுத்தரப்பைக் கோபமுறச் செய்துள்ளது தமிழ்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு

நேற்று 10 .01.2010 திகதி 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் கண்ணோட்டத்திலிருந்து ஒருபகுதி

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான பிரமுகர்களதும் பொதுவான பிரசார விடயமாக முதலில் காணப்பட்டது ராணுவ ரீதியில் புலிகள் அமைப்பைத் தோல்வியடையச் செய்தமைதான். போர் வெற்றியை அடுத்து இருவருமே தேசியமட்டத்தில் புகழின் உயர்ந்த நிலைக்கு தள்ளப்பட்டிருந்தார்கள்.

ஆனால் வெற்றியின் பின் எட்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இந்த இரு தலைவர்களும் மோசமான எதிரிகளாக மாறிவிட்டார்கள்.

ஆரம்பத்திலிருந்த நிலைமாறி விட்டது. பிரதான பிரச்சினைகள் பெரும்பாலும் மறக்கப்பட்டுவிட்டன. ராஜபக்ஷவின் பிரசாரபிரிவினர் இப்போது ஒருகாலத்தில் பிரதான போர் வெற்றி வீரராகக் கருதப்பட்டவர் மீது தனிப்பட்ட முறையில் தாக்குதல் களையும், வசைப்பாடுதலையும் ஆரம்பித்துள்ளார்கள்.

உலகின் மிகச் சிறந்த இராணுவத் தளபதிகளில் ஒருவர் என்று புகழ் பாடியவர்கள் இப்போது ஜெனரல் பொன்சேகாவை துரோகி என்று பட்டம் சூட்டி வசைபாடுகின்றார்கள்.

ராஜபக்ஷ நிர்வாகம் துரோகி என்ற பட்டத்தையே பலருக்குவழங்கிபெருமைப் பட்டுக்கொண்டுள்ளது. போரை நடத்திய வேளையில் அவர் மில்லியன் கணக்கில் பணத்தை ஒதுக்கி கொண்டு விட்டார் என்று அரசுத்தலைவர்கள் இப்போது குற்றஞ்சாட்டுகிறார்கள்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் செயலாற்றுவதற்கான ஓர் உடன்பாட்டுக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டவுடனேயே, துரோகம் புரிகிறார், நாட்டை விற்க முனைகின்றார் என்றவாறெல்லாம் அவர்கள் குற்றஞ்சாட்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

தமிழ் தேசிய கூட்டடைப்புடன் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தி விட்ட நிலையில் அவர்களைத் தம் பக்கம் ஈர்ப்பதற்கு அரசுத்தரப்பினால் ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டது.

எதிர்த்தரப்பு வேட்பாளர் பொன்சேகாவையும் இதர எதிர்க்கட்சித் தலைவர்களையும் தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் சந்தித்துப் பேசவிருக்கிறார்கள் என்ற தகவல் வந்ததன் பிறகு தான் அவர்களை தங்கள் பக்கம் வென்றெடுப்பதற்கானஇறுதிநேர முயற்சிகள்முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக ஐ.தே. கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ் தேசிய கூட்டடைப்பினர் பேச்சுக்கள் நடத்த முற்பட்ட வேளையில்.

**த. தே. கூட்டமைப்பு பொன் சேகாவுடன் செய்த உடன்பாடு**

-தமிழர் தேசிய கூட்டமைப்பு மூன்று பிரிவுகளாக பிளவுபட்டு விட்ட நிலையில் தான் த.தே கூட்டமைப்புக்கும் ஜெனரல் பொன்சேகாவுக்குமிடையில் உடன்பாடு ஒன்று ஏற்படலாயிற்று

கே. சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காகப் பிரிந்து விட்டார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது ஆதரவாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்று விரும்பினார். அத்துடன் இங்கே எல்லாம் முடியும் வரை ஒதுங்கியிருப்பதற்காக லண்டனுக்குப் போய்விட்டார். ராஜவரோதயம் சம்பந்தனும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தினார்கள்.

அவர்களுக்கிடையில் புரிந்துணர்வு ஒன்று ஏற்பட்டதையடுத்து த.தே. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. 18 உறுப்பினர்களில் 13 பேர் கலந்து கொண்டனர். காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

கூட்டம் முடிவடைந்த போது செல்வராஜா கஜேந்திரன், கே.சிவாஜிலிங் கம், என். சிறிகாந்தா, எஸ்.விநோதநோதராதலிங்கம் மற்றும் எஸ். கிஷோர் ஆகிய வர்களைத்தவிர ஏனையவர்கள் ஜெனரல் பொன்சேகாவை ஆதரிப்பதற்கு முடிவு செய்தனர்.

கூட்டமைப்பின் மூன்று எம்பிக்கள் தொடர்ந்தும் வெளிநாட்டில் இருந்து வந்தார்கள்.

ஜெனரல் பொன்சேகாவுடன் உடன்பாடு கண்டதையடுத்து இரண்டு பக்க அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அதில் கூறப்பட்டிருந்த சில கருத்துக்கள் வருமாறு:

மேலும் ஒரு தவணை தம்மை ஆட்சியில் அமர்த்துவதற்கு தீர்ப்பு வழங்கும் படி தேர்தல் அறிவிப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவோ ஆதரிக்கவோ முடியாதென தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு மனதாக முடிவு செய்திருக்கிறார்கள்.

தேசியப்பிரச்சினைக்குஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை காண்பதில் முன்னேற்றம் காணப்பட வில்லை. ஜனாதிபதி ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் பின்னோக்கி செல்பவையாகவே உள்ளன. மனித உரிமைகள், மனிதாபிமான பிரச்சினைகள் தொடர்பில் ராஜபக்ஷவின் செயற்பாடுகள் கவலையளிப்பவையாகவே இருந்துள்ளன. சட்டவிரோத கொலைகள் மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமல் போதல் சாதாரணமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதில் தமிழ் மக்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். ஆட்சி அமைப்புக்கான நிறுவனங்கள் சிதைக்கப்பட்டுள்ளன. சட்ட மற்றும் ஒழுங்கு நடைமுறைகள் சீர் குலைந்துள்ளன. ஊழல்கள் மலிந்து விட்டன. இதன் விளைவாக சட்ட நடைமுறையும் நல்லாட்சியும் அவைகளின் மிக

நிலைபாட்டை மேற்கொண்டுள்ள அதே வேளை மட்டக்களப்பில் மேயர் சிவகீதா பிரபாகரனும் பொன்சேகாவின் பக்கம் சாய்ந்திருக்கிறார். தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் 'டிக்கட்டில்' வெற்றி யீட்டியிருந்த திருமதி பிரபாகரன், பின்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்தார். இப்போது ஐ.தே.கவில் அவர் சேர்ந்து விட்டார். அவருக்கு வழங்கப் பட்டிருந்த ஓர் அதிகாரியுடனான 20 பேர் கொண்ட கொமாண்டோ பாதுகாப்புப் படையணி உடனடியாக வாபஸ் பெறப்பட்டுள்ளது. அவரது பாதுகாப் புக்கு இரண்டு பொலிஸ் கான்ஸ்ட பிள்கள் மட்டுமே வழங்கப் பட்டுள்ள னர். தமக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத் தல் தொடராக அவர் ஜெனரல் பொன் சேகாவிடம் புகார் கூறியுள்ளார்.

பொன்சேகாவின் உறவினர்கள் ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டு பெரும் பொருள் தேடிக் கொண்டார்கள் என்ற வகையில் ராஜபக்ஷ தரப்பினர் குற்றஞ்சாட்டி வருகிறார்கள். கொழும்பில் நிறுவப்பட்டுள்ள சில விளம்பரப் போஸ்டர்களில் ''புள்ளட் திருடன்'' என்ற வகையில் அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

**இம் மாதிரிக் குற்றச் சாட்டுகள் வழக்கமே**

இலங்கை அரசியலில் இம் மாதிரி குற்றச்சாட்டுக்கள் புதிய வையல்ல ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நோர்வே அனுசரணையுடன் உடன்பாடு செய்துகொண்டபொழுது காட்டி கொடுத்து விட்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்டார்.

**போர்க்குற்ற விசாரணை ஆல்ஸ்ரன் அறிக்கை**

எதுவானாலும் எதிர்க்கட்சியினருக்கும் ஐக்கிய மக்கள் தேசிய கூட்டமைப்பினருக்கும் கவலை தருவதான சில

## ஜெனரல் பொன்சேகாவுக்கான ஆதரவு அலை அதிகரிப்பு

மோசமான எல்லைக்குச் சென்று விட்டன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இணக்கப்பாடு கண்டுள்ளமை தொடர்பில் மிகுந்த கோபத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அமைச்சரவை அந்தஸ்து பெற்றிராதவரான லக்ஷ்மன் யாப்பா கருத்து வெளியிடுகையில் இந்த இருதரப்பினரும் கள்ளத்தனமாக ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டினார். இது புலிகளை ராணுவத்தினர் தோற்கடித்து வரலாறு படைத்த சாதனையை சீரழிப்பதாகவிருக்கப்போகின்றது என்றும் குற்றஞ் சாட்டியிருந்தார்.

இலங்கைத் தலைவர்களை சர்வதேச போர் குற்ற விசாரணைக் குழுவின் முன் நிறுத்துவதற்கு லண்டனிலுள்ள புலிகள் சார்பு குழுக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து செயற்படுகிறார்கள் என்று அவர் மேலும் குற்றஞ் சாட்டினார். அவர் இடைக்கால தமிழ் ஈழ அரசொன்றை நிறுவுவதற்கான பேச்சுக்களையும் நடத்தியுள்ளார்கள் என்றார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் ஒருவர் இந்தக் குற்றச் சாட்டுக்களை வன்மையாக மறுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன் வைத்த கோரிக்கைகள் சிலவற்றுக்கு இணக்கம் தெரிவித்து ஜெனரல் பொன்சேகாவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் கையெழுத் திட்டிருக்கிறார்களென்று அறியப்படுகின்றது.

அவைகளில் சில கடந்த வாரம் ஜெனரல் பொன்சேகா யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்தபோதுஒப்புக் கொண்டவையாகும்.

உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல் .வடக்கில் மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதித்தல், சிவில் நிர்வாகத்தை ஆரம்பித்தல், தனியார் சொத்துக்களை, கட்டடங்கள் உட்பட உரிமையாளர்களிடம் ஒப்படைத்தல் மற்றும் விரைவாக சிவில் நிர்வாகத்தை உருவாக்க குழுக்களை நிறுவுதல் போன்றவையாகும்.

வடக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் மலையகத்தில் இ.தொ.காவின் மிக முக்கிய தலைவர்களும் ஜெனரல் பொன்சேகாவுக்கு ஆதரவான

செய்திகள் வெளிநாட்டிலிருந்து வந்துக் கொண்டிருக்கின்றன. சட்டவிரோத மற்றும் விசாரணையுற்ற கொலைகள் தொடர்பான ஐ.நா. விசேட அறிக்கையாளர் பிலிப் ஆல்ஸ்ரன் நியுயோர்க்கில் கடந்த வியாழனன்று செய்தியாளர்களிடம் பேசிய போது இலங்கையில் இடம் பெற்றுள்ள போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான குற்றங்கள் என்பனவற்றுக்கு சுதந்திரமான விசாரணை கள் நடை பெறவேண்டும்என்று குறிப்பிட்டுள்ளர். இவை வன்னியில் எங்கோ ஓர் இடத்தில் கைகள், கண்கள் கட்டப்பட்டு நிர்வாணமான நிலையில் கைதிகள் சுட்டுக் கொல்லப்படும் வீடியோ படங்களின் உண்மைத் தன்மை குறித்து தீர்மானிக்க தாம் நியமித்த விசாரணைகளை அடிப்படையாக வைத்து நடைபெற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடியோ படங்கள் மிக உயர் தகைமையுடைய தொழில் நுட்ப நிபுணர்கள் மூவரிடம் வழங்கப் பட்டதாக தெரிவித்த அவர் இந்த நிபுணர்கள் ஒவ்வொருவரும் இவ் வீடியோப் படங்கள் பொய்யானவை என்று காட்டுவதற்கு எந்தவித தடயமும் இல்லையென்று தெரிவித்துள்ளனர் என்றார். அவர்கள் குறிப்பாக இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்துள்ள சாட்சியங்களை மறுத்துள்ளனர். இலங்கை அரசாங்கம் இந்த படங்கள் குறித்து புலனாய்வு களை தானே நடத்தி அவை ஆதாரமற் றவை என்று கண்டு பிடித்திருப்பதாக அறிவித்திருந்தது என்று ஆல்ஸ்ரன் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்

இந்த முடிவுகளின் அடிப் படையிலும் போரின் இறுதிக் கட்டத்தில் இருதரப்பினாலும் இடம் பெற்றதாகத் தொடர்ந்து குற்றச் சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருவதாலும் சுதந்திர மான விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றுநான் கேட்டுக் கொள்கின்றேன். இலங்கையில் நடை பெற்றுள்ள போர் குற்றங்கள் மற்றும் மிகமோசமான சர்வதேச மனித உரிமை மீறல்கள், மனித உரிமைச் சட்ட மீறல்கள் தொடர்பாக பாரபட்ச மற்ற விசாரணை நடத்தப்படுவதற்கு நான் கோரிக்கை விடுக்கின் றேன் என்றும் தெரித்துள்ளார். (ப)

## நாளை

மார்கழி: 28 12.01.2010

செவ்வாய்க்கிழமை

திதி: துவாதசி மு.ப 8.43 வரை

நட்சத்திரம்: கேட்டை பி. இ 12.29

சுபநேரம்: 11.03-12.33

ராகுகாலம்: 03.33-05.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பினர் எடுத்துள்ள முடிவு அபாயகரமானது

## யாழ்.நகரில் நடந்த கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜன.11

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் என்றுமே தமிழ் மக்களின் நலன்சார்ந்து நல்ல தீர்மானங்களை எடுக்கவில்லை. இந்த ஜனாதிபத் தேர்தல் தொடர்பாக அவர்கள் எடுத்துள்ள முடிவு மிகவும் அபாயகரமானது.

இவ்வாறு தெரிவித்தார் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் பொதுமக்கள் முன்னிலையில் உரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு;

நான் ஒன்றைத்தான் பேசுவேன். கொழும்பில் ஒன்று யாழ்ப்பாணத்தில் ஒன்று பேசமாட்டேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேறு பாதையைக் காட்டுகிறது. நாங்கள் வேறு பாதையைக் காட்டுகின்றோம். நாங்கள் காட்டுகின்ற பாதை நல்லபாதை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்றைக்குமே தமிழ் மக்களின் நலன்சார்ந்து முடிவுகளை எடுத்ததில்லை. அவர்கள் தங்கள் நலன்கருதித்தான் முடிவுகளை எடுக்கின்றார்கள். இப்போது அவர்கள் எடுத்துள்ள முடிவு அபாயகரமானது. கூட்டமைப்பு நினைத்திருந்தால் அழிவுகளைத் தவிர்த்து அரசியல் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். அவர்கள் அவ்வாறு நடக்கவில்லை.

### நல்ல சந்தர்ப்பம்

இப்பொழுது எங்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து படிப்படியாகச் செல்லவேண்டும். எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அரசமைப்பை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. ஆகவே அது நடைபெறாது. இரண்டு கட்சிகளும் ஆட்சிக்கு வரும்போது மாறி மாறி அதைச்செய்யவிடாது எதிர்க்கும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசர காலச்சட்டம் ஆகியவற்றை நீக்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுப்பார். கைதுசெய்யப்பட்டு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அரசியல்கைதிகளை விடுவிப்பது தொடர்பாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

நடைமுறைக்குச் சாத்தியமான அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு நான் இந்த வேளையில் அனைத்து தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றேன். அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் திரண்டு வருவார்களேயானால் இரண்டு வருடங்களுக்குள் தீர்வு கிடைக்கும் - என்றார்.

(ஒ-50)

## ஜனாதிபதியுடன் மேடையில் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்.துரையப்பா விளையாட்டரங் கில் நேற்று நண்பகல் நடைபெற்ற ஜனாதிபதியின் கூட்டத்தில் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் கலந்துகொண்டார்.

விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் ஜனாதிபதிக்கு அருகில் அமர்ந்திருந்த அவர் ஜனாதிபதியுடன் நீண்ட நேரமாக உரையாடிக்கொண்டிருந்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றிய பின்னர் அவருக்கு கைலாகு கொடுத்த சித்தார்த்தன் அவரது முதுகில் தட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.

(ஒ-50)

# தமிழருக்கான தீர்வை வழங்குவதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஒத்துழைக்காது

## நேற்று யாழ்.வந்திருந்த எஸ்.பி.திஸாநாயக்கா

யாழ்ப்பாணம், ஜன.11

தமிழ்மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கமாட்டாது. ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜே.வி.பி யைக் கட்டிக்கொண்டு கூத்தாடுகின்றார்கள்.

இவ்வாறு குறிப்பிட்டார் ஐ.தே.கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் தற்போதைய ஆளுங்கட்சி உறுப்பினருமான எஸ்.பி.திஸாநாயக்க.

நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற ஜனாதிபதியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு;

ரணில் விக்கிரமசிங்க தனது கைகளில் அதிகாரம் இருக்கவேண்டும் என்பதற்காக தனதுகொள்கைகளில் இருந்து அடிக்கடி மாறுபவர். சிறுபான்மை மக்களுக்கான தீர்வு ஒன்றை வழங்குவதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஒத்துழைக்காது. இது சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமான நாடு என்று எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா அண்மையில் தெரிவித்திருந்தார். இது சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர் அனைவருக்கும் உரிய நாடு என்று மஹிந்த ராஜபக்ஷ சொல்கிறார். எனவே நாங்கள் எப்படி சரத் பொன்சேகாவுடன் ஒன்றுசேர முடியும். அவர் மிகவும் கொடூரமானவர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் மனிதர். அவர் ஒரு விவசாயியின் மகன். எனவே அனைவரும் அவரை மீண்டும் ஜனாதிபதியாக்க வேண்டும்.

34 வருடங்களுக்குப் பின்னர் உங்களுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளது. அதைத் தந்தது யார்? மஹிந்த ராஜபக்ஷ அனைவர் மீதும் அன்பு செலுத்துபவர். எனவே அவருக்கு மீண்டும் வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்குவோம் - என்றார். இந்தக் கூட்டத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாநகர சபை உறுப்பினர் மௌலவி சுபியான் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(ஒ-50)

# ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் பாதுகாப்பு அரண்களை விலக்கி, பாதுகாப்பு வலயத்தைச் சுருக்கி, அப்பிரதேசங்களை நடமாட்டத்துக்குத் திறந்துவிடும் பணிகள் நேற்று ஆரம்பமாகுமென நம்பப்பட்ட போதும் அது இடம்பெறவேயில்லை.

யாழ். குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான முக்கிய - உறுதியான - முடிவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் வைத்து வெளியிடுவார் என்று கடந்த 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியின் ஆலோசகரும் வடமாகாண விசேட செயலணியின் தலைவருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இதனால் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான முக்கிய அறிவிப்பைத் தமது நேற்றைய யாழ். விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிடுவார் எனப் பலரும் எதிர்பார்த்திருந்தனர்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பேச்சை ஆரம்பித்தபோது அங்கு கூடியிருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் அந்த எதிர்பார்ப்பு அதிகம் இருந்தது. எனினும், உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை குறித்து ஜனாதிபதி தமது உரையில் ஒரு சொல் கூடக் குறிப்பிடவில்லை.

அத்துடன் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்தும் ஜனாதிபதி தனது பேச்சில் பெரிதாக எதையும் கோடிட்டுக் காட்டவில்லை. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தோ அல்லது அதற்கு அப்பால் செல்வது குறித்தோ ஜனாதிபதி எதையுமே சுட்டிக்காட்டவில்லை.

ஜனாதிபதியின் வாயில் இருந்து முக்கிய அறிவிப்பு வெளிவரும் என எதிர்பார்த்திருந்த மக்களும், ஊடகவியலாளர்களும் இதனால் பெரும் ஏமாற்றமடைந்தனர்.

கடந்த 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா வழங்கிய வாக்குறுதிகளை விஞ்சும் வகையில் ஜனாதிபதி மஹிந்தவின் அறிவிப்பு அமையும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அவை எல்லாம் நிறைவேறாமல் போயின.

குடாநாட்டுக்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்றுக்காலை பலாலி வந்தடைந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்து நேரடியாக யாழ். ஆரியகுளம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள நாகவிகாரைக்கு காலை 10.15 மணிக்குச் சென்றார். ஜனாதிபதியுடன் ஐ.தே.கவின் முன்னாள் தேசிய அமைப்பாளரும், தற்போதைய ஆளும் கட்சியின் உறுப்பினருமான எஸ்.பி.திஸாநாயக்க, சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எம்.பி.ஆர். மார்க், ஜனாதிபதியின் ஆலோசகர் ஏ.எச்.எம்.அஸ்வர் ஆகியோரும் வந்திருந்தனர்.

நாகவிகாரையில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டதன் பின்னர் ஜனாதிபதிக் குழுவினர் அங்கிருந்து நல்லூருக்குச் சென்றனர். அங்கு யாழ். மாநகரசபை முன்றிலில் வைத்து யாழ். மாநகர முதல்வர் திருமதி பற்குணராஜா யோகேஸ்வரி தலைமையில் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது. பின்னர் ஜனாதிபதி அங்கிருந்து நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு மங்கள வாத்திய இசையுடன் அழைத்துவரப்பட்டார். இந்தவேளையில், நல்லூரில் கூடியிருந்த நூற்றுக்கணக்கான மக்கள் கொடிகளை அசைத்து ஜனாதிபதியை வரவேற்றனர். நல்லூர் ஆலயத்திற்குள் வந்த ஜனாதிபதி அங்கு தேங்காயை உடைத்து வழிபட்டார். அதன் பின்னர் அங்கு நடைபெற்ற விசேட பூஜையில் கலந்துகொண்டார். பின்பு கோவிலுக்கு வெளியே வந்த அவர் அங்கு கூடி யிருந்த மக்களுக்கு அருகில் சென்று அவர்களுடன் உரையாடினார்.

இதனையடுத்து நல்லை ஆதீனத்திற்குச் சென்ற ஜனாதிபதி அங்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளைச் சந்தித்து ஆசிபெற்றார். இச்சந்திப்பின்போது செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனும் உடனிருந்தார்.

குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவேண்டும் எனவும், ஏ-9 வீதியூடான போக்குவரத்து மேலும் சீராக்கப்படவேண்டும் எனவும், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இச்சந்திப்பின்போது நல்லை ஆதீன முதல்வர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டார். இவை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

பின்னர் அங்கிருந்து யாழ். ஆயர் இல்லத்திற்குச் சென்ற ஜனாதிபதி அங்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்துப்பேசினார். இந்தச் சந்திப்பில் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், அவரின் செயலாளர் அருட்திரு ஆர்.ஜி.விஜின்ரஸ் அடிகள், நிதிப்பரிபாலகர் அருட்திரு ஜே.பி. அன்ரனிதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அங்கிருந்து ஜனாதிபதி குழுவினர் நேரடியாக யாழ். பொது நூலகத்திற்குச் சென்றனர். அங்கு பொதுநூலகத்தின் தற்போதைய நிலையை ஜனாதிபதி பார்வையிட்டார். அதன் பின்னர் அங்கிருந்து யாழ்.துரையப்பா விளையாட்டரங்குக்கு ஜனாதிபதி சென்றார். அங்கு ஜனாதிபதியின் வருகையை எதிர்பார்த்து மக்கள் கூடியிருந்தனர். அங்கு அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் ஜனாதிபதியின் குழுவினர் அமர்ந்திருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதலில் சிறிது நேரம் சிங்களத்தில் உரையாற்றினார். பின்னர் தமிழிலும் உரையாற்றினார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, ஐ.தே.கவின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் தற்போதைய ஆளும் கட்சி உறுப்பினருமான எஸ்.பி. திஸாநாயக்க, யாழ். மாநகரசபை உறுப்பினர் மௌலவி சுபியான் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இந்தக் கூட்டத்துடன் ஜனாதிபதியின் யாழ். வருகைக்கான நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன. யாழ். மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் உட்படப் பல்வேறு தரப்புகளை ஜனாதிபதி சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும் பின்னர் அந்தச் சந்திப்புகள் எதுவும் நடைபெறவில்லை.

துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழில் உரையாற்றுகையில் ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் அகதிகள் யுகம் இனி மேல் இல்லை. தமிழ் மக்கள் எந்த நேரத்திலும் எங்கும் போய் வரலாம். எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இனி அவர்களுக்கு இருக்காது.

வன்னியில் மூன்று லட்சம் மக்கள் அகதிகளாக்கப்பட்டார்கள். தற்போது அவர்களை நாம் மீளக் குடியமர்த்த ஆரம்பித்து அந்தப் பணிகள் சுமுகமாக நடைபெற்று வருகின்றன.

விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்யக்கூடிய சூழ்நிலை இப்போது யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. பிள்ளைகளின் எதிர்காலம் தான் இங்குள்ள பெற்றோருக்கு முக்கியம். அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பது எங்கள் பொறுப்பு. அதற்காக வடபகுதி மாணவர்களின் கல்வித்துறையில் நாம் அதிக கவனம் செலுத்துகின்றோம். விவசாயிகளுக்குத் தேவையான நீர்ப்பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்காக ஆறு ஒன்றை இங்கே திருப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் முன்னேற்றப்படவுள்ளன. யாழ். பல்கலைக்கழகம் அபிவிருத்தி செய்யப்படும். தமிழ் மக்களாகிய நீங்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழல் இப்போது ஏற்பட்டுள்ளது. கோவில், பள்ளிவாசல் ஆகியவற்றுக்குத் தடையின்றிச் செல்ல முடிகிறது. கடலில் சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபட முடிகின்றது. வயலில் விவசாயம் செய்ய முடிகின்றது.

வவுனியா நகர சபை, யாழ். மாநகர சபை ஆகியவற்றுக்கான தேர்தலை நான் நடத்தினேன். அடுத்து வட மாகாண சபைத் தேர்தலும், உள்ளூராட்சித் தேர்தலும் விரைவில் நடைபெறவுள்ளன. இடம்பெயர்ந்த மக்கள் இப்போது தமது சொந்த இடங்களில் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். இனி அகதிகள் யுகம் இலங்கையில் இல்லை. அன்று சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்கள் ஒன்றாக ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். அந்த நிலை இப்போது ஏற்பட்டு வருகின்றது.

யாழ்தேவி ரயிலில் நான் பலமுறை பயணம் செய்துள்ளேன். யாழ்தேவி ரயிலை யாழ்ப்பாண மக்கள் பார்க்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. ஏ - 9 வீதியூடாக இப்போது சுதந்திரமான போக்குவரத்து இடம்பெறுகின்றது. அது வடபகுதி மக்களின் சொர்க்கவாசல்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகமாக யாழ். பொது நூலகம் திகழ்ந்தது. அதனை ஐக்கிய தேசியக் கட்சியினர்தான் எரித்தார்கள். தமிழ்ச் சந்ததிக்கு அவர்கள் செய்த மிகப் பெரிய அநியாயம் இது.

தமிழ்மக்களுக்குக் கௌரவமான, நியாயமான அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்படும். மேல்சபை ஒன்று உருவாக்கப்படும். அதில் மாகாணசபை உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள். தென் பகுதி மக்களுக்குத் தங்கம் என்றால் வட பகுதி மக்களுக்கு அது தகரமாக இருக்கமுடியாது.

கல்வி, விவசாயம், மீன்பிடித்துறைகளில் துரித அபிவிருத்தி மேற்கொள்ளப்படும். யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஆரம்பிக்கப்படும். ஆங்கில மொழி மூலம் கட்டாயமாக்கப்படும்.

விளையாட்டுத்துறையில் அபிவிருத்தி ஏற்படுத்தப்படும். தமிழ் வீரர்களும் சர்வதேச ரீதியில் புகழ்பெற வசதிகள் ஏற்படுத்தப்படும். எதிர்வீரசிங்கம் போன்று பல திறமையான வீரர்கள் எதிர்காலத்தில் உருவாகுவார்கள். இலங்கை வலைப்பந்தாட்டத் தேசிய அணியில் இடம்பெற்றுள்ள மிக உயரமான தமிழ் வீராங்கனை தர்சினி சிவலிங்கம். சர்வதேச விளையாட்டரங்கு ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும்.

சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணாச்சலம் போன்ற ஜனநாயக அரசியல் தலைவர்கள் உருவாக வேண்டும்.

வெற்றியின் சின்னம் வெற்றிலைச் சின்னம் - என்றார் அவர்.

(சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாக விகாரை சென்று திரும்பிய வேளை ஜனாதிபதி ஆசிரியர்களுடன் பேச்சு

வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று ஆரியகுளம் சந்தி உயர் கல்வி நிலையத்தின் முன்னால் ஒன்று கூடிய உதவியாசிரியர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்து உரையாடியுள்ளார்.

நாகவிகாரையில் வழிபாடு முடித்துக் கொண்டு திரும்பிய ஜனாதிபதி வழியில் வாகனத்திலிருந்து இறங்கி ஆசிரியர்க ளைச் சந்தித்ததுடன் ஐக்கிய ஆசிரியர் சங்கத் தலைவரிடம் குறை நிறைகளைக் கேட்டறிந்தார்.

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான மனுவை தனக்குக் கிடைக்குமாறு அனுப்பும்படி அப்போது ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை, நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதியின் ஆலோசகரைச் சந்தித்த ஆசிரியர் சங்கத்தலைவர் ஜனாதிபதிக்கான மனுவை கொடுத்ததுடன் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ஆலோசகர் தம்மை மீண்டும் வரும் 14ஆம் திகதி சந்திக் கும்படியும் அப்போது உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இதனிடையே வடமாகாண ஐக்கிய ஆசிரியர் சங்கத்தின் விசேட குழுவினர் நாளை மறுதினம் வன்னிப் பாடசாலைகளிற்குச் சென்று தற்காலிக இணைப்பு ஆசிரியர்கள் எதிர்நோக்கக்கூடிய பிரச் சினைகள் தொடர்பாக ஆராய உள்ளதாக வும் ஐக்கிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் சி.ஞானகரன் தமது செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-10)

## 2500 ரூபா சம்பள உயர்வு; ஜனாதிபதி அறிவிப்பு

அடுத்த அரசு, செலவுத்திட்டத்தில் இருந்து அனைத்து அரச ஊழியர்களுக்கும் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா சம்பள உயர்வு வழங்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர் மானித் துள்ளார் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படையினர், பொலிஸார் உள்ளிட்ட அனைத்து அரச ஊழியர்களுக்கும் இந்த சம்பள உயர்வு உரித்தாகும் என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்கும் மேலதிகமாக இந்த சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அடுத்த வரவு செல்வுத்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொடுக்கப்படவுள்ள இந்த சம்பள உயர்வுக்கான நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்திருக்கின்றது. (சி)

# மஹிந்த வருவார் எனக் காத்திருந்து திரும்பிச் சென்ற வலி.வடக்கு மக்கள்

யாழ்ப்பாணம், ஜன 11

வலி.வடக்கில் மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகை தருவார் என நம்பி வலி.வடக்கு பிரதேச செயலகம் முன்பாக கூடியிருந்த பெரும் எண்ணிக்கையானவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகை தந்து மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பார் எனத் தெரிவிக் கப்பட்ட தகவலை அடுத்து பெரும் எண் ணிக்கையானோர் தெல்லிப்பழையில் உள்ள வலி.வடக்கு பிரதேச செயலகம் முன்பாக நேற்றுக்காலை கூடினர்.

மாலை வரை காத்திருந்த அவர்கள் ஜனாதிபதி வராததை அடுத்து ஏமாற்றத்துடன் கலைந்து சென்றனர்.

(ஒ-1-120)

# சிறைக் கைதிகள் 8 பேர் வைத்தியசாலைகளில் அனுமதி; அங்கும் தொடர்கிறது உண்ணாநிலைப் போராட்டம்

யாழ்பாணம், ஜன.11

யாழ். சிறைச்சாலையில் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளில் நேற்று வரை 8 பேர் உடல்நலம் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் நால்வர் உடல்நிலை பாதிக்கப்பட்டு ஆஸ்பத் திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

சின்னத்தம்பி மோகன் (வயது 24), கணேசமூர்த்தி ஜெகரூபன் (வயது 24), புவனேந்திரன் சதீஸ்வரன் (வயது 32), ராஜகுலசிங்கம் ஜெயகரன்(வயது 27) ஆகியோரே அந்த நால்வரும்ஆவர்.

இதேவேளை, புதிய மகஸின் சிறைச்சாலையில் உண்ணா விரதம் இருக்கும் நான்கு பேர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரசையா இராசு (வயது44 - நுவரெலியா), கணேசமூர்த்தி விஸ்ணுகரன் (வயது 41 - மட்டக்களப்பு), சுப்பையா ஜெயசங்கர் (வயது 31 - வவுனியா), வீரகுமார் ராகுலன் (வயது 32 - பதுளை) ஆகியோரே உடல் நலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடல் நலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட இவர்கள் அங்கும் தமது உண்ணா நிலைப் போராட்டத்தை தொடர்வதாக கைதிகளில் ஒருவர் உதயனுக் குத் தெரிவித்தார். (ஒ-6)




CAT, ACCA

To your future in Finance & Accounting

எமது புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் கற்கைநெறியில் ஆரம்பப்பதிவு (IR) மேற்கொள்வதற்கான திகதி 13.01.2010 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாணவர்களுடன் சாவகச்சேரி, பருத்தித்துறை மாணவர்களின் நலன் கருதி பதிவு நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றாத மாணவர்கள் Direct entry Ronte வகையில் அனுமதிக்கப்படவுள்ளனர்.

நிதி, கணக்கியல், முகாமைக் கற்கைகளின் சர்வதேச அங்கீகாரம்
CAT, ACCA
இது உங்களின் எதிர்காலத்தின் அங்கீகாரம்

உடன் தொடர்புகளுக்கு
Department of Business Studies
JAFFNA TECHNICAL INSTITUTE (JTI)
இல-46,மணிக்கூட்டுவீதி,யாழ்ப்பாணம்
( Beacon கல்வி நிலையம் அருகாமை)யாழ்ப்பாணம்.
T.P 0215670345 /0777112939/
e-mail: Jtiedu@g mail.com


## சிரம வாசனா சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜன. 11

தேசிய லொத்தர் சபையின் சிரம வாசன 211ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "N" என்ற ஆங்கில எழுத்தும் 10, 34, 40, 45 ஆகிய இலக்கங்களும் வெற்றிக்குரியனவாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப் படவில்லை. நான்கு இலக்கங்களையும் சரியாக கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக பத்து லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்கள் சரியான சீட்டை வைத்திருக்கும் 170பேருக்கு இரண்டாம் பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

இரண்டு இலக்கங்கள் சரியான சீட்டை வைத்திருக்கும் 6,345பேருக்கு 3ஆம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கம் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் 68,953 பேருக்கு நான்காம் பரிசாக தலா இருபது ரூபா கிடைக்கும் (அ-10)

## ஜனஜய சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜன 11

தேசிய லொத்தர் சபையின் ஜனஜய 91ஆம் இலக்க ரூபவாஹினி தொலைக்காட்சி மூலமான நேற்றைய சீட்டிழுப்பில் விசேட இலக்கமாக 08உம் வெற்றி இலக்கங்களாக 11, 18, 28, 46 ஆகியனவும் தெரிவாகியுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு, இரண்டாம், மூன்றாம் பரிசுகளும் வெல்லப்படவில்லை.

மூன்று வெற்றி இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 39 பேருக்கு நான்காம் பரிசாக தலா ஆயிரத்து ஐநூறு ரூபா கிடைக்கும்.

இரண்டு வெற்றி இலக்கங்களை சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 2925 பேருக்கு 5ஆம் பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒருவெற்றிஇலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை உடைய 46,361 பேருக்கு 6ஆவது பரிசாக தலா இருபது ரூபா கிடைக்கும். (அ-10)

## ஓராண்டு நீங்கா நினைவுகள்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையென்னும் பெயரினைப் பொறித்து தனித்துவமான பாடசாலையாக உருவாக்கி 01.01.1973 - 15.06.1985 வரை அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்று லண்டனில் வசித்து அமரத்துவம் எய்திய பாடசாலையின் அன்னையின் கோமகன்

அமரர் **செல்லப்பா கனகரட்ணம்**

அவர்களின் நீங்கா நினைவுகளில் நிதம் தொழுகின்றோம்.

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 06 - 08 - 1925 | 11 - 01 - 2009 |



எண்ணிய முயற்சியினால் எழிலா யாழிந்து
ஆரம்பப் பள்ளியென்னும் நாமம் சூட்டி
கண்ணரிய சொத்தாகக் கருணை நெஞ்சில்
கனிந்தொழுக தனித்துவத்தின் வித்தாய்
மண் மகிழ வோர் பள்ளி உருவாக்கியதன் நிழலில்
மாசற்ற அதிபரெனும் அணைப்பில் பன்னீராண்டு
தன் மகிமை பேசவைத்த கனகரட்ணம் மையா
தவிக்கின்றோம் ஓராண்டு நிறைவின் பின்னும்
ஓம் சாந்தி !சாந்தி !சாந்தி !

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை

அதிபர்,ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம்

(93716)

## கண்ணீர் அஞ்சலி



காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தைச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது பாசமிகு மாமி

திருமதி
**திருநாவுக்கரசு இராசபூபதி**


அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு எமது இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: மருமக்கள்
ஸ்ரீ சிவராம் ரேடர்ஸ் (SST)
322C,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(93721)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 - 10 - 1931 | 03 - 01 - 2008 |



**அமரர் சின்னத்துரை கந்தசாமி**

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், கல்வித்திணைக்களம்,யாழ்ப்பாணம்)

திதி - ஏகாதசி

எம் குடும்பத்தின் குலவிளக்கே
அன்போடும் பண்போடும் எம்மை
வாழ வைத்த தெய்வமே
எம்மைத் தவிக்கவிட்டு நொடிப் பொழுதில்
இறைவன் தன் பதம் சேர்ந்தீரோ
உங்களை விட்டுப்பிரிந்து ஈராண்டு ஆனதே
ஆண்டுகள் பல சென்றாலும் ஒளிவிளக்காக
எம் மனதில் நிலைத்திடும் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

சிவன் வீதி,
ஆவரங்கால்.

மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(93714)





சொகுசு பஸ் கட்டணம் குறைப்பு

யாழ்.கொழும்பு சொகுசு பஸ் கட்டணம் 1350 ரூபா.
எனவே ஆசனப் பதிவுகளை
முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.

வசந்தமான பயணத்துக்கு
வடக்கின் நாதம்

யாழ்.போன் சொப்

இல.09,நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7125, 0212223817



Dialog GSM
TheFuture Today




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.- வவுனியாவிலிருந்து இன்று முதல் கிளிநொச்சிக்குத் தனியார் பஸ் சேவை

கொழும்பு, ஜன. 11

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான தனியார் பஸ்சேவைகள் இன்று காலை முதல் ஆரம்பிக்கப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட உதவி திட்டப் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு பஸ் சேவைகளும், வவுனியாவிலிருந்து மூன்று பஸ் சேவைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6.45 மணிக்கு ஆரம்பித்து கிளிநொச்சி வரை தொடர்ந்து இரண்டு சேவைகள் இடம்பெறவுள்ளன. அவை மீண்டும் 4.30 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றவமையும் வந்தடையும். வவுனியா வுடனான சேவை வவுனியாவிலிருந்து காலை 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு கிளி நொச்சி பூநகரி வரையான ஒரு சேவையும், வவுனியாவிலிருந்து கிளிநொச்சியூடாக அக்கராயன், ஜெயபுரம்,முழங்காவில் ஊடாக மூன்று சேவைகளும் இடம்பெறவுள்ளன.

பூநகரி பிரதேசத்தில் மீள் குடியேற்றப்பட்டுள்ள 90 வீதமான மக்களின் போக்குவரத்து மற்றும் வெளித்தொடர்புகளை விருத்தி செய்யும் நடவடிக்கையை இலகுபடுத்தும் நோக்கத்திலேயே இந்தப் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநரின் அனுமதியோடு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பஸ் சேவையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தனியார் பஸ் உரிமையாளர் இணைந்து சேவையாற்றவுள்ளனர்.

இதேவேளை பஸ் சேவைகளை ஆரம்பிக்க விண்ணப்பித்துள்ள ஏனையவர்கள் மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொண்டு சேவையில் இணைந்த கொள்ள முடியும்- என்றார். (அ-சி)

# உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் நிலைமை மோசமான கட்டத்தை எட்டுகின்றது

தமது விடுதலையைக் கோரி இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் உண்ணா விரதமிருந்துவரும் அரசியல் கைதிகளின் நிலைமை, உண்ணாவிரதம் நேற்று ஆறா வது நாளைக் கடந்த நிலையில் மோசமான கட்டத்தை எட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக 'அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு' நேற்று வெளியிட்ட அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் 48 அரசியல் கைதிகளும், வெலிக்கடைச் சிறைச்சாலையில் 5 பேரும், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 380 பேரும் உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

இவர்களில் 11 பேர் 60 வயதுக்கது மேற் பட்டவர்கள். இதில் சிவகுரு சிவலிங்கம் (மன்னார்), கார்த்திகேசு சிவலிங்கம் வயது 69 (முன்னாள் அரச உத்தியோகத்தர்) ஆகி யோர் மயக்கமுற்ற நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இரண்டு பெண்கள் உட்பட 26 பேரும், மட்டக்களப்பில் 16 பேரும், திருகோணமலையில் 51 பேரும், போகம்பறை சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதுகளும் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

அநுராதபுரச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்துவரும் கைதிகளில் 8 பேரை சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் கெனத் பெர்ணான்டோ வலுக்கட்டாயமாக மருத்து வமனையில் சேர்த்துள்ளார்.

# தமிழ் மக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**இப்போது நிம்மதியாக வாழக்கூடிய சூழஉருவாகியுள்ளது**

பாடசாலைகள் முன்னேற்றப்படவுள்ளன. யாழ்.பல்கலைக்கழகம் அபிவிருத்தி செய்யப்படும். தமிழ் மக்களாகிய நீங்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழல் இப்போது ஏற்பட்டுள்ளது. கோவில், பள்ளிவாசல் ஆகியவற்றுக்குத் தடையின்றிச் செல்ல முடிகிறது. கடலில் சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபடமுடிகின்றது. வயலில் விவசாயம் செய்ய முடிகின்றது.

வவுனியா நகரசபை, யாழ்.மாநகரசபை ஆகியவற்றுக்கான தேர்தல்களை நான் நடத்தினேன். அடுத்து வடமாகாண சபைத் தேர்தலும் உள்ளூராட்சித் தேர்தலும் விரைவில் நடைபெறவுள்ளன. இடம்பெயர்ந்த மக்கள் இப்போது தமது சொந்த இடங்களில் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றார்கள். இனி அகதிகள் யுகம் இலங்கையில் இல்லை. அன்று சிங்கள, முஸ்லிம்,தமிழ் மக்கள் ஒன்றாகி ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். அந்த நிலை இப்போது மீண்டும் ஏற்பட்டு வரு கிறது.

யாழ்.தேவி ரயிலில் நான் பலமுறை பயணம் செய்துள்ளேன். யாழ்.தேவி ரயிலை யாழ்ப்பாண மக்கள் பார்க்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை. ஏ-9 வீதியூடாக இப்போது சுதந்திரமான போக்குவரத்து இடம்பெறுகின்றது.அது வட பகுதி மக்களின் சொர்க்கவாசல். ஆசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாக யாழ். பொதுநூலகம் திகழ்ந்தது. அதனை ஐக்கிய தேசியக் கட்சியினர்தான் எரித்தார்கள். தமிழ்சந்ததிக்கு அவர்கள் செய்த மிகப் பெரிய அநியாயம் இது.

**நியாயமான, கௌரவமான அரசியல்தீர்வு**

தமிழ் மக்களுக்கு கௌரவமான- நியாயமான அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்படும். மேல்சபை ஒன்று உருவாக்கப்படும். அதில் மாகாண சபை உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள். தென்பகுதி மக்களுக்குத் தங்கம் என்றால் வடபகுதி மக்களுக்கு அது தகரமாக இருக்கமு டியாது.

கல்வி, விவசாய, மீன்பிடித் துறைகளில் துரித அபிவிருத்தி மேற்கொள்ளப்படும். யாழ்.பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஆரம்பிக்கப்படும். ஆங்கில மொழி மூலம் கட்டாயமாக்கப்படும்.

விளையாட்டுத் துறை அபிவிருத்தி ஏற்படுத்தப்படும். தமிழ்வீரர்களும் சர்வதேச ரீதியில் புகழ்பெற வசதிகள் ஏற்படுத்தப்படும். எதிர்வீரசிங்கம் போன்று பல திறமையான வீரர்கள் எதிர்காலத்தில் இங்கு உருவாகுவார்கள். இலங்கை வலைப்பந்தாட்டத் தேசிய அணியில் இடம்பெற்றுள்ள மிக உயரமான தமிழ் வீராங்கனை தர்சினி சிவலிங்கம். சர்வதேச விளையாட்டரங்கு ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும். சேர்.பொன். இராமநாதன், சேர்.பொன் அருணாச்சலம் போன்ற ஜனநாயக அரசியல் தலைவர்கள் உருவாக வேண்டும்.

வெற்றியின் சின்னம் வெற்றி லைச் சின்னம்- என்று கூறினார்.

IBM
அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகவும் நல்ல நிலையில் உள்ள
IBM ThinkPad Laptops
கணனிகள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.(Original - IBM)
Intel Pentium - 4 (Mobile Tech)
512 MB Ram 40 GB HD
CD RW / DVD Rom
தொழில் புரிவோர், பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மிகவும் உகந்தது.
விபரங்களுக்கு :- UNI TECHNOLOGY
ICT Education Trainers - Manipay
Mobile - 0777 - 110862
(மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)

# தமிழருக்கான தீர்வை வழங்குவதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஒத்துழைக்காது

**நேற்று யாழ்.வந்திருந்த எஸ்.பி.திஸாநாயக்கா**

யாழ்ப்பாணம், ஜன.11

தமிழ்மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கமாட்டாது. ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜே.வி.பி யைக் கட்டிக்கொண்டு கூத்தாடுகின்றார்கள்.

இவ்வாறு குறிப்பிட்டார் ஐ.தே.கட்சி யின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் தற்போதைய ஆளுங்கட்சி உறுப்பினருமான எஸ்.பி.திஸாநாயக்கா.

நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற ஜனாதிபதியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு;

ரணில் விக்கிரமசிங்க தனது கைகளில் அதிகாரம் இருக்கவேண்டும் என்பதற்காக தனதுகொள்கைகளில் இருந்து அடிக்கடி மாறுபவர். சிறுபான்மை மக்களுக்கான தீர்வு ஒன்றை வழங்குவதற்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஒத்துழைக்காது. இது சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமான நாடு என்று எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா அண்மையில் தெரிவித்திருந்தார். இது சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர் அனைவருக்கும் உரிய நாடு என்று மஹிந்த ராஜபக்ஷ சொல்கிறார். எனவே நாங்கள் எப்படி சரத் பொன்சேகாவுடன் ஒன்றுசேர முடியும்? அவர் மிகவும் கொடூரமானவர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் மனிதர். அவர் ஒரு விவசாயியின் மகன். எனவே அனைவரும் அவரை மீண்டும் ஜனாதிபதியாக்க வேண்டும்.

34 வருடங்களுக்குப் பின்னர் உங்களுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளது. அதைத் தந்தது யார்? மஹிந்த ராஜபக்ஷ அனைவர் மீதும் அன்பு செலுத்துபவர். எனவே அவருக்கு மீண்டும் வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்குவோம் - என்றார்.

# ஈழத்தமிழருக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசப் பங்களிப்பு குறித்து இங்கு கருத்துக்கூறுவது பொருத்தம் எனக் கருதுகின்றேன். 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பின் - இனப்படு கொலை நடைபெற்றபின் சர்வதேச சமூகம் எமது விடயத்தில் மிகவும் அக்கறை காட்ட ஆரம்பித்தது. இந்தியா கூடுதல் பங்களிப்புச் செய்தது.

துரதிர்ஷ்டவசமாக ஒரு காலகட்டத் தில் பல சம்பவங்கள் இடம்பெற்ற பின்னர் இடம்பெற்ற விடயங்கள் குறித்துப் பேச வேண்டிய அவசியமில்லை. இந்தியா ஒதுங்கிவிட்டது. அவர்கள் ஒதுங்கியதற் குப் பல காரணங்கள் இருக்கலாம். ஏனைய நாடுகளைப் பொறுத்தமட்டில் ஓர ளவு அக்கறை காட்டி வந்தார்கள். அவர்க ளின் பங்களிப்பு பரிபூரணமானதாக இருந் ததாகக் கூறமுடியாது. பல நாடுகளின் நிலைப்பாடு, இந்தியா என்ன செய்கின் றதோ அதன் பின்னால் நிற்போம் என்பதா கும். பல நாடுகளின் ராஜதந்திரிகள், வெளிநாட்டுத் தலைவர்கள் இங்கு வரும் போது அவர்கள் கூறுவது என்னவென்றால் இந்தியா பங்கெடுக்க வேண்டும்; நாங்கள் உதவியாக இருப்போம் என்ப தாகும்.

இதை இந்தியாவிற்கு நாங்கள் பலதடவைகள் எடுத்துக்கூறி வந்துள்ளோம். தற்போது இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றத்தைக்காண்கிறோம். தமிழர் பிரச்சினை தொடர்பாக தங்களின் பங்க ளிப்பைச் செய்து நியாயமான அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்து அவர்கள் மத்தியில் வளர்ந்து வரு வதை அவதானிக்கின்றோம் நானும் எனது நண்பர்கள் சிலரும் எதிர்வரும் இரண்டு மூன்று நாள்களுக்குள் புதுடில் லிக்குச் செல்லவிருக்கின்றோம். எமது மக் கள் சார்பாக இந்தியாவுக்கு ஒரு விநயமான வேண்டுகோளை விடுக்க விரும்புகின் றோம்.

தயவு செய்து எங்களுக்கு உதவுங்கள். எமது மக்களின் நிம்மதியான வாழ் வுக்கு-அவர்களுக்கு நல்லதொரு அரசி யல்தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க உதவுங்கள் என்று எமது மக்கள் சார்பாக பகிரங்கமாகக் கேட்டுக் கொள்ள விரும் புகின்றேன். (அ-1)

# ஜனாதிபதியுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் ஜனாதிபதியுடன்

நீண்ட நேரமாக உரையாடிக்கொண் டிருந்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றிய பின்னர் அவருக்கு கைலாகு கொடுத்த சித்தார்த்தன் அவரது முதுகில்தட்டி வாழ்த்துத் தெரிவித்தார்.

# தேர்தல் வன்முறைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறையை நேருக்குநேர் எதிர்கொள்வதற்குத் தயாராகவுள்ளனர் போலத் தென்படுகின்றது. இது ஆபத்தான சூழ்நிலை என நீதியான, சுதந்திரமான தேர்தலுக்கான பிரசார அமைப்பு (கபே) தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறுகின்ற நடவடிக்கைகள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் மக்கள் தேர்தல் நடவடிக்கைகளில் இருந்து விலகிச் செல்லக்கூடிய வாய்ப்பு அதிகரித்து வருவதாக 'கபே' அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகள் அதிகரித்து வருவதானது பாரதூரமான நிலை எனவும் இதனால் பாரிய பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது எனவும் 'கபே' அமைப்பின் ஊடக இணைப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரி வித்துள்ளார்.சுதந்திரமாக தேர்தல் நடவடிக்கைகளை முன்[illegible]டுக்கும்போ[illegible] சுதந்திரமானதும், நீதியானதுமான ஒரு தேர்தலை நடத்த முடியும் என அவர் மேலும் தெவித்துள்ளார். (அ-சி)

ஈஸ்வரன் போக்குவரத்து சேவையின்
அனுசரணையுடன்
அதி சொகுசு பஸ் சேவை
இன்று (11.01.2010) திங்கட்கிழமை கொழும்பில் இருந்து ஆரம்பமாகின்றது. தினமும் 29 ஆசனங்களே பதிவுசெய்யப்படும்
ஆசனப் பதிவுகள்:
யாழ்ப்பாணத்தில்..
★115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
★ தொ.பே.: 222 2813, 4317
★வைரணி மிசன்
145, நவீன சந்தை,
தொ.பே.இல: 021 222 2868
★மருதம் தொலைத்தொடர்பகம்
நெல்லியடி, 2263210
கொழும்பில்...
★ ஈஸ்வரன் ரான்ஸ்போட்
201பி, டாம் வீதி, கொழும்பு. 2433889
★சிற்றி கொம்மினிக்கேசன்
346,காலி வீதி, கொழும்பு - 6. 2361711
★மைக் கொம்மினிக்கேசன்
487, காலிவீதி, கொழும்பு - 6. 236 2140
★சன்றைஸ் புட் சிற்றி
6, 37 ஆவது லேன்
தொ.பே. 0117207046

O/L எடுத்த மாணவர்களுக்கான
கணினி பயிற்சி நெறி
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு உங்கள் கணினிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி
♦Chip & Card level Trouble shooting ♦Assembling ♦Variours Mother Board Handling ♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing ♦Printer, Scanner & Com device management ♦Software Installation ♦Configuring Internet Interfacing & Trouble shooting ♦Networking & Etc...
பயிற்சிநெறி முடிவில் கம்பியூட்டர் ஹார்ட் வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்
ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தப்படும்
விபரங்களுக்கு நேரில் பயிற்சி ஆரம்பம் 13,16.01.2010
Softview Computer College
55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170

மங்களம் பொங்கிடும் தைத் திருநாளில்.......
மனதிற்குப் பிடித்ததொன்றை தெரிவு செய்வதற்காக
MUSIC WORLD வழங்கும் MEGA OFFER
ஜனவரி 10 முதல் ஜனவரி 15 வரை
VISA Credit Cards & Debit Cards are acceptable
Intel 1.6 Ghz ATOM Processor, Intel 1.6 Ghz ATOM Mother Board, 160 Gb SATA Hard Disk, 1 Gb DDR II 800 RAM, ATX Casing, AOC 16" LCD Monitor, DVD Writer, Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS 37,500/=
Intel 2.40 Ghz Dual Core Processor, Asus G31 Mother Board, 250 Gb SATA Hard Disk, 1 Gb DDR II 800 RAM, ATX Casing, AOC 16" LCD Monitor, DVD Writer, Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS 45,000/=
Intel 2.60 Ghz Dual Core Processor, Asus G31/Gigabyte G31Mother Board, 320 Gb SATA Hard Disk, 1 Gb DDR II 800 RAM, ATX Casing, LG/Prolink 19" LCD Monitor, DVD Writer, Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS 48,000/=
Intel 2.60 Ghz Dual Core Processor, Asus 41 / Intel 41 Mother Board, 320 Gb SATA Hard Disk, 2 Gb DDR II 800 RAM, ATX Casing, Viewsonic 19" LCD Monitor, DVD Writer, Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS 55,000/=
Processors / LCD Monitors / RAM DDR I / RAM DDR II / RAM DDR III / ADSL Routers / Hard Disks / Mother Boards / Printers / Pen Drives / Broadband Routers & Network Accessories
MUSIC WORLD & COMPUTERS
141B,Palaly Road, Post Box Junction, Thirunelvely, Jaffna.
musicworld@sltnet.lk / musiccom27@yahoo.com - 021 222 6554

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org